# நால்வர் நெறி




தி. ப. 4589 - 2

250.6
சைவ
SL/PR

கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம், கொழும்பு.

TAILORS OF DISTINCTION!

COME TO

# SWANK

FOR THE SWANKIEST

of

SUITS SLACKS & SHIRTS

Be Swankey In Clothes By Swank

SWANK

191, GALLE ROAD, COLOMBO-3



சிறப்பு மலர் 3

# நால்வர் நெறி

கௌரவ ஆசிரியர்

சைவ இளவல் சி. திருநாவுக்கரசு

ஆசிரியர்கள்

க. பாலசுப்பிரமணியம்

வ. இ. இராமநாதன்

பதினைந்தாவது ஆண்டு நிறைவு விழா

# NAALVAR NERI

HONY. EDITOR:
SAIVA ELAVAL S. THIRUNAVUKARASU

EDITORS:
K. BALASUBRAMANIAM
V. R. RAMANATHAN

**FIFTEENTH ANNIVERSARY CELEBRATION**


கொழும்பு, கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்கம்
131, கியூ வீதி, கொழும்பு 2.

*Colombo, Kompaniththeru Saiva Munnetta Sangam*
131, KEW ROAD, COLOMBO 2.

1968

''திருவுங்கல்வியும் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்''

*Space Donated*

*by*

# ANANDA STORES

**105, BANKSHALL STREET,**

**COLOMBO - 11.**

T'Phone: 27643

Cable: "VINAYAGAR"

"எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ
சிந்தாகுல மானவை தீர்த்தெனையாள்
கந்தா கதிர் வேலவனே உமையாள்
மைந்தா குமரா மறை நாயகனே!"

WITH BEST WISHES

FROM

# OPATHA & CO.,

13 & 15, ST. JOHNS ROAD,

COLOMBO.

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"

*Specialist for*

WEDDING SAREES AND

SILK VETTI SETS

VISIT TO

## M. VETHANAYAGAM

49, SEA STREET,
COLOMBO 11

**T'Phone; 26241**

"அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையர்
என்பும் உரியர் பிறர்க்கு"

WITH BEST COMPLIMENTS

FROM

## H. A. AHMED & CO.,

Importers & Wholesale Dealers In Textiles

**35, SEA STREET, COLOMBO 11.**

T'Grams: **"Fastcolour"** T'Phone: **20330**

*HEAD OFFICE:*

**BOMBAY STORES**

**DICKOYA.**

''நத்தார் படைஞானன் பசு ஏறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானைஉரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார் எலும் பணிவான் திருக் கேதீச்சரத்தானே''

உங்கள் கட்டிடம், வீட்டுத் தளபாடங்கள் மற்றும்

எல்லாவித தேவைகளுக்கும் ஏற்ற

தேக்க மரங்களுக்கு

மொறட்டுவ டீக் றேடர்ஸ் லிமிடெட்

ஸ்தாபனத்தாருடன்

தொடர்பு கொள்ளுங்கள்

மொறட்டுவ டீக் றேடர்ஸ் லிமிடெட்

649, காலி வீதி, அங்குலான,
மொறட்டுவ.

தொலை பேசி:
அலுவலகம்: 34318

தொலை பேசி:
ஸ்டோர்ஸ்: 72441

''தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி''

# உங்கள் வீட்டுப் பாவனைக்கு நீங்கள்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD
ONE-DOLLAR
DOLLAR BRAND

# டொலர்

இலச்சினை பொறித்த

## அலுமினியம், எவர்சில்வர், பித்தளை

பாத்திரங்களைத் தெரிவுசெய்தால்

## நீடித்த உழைப்பிற்கும் உறுதிக்கும்

## உத்தரவாதமுள்ளவற்றை வாங்குகிறீர்களென்று பொருள்

ஈடு இணையற்ற எம்நாட்டுத் தொழிலுக்கு துணை செய்து
அதை வளம்படுத்த முன்வாரீர்!!

# டொலர் கார்ப்பொரேஷன்

## 14, டாம் வீதி, கொழும்பு-12.

தொலைபேசி:
31910

தொழில் நிலையம்:
**மாவிட்டபுரம்**

செங்கே முடுத்த சிவனடிவேலும் திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிருதோளும் பதுமலர்
கொங்கேய் தரளஞ் சொரியுஞ் செங்கோடை குமரனென
எங்கே நினைப்பினு மங்கேமுன் வந்தெதிர்நிற்பனே.




**வியாபாரிகளே! பாவனையாளர்களே!!**

**பாவித்து பயன் பெற்றுவிட்டீர்களா?**

**கொள்முதல் செய்து தகுந்தலாபம் பெற்றீர்களா?**

# முத்தூஸ் போட்டோ சாரங்கள்

பாட்டாளி முதல் பணக்காரர்வரை பாவிக்கும் பாங்கான

**சாரங்கள்**

உற்பத்தியாளர்களும் விநியோகஸ்தர்களும்

# க. நாகமுத்து அன் சன்ஸ்

*(அனுமதி பெற்ற அடகு நகைக்கரரும், தரகரும்)*

111, இரண்டாம் குறுக்குத் தெரு,
கொழும்பு - 11.

கிளைகள்: **வவுனியா, குவான்வெல.**

WITH BEST COMPLIMENTS

FROM

SAMUEL SONS & CO LTD

P. O. BOX 46, COLOMBO - 12.

Tele { Phone: 32341 (3 Lines)
Grams: "ECHIRON"

WITH BEST COMPLIMENTS

FROM

ROHINI TRADING CO.,
HARDWARE MERCHANTS

No. 117, MESSENGER STREET,

COLOMBO—12.

T' Phone 28326

T' Grams: "ROHINITRED"

*"பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்*
*பேசுவதும் திருவாயான் மறைபோலும் காணேடி*
*பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை*
*ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ"*

**ரூபா 100,000/- பரிசாக உங்களுக்கு கிடைக்கக் கூடும்!**

# ஏ. கே. கோல்ட்ஹவுஸில்

***ஆபரணங்களை வாங்கினால்!!***

**எமது வாடிக்கையாளர்களுக்கும், எம்மிடம் நகை வாங்குவோர் எல்லோருக்கும் சுவீப் டிக்கட் ஒன்றை இனாமாக வழங்குகின்றோம்.**

இன்றே எம்மிடம் உங்களுக்கு தேவையான சகல நகைகளையும் பெற்று சுவீப்பில் பங்கு கொள்ளுங்கள்!

# ஏ. கே. கோல்ட்ஹவுஸ்

***56—58, செட்டியார் தெரு,***
***கொழும்பு - 11.***

**தொலை பேசி: 25384**



*"பண்ணிடைத் தமிழொப்பாய் பழத்தினிற் சுவையொப்பாய்*
*கண்ணிடை மணியொப்பாய் கடுவிருட் சுடரொப்பாய்*
*மண்ணிடை அடியார்கள் மனத்திடர் வாராமே*
*விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீயன்றே"*

With Best Compliments

From

# INDIRANI JEWELLERY

**THE RENOWNED HOUSE FOR**
**DESIGN JEWELLERIES**

## INDIRANI JEWELLERY

**151, CHURCH STREET, COLOMBO-2.**

''வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்''

*With The Compliments*

*Of*

# N. VAITILINGAM & CO., LTD.

**450, OLD MOOR STREET,**
**COLOMBO - 12.**

*Manufacturers Of:*

**BARBED WIRE & WOOD SCREWS**
**IMPORTERS OF**
**IRON & STEEL, BUILDING MATERIALS.**

## அன்பர்களே! அபிமானிகளே!!

சோம்பலை நீக்கி சுறுசுறுப்பையும், உற்சாகத்தையும், ஊக்கத்தையும் தருவது **M. S. பட்டணம் பொடி**. மேலும் எங்களால் தயார் செய்யப்படும் காரம், மணம், குணம், நிறம் இவையாவும் ஒருங்கே அமையப்பெற்ற **மூக்குப் பொடி** வகைகளும், தொட்டால் கைமணக்கும், சுவைத்தால் வாய் இனிக்கும் **வாசனைப் புகையிலைகளும்**, அறுசுவையும், நறுமணமும் ஒருங்கே அமையப்பெற்ற **பீடா குளிகை, ரோஸ் கொப்பரு, வாசனைப்பாக்கு, சீவல் பாக்கு** வகைகளும், மூளைக்கு வளர்ச்சியையும், கண்ணுக்கு குளிர்ச்சியையும் நறுமணத்தையும் தன்னகத்தே அடக்கியதுமான **சீயாக்காய்ப் பவுடர்களும்** தயாரித்து மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்து வருகின்றோம்.

தயாரிக்குமிடம்:-

**சந்திரா இன்டஸ்ட்ரீஸ்**

118/22, ஆதிருப்பள்ளித் தெரு,
கொழும்பு-13.

விற்பனைசெய்யுமிடம்:-

**தனலெட்சுமி & சரஸ்வதி பொடி ஸ்ரோர்ஸ்**

ஆதமலி கட்டடம்,
2, ஆதிருப்பள்ளித் தெரு, கொழும்பு-13.

''கண்காள் காண்மின்களோ — கடல்
நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசி நின்றாடும் பிரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ''

**CHEAPEST HOUSE FOR QUALITY TEXTILES**
**IN**

LATEST DESIGNS AND ALSO FOR
MANIPURI SAREES

# THE CHEAPSIDE

IMPORTERS, WHOLESALE & RETAIL DEALERS IN TEXTILES

90, 2nd CROSS STREET, COLOMBO-11.
*Telephone:* 22621

*Branches;* Jaffna, Point-Pedro & Kilinochchi.

''நெஞ்சே நீ நினையாய் — நிமிர்
புன்சடை நிர்மலனை
மஞ்சாடும் மலைமங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய்''

WITH BEST COMPLIMENTS

FROM

# ARASAN PRINTERS

30, HYDE PARK CORNER
P. O. BOX 1280
COLOMBO 2

T' PHONE: 26482 T'GRAMS: "ARASPRINT"

''இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே''

With Best Compliments

From

# ELEPHANT BEEDI COMPANY

154, SIR RATNAJOTHI
SARAVANAMUTHU MAWATTE,
COLOMBO-13.

T' PHONE: 31651

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியேர்கோன் கழல்போற்றி
ஆழிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர்வன் தொண்டர் பதம்போற்றி
ஊழிமலிதிரு வாதவூரர்திருத் தாள்போற்றி! போற்றி!!

எங்களுக்கு விளம்பரம் தந்துதவியவர்களை மேன்மைப்படுத்துங்கள்

அவர்கள் உதவி எங்களுக்கு!

உங்கள் உதவி அவர்களுக்கு!!

# கொழும்பு கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம்

உ

# நால்வர் நெறி

''மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலக மெல்லாம்''

## உள்ளுறை


| | | |
|---|---|---|
| வாழ்த்துப்பாமாலை | — | அருட்கவி சீ. வினாசித்தம்பி |
| நாம் போற்றும் நால்வர் நெறி | — | வி. பி. சாமி |
| அன்புக் காணிக்கை | — | ஆசிரியர்கள் |
| ஆசிரியர் குரல் | — | |
| தருமையாதீன ஆசிச் செய்தி | — | ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் |
| ஆதரவாளர் ஆசிச் செய்தி | — | பேராசிரியர் அ. சின்னத்தம்பி |
| வாழ்த்துப்பா | — | திருமுருக கிருபானந்தவாரியார் |
| குருமகா சந்நிதான ஆசிச் செய்தி | — | தவத்திரு குன்றக்குடி அடிகளார் |
| நிர்வாகசபை உறுப்பினர் | – | *1967 — 1968* |
| எங்கள் தலைவர் | | |
| திருவூஞ்சற் பாக்கள் | — | |
| விநாயகப் பிரபாவம் | — | சைவப் புலவர் க. சி. குலரத்தினம் |
| கந்தபுராண சாரம் | — | பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை |
| மூவிரு முகங்கள் போற்றி | — | கி. வா. ஜெகந்நாதன் |
| மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் | — | வித்துவான். பண்டிதர் மு. கந்தையா |
| சேக்கிழார் வகுத்த அப்பர் ஆற்றுப் படை | — | ச. கார்த்திகேசு சுவாமிகள் |
| சுந்தரர் தந்த செந்தமிழ் | — | பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை |
| திருத்தொண்டத் தொகை முன் பணித்த திருவாளன் | — | செ. சின்னத்துரை B.A. |
| மணிவாசக விவேக சிந்தாமணி | — | ஸ்ரீமத் ஸ்ரீரங்கானந்த சுவாமிகள் |
| குறிக்கோள் | — | வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் |
| திருமூலர் கண்ட சமய நெறி | | க. பொன்னையா B.A. (cey) |
| சேக்கிழார் தொண்டு | — | கோ. சுந்தரமூர்த்தி M.A. |
| நல்லைநகர் தந்த நாவலர் | — | திருமதி. கண்மணி ஸ்ரீ ஸ்கந்தராஜா |
| சும்மா கிடைக்குமோ ! | — | தருமையாதீனத் தமிழ்ப் புலவர் சித்தாந்த கலைமணி மகா வித்துவான் சி. அருணை வடிவேலு முதலியார் |
| அன்பிலே விளைந்தது | — | தருமையாதீனத் தமிழ்க் கல்லூரி தமிழ்ப் பேராசிரியை வித்துவான் திருமதி ப. நீலா |

இவ்வாறு இறைவனை இறைஞ்சுவாம் — ம. சி. சிதம்பரப்பிள்ளை
திருவருளால் திக்குலா — கோவை மணி
நால்வர் சமய பாடசாலை — கௌரவ பாடசாலைச் செயலாளர்

## மாணவர் பகுதி

குமரா நீ வருக ! — செல்வி. குலதேவி குமரகுரு
கருணை — செல்வன். இ. ஆனந்தராஜ்
வேண்டுவார் வேண்டும் வரம் ஈவான் — செல்வி. இராஜேஸ்வரி கந்தையா
வள்ளுவனும் வான் மறையும் — செல்வி. முத்துலெட்சுமி இராமசாமி
உள்ளொளி பரப்பும் திருவாசகம் — செல்வன். க. பாலேந்திரன்
ஒழுக்கம் — செல்வி. சுலோச்சனு சுப்பிரமணியம்
தேவி வழிபாடு — செல்வன். ச. சாந்தகுமார்
ஞானப்பால் உண்ட குழந்தை — செல்வி. பாக்கியவதி சோமசுந்தரம்
திருநாவுக்கரசு சுவாமிகள் — செல்வன். ச. வசந்தகுமார்
மாணவ இல்லங்கள் -
திருமுறை—நாவன்மை—கட்டுரைப் போட்டி முடிவுகள் — *1968*
கொழும்பு விவேகானந்த சபை சைவசமயப் பரீட்சை பெறுபேறுகள் — *1967*
மாணவ மன்ற அறிக்கை — மன்றச் செயலாளர்
நால்வர் நூலகம் — கௌரவ நூலகப் பொறுப்பாளர்கள்
பேராதனைப் பல்கலைக்-கழகமும் முருகன் கோவிலும் — முன்னுள் கௌரவ செயலாளர்
திருமுறைப் பயிற்சி வகுப்பு — கௌரவ திருமுறை வகுப்புப் பொறுப்பாளர்
சமயப் பிரச்சார சபை — கௌரவ சமயப் பிரச்சார சபைச் செயலாளர்
நாவலர் தினப் பேச்சுப் போட்டி முடிவுகள் *1967*
பதினைந்தாவது ஆண்டறிக்கை — கௌரவ பொதுநிர்வாகச் செயலாளர்

உ

முருகன் துணை

# வாழ்த்துப் பாமாலை

அளவையூர் சஞ்சீவி அருட்கவி சீ. விநாசித்தம்பி

## வெண்பா

பால்வளர்வெண் ணீற்றுப் பரமன் அருள்விளக்கும்
''நால்வர் நெறி''யை நயந்துதவும் — வேல்வளரும்
தண்கொழும் பனிவீதிச் சைவமுன்னேற் றச்சங்க
வண்கருணை வாழி வளர்ந்து.

## ஆசிரியப்பா

புண்ணிய இலங்கைப் பொற்புயர் கொழும்பில்
பண்ணியல் செறிகொம் பனித்தெரு மேவிய
திருவளர் குஞ்சரி தினைவள்ளி யுடனே
வருசிவ சுப்பிர மணியன் நல்லருள்
முதிரும் சைவ முன்னேற்றச் சங்கப்
பதினை யாண்டுப் பருவக் குமரா
நல்லோ னுதவும் நால்வர் நெறியே !
சொல்லார் சைவச் சுடரொளி விளக்கே !
மாயா வாதமும் உலோகா யதமும்
தீயா யெழுந்து திகழுமிந் நாளில்
மன்றினில் நிற்கும் வள்ளலைப் போற்றி
நன்றுடைப் பேற்றை நாமுற, நன்னெறி
இங்கெமக் குணர்த்திய எந்தைசம் பந்தர்
தங்கிய அப்பர் சால்புயர் சுந்தரர்
குருமணி வாசகர் குலவும் கோயில்
திருவுற விளங்க; சிவபதம் பேணும்
சமயக் கலைகளும் தண்ணார் பஜனையும்
அமையும் நூலக அறிவும் பூசையும்
நீறும் மணியும் நிறையைந் தெழுத்தும்
கூறும் புராணக் கொள்கையும் விளங்க;
சங்கம் படைத்த தவவெளி யீடே !
செங்கதிரோனின் சீலம் படைத்து
பொங்கிய வேதப் பொலிமணம் வீசி
தங்கிய சைவத் தமிழ்நிதி பெருக்கி
எங்கும் சமரச இன்பஅன் பமைய
மங்களமாகநீ, வாழி வாழியவே.

# நாம் போற்றும் நால்வர் நெறி

**வி. பி. சாமி**

''பிள்ளைநெறி'' நின்று
சிவபெருமான் அருள்பெற்று
தெள்ளமுதத் தமிழீந்தார்,
திருஞான சம்பந்தர் !

தொண்டருக்குத் தொண்டு செய்யும்
உமைபாகன் பாதத்தை
தண்மைமிகு 'தாச நெறி'
சென்றுய்தார் வாகீசர் !

எந்தையாம் ஈசனடி
இறைஞ்சி புகழ் பாடி
சுந்தரர் தாம் சென்றவழி
தூய்மைமிகு 'தோழ நெறி' !

மெய்யான இறைவனிடம்
உய்யவென அன்பு வைத்து
தெய்வீக 'சன்மார்க்க நெறி'
திருவாதவூரர் நெறி !

ஞாலம் சிறக்க வென்று
ஞான மழைபொழிந்து
நாலுபேர் சென்ற வழி
நாம் போற்றும் ''நால்வர் நெறி!''

உ

# "நால்வர்"



கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தாரால்

கொம்பனித்தெரு

ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில்

*21 — 7 — 67ல் பிரதிட்டை செய்யப்பட்ட*

நால்வர் விக்கிரகங்கள்

# அன்புக் காணிக்கை

ஆண்டுகள் பதினைந்தை முடித்துக்கொண்டு அடுத்து வரும் பதினாறும் ஆண்டிலே எடுத்தடி வைக்கும் எமது சங்கம் ஆற்றிய பணிகள் பற்பல. அந்நற்பணிகள் யாவையையும் போற்றப் புகுந்த இவ்வேளையிலே எம்மனத்திடை மலர்ந்த மகிழ்ச்சியின் விளைவே இதோ நால்வர் நெறி மலராக மலர்ந்து மணங்கமழ்ந்து கொண்டிருக்கின்றது. நாலு பேர் சென்ற வழியிலே நாமும் சென்றுய்ய வேண்டுமென்ற நன்னோக்கத்தோடு நற்பணியாற்றும் நாம் — நம் சிறுர்கள் நல்லறிவு பெற ''நால்வர் சமய பாடசாலை'' ''நால்வர் நூலகம்'' போன்ற அறிவுக் கூடங்களை அமைத்து நடாத்துவதுடன், நால்வருக்கு கோவில் ஒன்றினையும் அமைத்து நால்வர் காட்டிய நன்னெறிகளை பரப்புமுகமாக ''நால்வர் நெறி'' எனும் மலரையும் மூன்றாவது மலராக மலரச் செய்துள்ளோம்.

இவ்வறிவு மலரை தருமையாதீன ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், சங்கக் காப்பாளர் பேராசிரியர் உயர்திரு. அ. சின்னத்தம்பி அவர்கள், குருமகா சந்நிதானம் தவத்திரு குன்றக்குடி அடிகளார், அருள்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார் ஆகியோரின் ஆசிச் செய்திகள் அணி செய்கின்றன. ஆசி வழங்கிய பெருந்தகையாளர்களுக்கு எம் இதயம் நிறைந்த நன்றியைச் செலுத்துகின்றோம்.

உயர்ந்த நற்கருத்துக்கள் பலவற்றை இயம்பும் இம்மலரை ஈழமணி நாட்டின் ஈடு இணையில்லாப் புகழ் பெற்ற சைவப் பெருமகனார் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களதும், இன்னும் ஈழத்து அறிஞர் பெருமக்கள் பலர் படைத்தளித்த அறிவுக் கருவூலங்களும், தாய் நாட்டின் பேரறிஞர்களான கலைமகள் ஆசிரியர் உயர்திரு. கி. வ. ஜெகந்நாதன் அவர்களதும், தருமையாதீன தமிழ்ப்புலவர் சித்தாந்த கலைமணி மகா வித்துவான் சி. அருணை வடிவேலு முதலியார் அவர்களதும் தருமையாதீனத் தமிழ்க் கல்லூரி தமிழ்ப் பேராசிரியை வித்துவான் திருமதி ப. நீலா அவர்களதும் ஆக்கமிகு அறிவுக் குவியல்கள் மேலும் இம்மலரை மேன்மையுறச் செய்கின்றன.

ஊனமிலா அறிவேந்தி ஞானக் கோவையாக வெளிவரும் இவ்வெழில் மலருக்கு அறிவுச் செல்வங்களை அள்ளி அள்ளி வழங்கிய அறிஞர் குழாத்துக்கு நாம் என்றும் கடமைப்பாடுடையோம்.

எமது வெளியீட்டை இத்துணைச் சிறப்பாக உருவாக்க மனமுவந்து விளம்பரம் தந்துதவிய வணிகப் பெருமக்களுக்கும், விளம்பரங்களை சேகரிக்க ஒத்துழைப்புத் தந்துதவிய அன்பர்களுக்கும், இம்மலரை மிகச் சிறந்த முறையில் — குறைந்த செலவில், உரிய காலத்தில் அழகுடன் அச்சேற்றித் தந்துதவிய கொழும்பு வரையறுக்கப்பட்ட கூட்டுறவு அச்சாளர் சங்கத்தினர் ஆகியோருக்கும் எமது சங்கத்தின் சார்பில் நன்றியைக் கூறி **கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமியின் பொன்னார் பூங்கழல்களுக்கு எம் அன்புக் காணிக்கையாக இம்மலரை அர்ப்பணிக்கின்றோம்.**

**— ஆசிரியர்கள்**

# நால்வர் நெறி

''சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்''

கீலக ஆண்டு கார்த்திகைத்திங்கள் இருபத்தாறும் நாள் மலர் 3

சைவம் சிவசம்பந்தம். உயிர்கள் மீதுள்ள பெருங்கருணையால் சிவபெருமான் அருவம், உருவம், அருஉருவம் ஆகிய திருமேனிகளைக் கொண்டு சகல உயிர்களையும் உலகங்களையும் தாங்கி ஒவ்வொரு உயிருக்கும் தாயாக நின்று அன்பு செலுத்தி முத்தி கொடுக்கிருர்.

இறைவனின் குழந்தைகளாகிய நாம் எம்மையும் உணராது இறைவனையும் அறியாது மயங்கி, மறவழியில் சென்று துன்பப்படுகின்ருேம். துன்பத்தில் இருந்து இன்பத்திற்குச் செல்ல, இருளில் இருந்து ஒளிக்குப் போக, அறியாமையில் இருந்து முழு அறிவு பெறுநிலையை அடைய, மயக்கத்தில் இருந்து தெளிவுபெற அவன் அருள் வேண்டும். அவன் அருளை அன்புவழி நின்றல்லவா பெறவேண்டும். அன்பே சிவம். அருளே சுகம். எமது அறிவு, ஆற்றல் அனைத்தும் அன்பு வழியில் ஆளப்படவேண்டும். அன்பே உருவான சிவபெருமானை அன்புவழி நின்று அடைய வேண்டும் என நாயன்மார்கள் நால்வரும் எமக்கு வழிகாட்டுகின்றனர். நாயன்மார்கள் காட்டும் அன்பு நெறி நின்று சிவபெருமானுடன் ஐக்கியப்படுவதே சைவசமயத்தின் நோக்கமாகும்.

சிவபெருமான் அன்பே உருவாகி சகல உயிர்களுடனும் கலந்து நீக்கமற நிறைவாகி, பரிபூரண நிலையில் இருப்பதால் எல்லோருடனும் அன்பாய் இருப்பது நமது கடனுகும். அன்பாய்ப் பேசி, அன்புடன் உறவாடி, அன்புச் சூழ்நிலையை உருவாக்குவது நமது குறிக்கோளாக இருக்க வேண்டும். அன்புக்கு முரணுன செய்கைகளையும், சிந்தனைகளையும் தவிர்த்து, ''ஒன்றே குலம், ஒருவனே தேவன்'' என்ற பெருநோக்கில் எமது மனதைப் பழக்க வேண்டும்.

அன்பின் முதிர்ச்சியிலே தியாகம் பிறக்கின்றது. ஒருவனின் தியாகத்தால் பலர் வாழ்கின்றனர். தாயின் தியாகத்தால் குழந்தை வளர்கின்றது. குருவின் தியாகத்தால் சீடன் வளர்கின்ருன். தந்தையின் தியாகத்தால் குடும்பம் மகிழ்கின்றது. இறைவனின் தியாகத்தால் எல்லா உயிர்களும் இன்புறுகின்றன.

தியாக உணர்ச்சியை வளர்த்து, தன்னலமற்ற சேவையில் நாம் தொழிற்படும்போது இன்ப அன்பின் பயன் கிடைக்கின்றது. அன்பின் பயன் முத்தி. அறிவின் பயன் அன்பு, சேவையின் பயன் அன்பு. அறிவும் சேவையும் அன்பால் உந்தப்பட்டு தியாக உணர்ச்சியுடன் வாழும்பொழுது இப்பிறவியிலேயே சீவன் முத்தி கிடைக்கின்றது. நாயன்மார்கள் அன்பு வழி நின்று அருள் பெற்று பல அற்புதங்கள் புரிந்து, தாயனைய சைவ நெறியை வளர்த்தவர்கள். அவர்களைப் பின்பற்றி வாழ்வதால் நாமும் இவ்வுலகில் சகல சுகபோகங்களுடன் வாழ்ந்து, மறு உலக முத்தியையும் பெறலாம்.

தனி மனிதன் எப்படி வாழவேண்டும், எதை அறியவேண்டும் என்பதை நாயன்மார்கள் தந்த தேவார திருவாசகங்களில் இருந்தும், சமுதாயம் எப்படி உருவாக்கப்பட வேண்டும் என்று சேக்கிழார் தந்த திருத்தொண்டர் புராணத்தில் இருந்தும் அறிந்து கொள்வோமாக.

கல்தோன்றி மண்தோன்ருக் காலத்தே முன்தோன்றி மூத்த குடியாக வாழ்ந்த தமிழர் நிலையில் இருந்து நாம் எவ்வளவோ இறங்கிவிட்டோம். யார் மீதும் குற்றம் சொல்லிப் பயன் இல்லை. சைவ சமய அடிப்படையில் எமது வாழ்வைத் தொடக்கி, அன்பு கலந்த அறவாழ்வில்

மகிழ்ந்து, பழந்தமிழர் பண்பாட்டிற்கு எம்மையும் எமது சமுதாயத்தையும் உயர்த்திவிட்டால், கால கதியில் எம் கதையை சரித்திரத்திலேனும் வாசிக்க முடியுமா?

நாயன்மார்கள் காலத்தின் முன் இருந்த தமிழ்ச் சமுதாயத்தையும் அவர்கள் காலத்தில் தமிழ்ச் சமுதாயம் மாறிய விதத்தையும், அவர்கள் வாழ்க்கையில் உருவாகிய இயக்கத்தின் விளைவையும் உணர்ந்தவர்கள் நாயன்மார்கள் சென்ற வழியிலேயே பணிபுரிவர்.

நாயன்மார்களை சமயப்பற்றில் இயக்கிய திலகவதியாரையும், மங்கையர்க்கரசியாரையும் பின்பற்றி சமய தீவிரவாதிகளை உருவாக்க வேண்டும். குழந்தைகள் தளர்நடை போட்டு, மழலை மொழிபேசும் காலத்தில் இருந்தே, சமயப்பற்றை ஊட்டி, அறவழியில் நடத்த தாய்மார்கள் முயற்சி எடுக்க வேண்டும். தாயின் மடியில் தவழ்ந்து விளையாடும் குழந்தைகள் அன்பின் சிறப்பையும், தியாகத்தின் மகிமையையும், முதல்முதலில் தாயிடமே அறிவதால் தாய்மார்கள் சமயத்தின் அத்திவார மூலைக்கற்கள் அல்லவா?

சைவ சமயப் பண்பாட்டிலே குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகி சைவ சமய கலாசாரத்திலே கல்வி பயின்று, தன்னையும் தன் சமுதாயத்தையும் உயர்த்திய தூய அன்பினால், தியாக உணர்ச்சியுடன் குற்றமற்ற சேவையில் ஈடுபட்டு பெற்ற தாய்க்கும் பிறந்த பொன் நாட்டிற்கும் புகழ் தேடிக் கொடுக்க வேண்டும். தனி மனிதன் அறவழிப்பட நாடும் அறவழிப்படும்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் ஆகிய நாயன்மார்கள் நால்வரும் காட்டும் நெறிகளையே பொதுவில் ''நால்வர் நெறி'' என அழைக்கின்றோம். நால்வர் நெறியைக் கடைப்பிடித்து வாழ்வதற்கு எமது வாழ்க்கை சைவ வாழ்க்கையாக அமைய வேண்டும். சமுதாய அமைப்பு சைவ கலாசார பண்பாட்டில் அமைய வேண்டும். இந்நிலையில் தேவார திருவாசகங்களைப் படிக்கும்போது உள்ளம் அன்பில் உருகும். உணர்ச்சிகள் பக்தியை வளர்க்கும். கண்கள் திருவருளையே வேண்டி அழும். ''அம்மை அப்பனான சிவனின்'' காட்சி கிடைக்கும்.

**வாழ்க நால்வர் நெறி ! வளர்க அன்பு வழி !!**

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் !!"**

திருச்சிற்றம்பலம்

* * *

குருபாதம்

# தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

## அருளிய ஆசிச் செய்தி



''ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே''

வேதம் பசு, அதன்பால் மெய்யாகமம். நால்வர் ஓதும் தமிழ் அதன் உள்ளுறும் நெய் என்பது ஆன்றோர் வாக்கு. தேவார திருவாசகங்கள் வேதசிவாகமங்களின் பிழிவாய் விளங்குவன என்பது இதன் கருத்து. இத் திருமுறைகளை நமக்கு அளித்த சமய குரவர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய நால்வரும் தென்னாட்டில் சைவ சமய நெறியைப் பேணி வளர்த்த பெரியோர்களாவர்.

''சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும்நம் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் — முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத்து எங்கே.''

என்று கூறுகின்றார் ஒருவர். சமண பௌத்த சமயங்கள் நம் நாட்டில் தலையெடுத்த காலங்களில் இவ்வருட்குரவர்கள் தோன்றி நம் சமயத்தை அரண் செய்து காத்தனர். சைவத்தின்மேற் சமயம் வேறில்லை, சிவமாம் தெய்வத்தின் மேல் தெய்வம் இல்லை என்ற கருத்தை உலகிற்கு உணர்த்தியருளினர். சமயகுரவர் நால்வரும் பிள்ளைமைநெறி, தொண்டுநெறி, தோழமைநெறி, ஞானநெறி என்ற நிலைகளை உலகிற்குணர்த்திய பெருமக்களாவார்.

இறைவன் இவர்கள் வாயிலாக நின்று அருளிச் செய்தனவே தேவார திருவாசகங்களாகிய திருமுறைகள். இறைவனருளிச் செய்ததே வேதம் என்று கூறுவதுபோல் இத்திருமுறைகளையும் தமிழ்வேதம் என்று கூறுவர். ஞானசம்பந்தர் முதலாக சேக்கிழார் ஈறாக 27 அருளாளர்கள் பாடியருளின பன்னிரு திருமுறைகளாகும் இவை. ஓ என்ற பிரணவ முதலெழுத்தைக் கொண்டு தொடங்கி ''ம்'' என்ற பிரணவ ஈற்றெழுத்திலே முடிகின்றன. பன்னிரு திருமுறைகளும் நம் அக இருள் போக்கும் பன்னிரு ஆதித்தர்களுக்கு ஒப்பாகும். திருமுறைகளை வகுத்த நம்பியாண்டார் நம்பிகள் ஏழு திருமுறைகளும் ஏழுகோடி மந்திரங்களை நிகர்க்கும் என்றும், திருத்தொண்டர் புராணம் தவிர்ந்த பதினொரு திருமுறைகளும் பதினொருமந்திரங்களுக்கு ஒப்பாகும் என்றும் கூறியருளுகின்றார். இவற்றை ஓதி இறைவனை வழிபட்டால் அவன் அருள்நலம் எளிதில் கிடைக்கும். திருமுறைகளுக்கு இறைவன் திருச்செவி எப்போதும் திறந்திருக்கிறது. பக்திப் பாடல்கள் பல பாடுவதைவிட இவைகளில் சிலவற்றையேனும் ஓதிவழிபடுவது உயர்ந்தது.

''நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கரையனும் பாடிய நற்றமிழ்மாலை
சொல்லியவே சொல்லி ஏத்துகப்பானை'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்கின்றார். திருமுறைகள் நம்முன்னோர் நமக்குத் தேடித் தந்த சேமநிதி என்ற நினைவு சைவசமயிகள் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும். திருமுறைகளை ஓதி உணர்ந்தால் இம்மை மறுமைப் பயன்களை எய்தலாம் என்பது உறுதி.

மனிதமனம் பண்படுவதற்கு ஆறு கட்டளைகளை அருளிச் செய்கின்றார்கள் எங்கள் ஆதிபரமாசாரியராகிய ஸ்ரீ குருஞானசம்பந்தர். அவைகளில் திருமுறைகள் ஓதவேண்டும் என்பதும் ஒன்று. 1. ஆசையை அறுக்க வேண்டும். 2. பாசத்தை விட வேண்டும். 3. சிவபூசை செய்ய வேண்டும். 4. திருவைந்தெழுத்தை நினைக்க வேண்டும். 5. சினத்தைத் தவிர்க்க வேண்டும். 6. திருமுறைகளை ஓத வேண்டும். இந்த ஆறு அறிவுரைகளையும் பின்பற்றினால் உலகம் உய்திபெறும் என்பது திண்ணம்.

''ஆசையறாய் பாசம் விடாய் ஆனசிவபூசை பண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய் — சீ சீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்''

என்ற ஸ்ரீ குருஞானசம்பந்தரின் உபதேச மொழியை உணர்ந்து உலகம் இன்புறுக. செந்தமிழ்ச் சொக்கன் திருவருளால் கொழும்பு, கொம்பனித்தெரு சைவமுன்னேற்றச் சங்கத்தின் சமயப் பணி சிறப்புறுக.

# ஆதரவாளர் ஆசிச் செய்தி



பேராசிரியர்
அ. சின்னத்தம்பி

கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தின் 15ஆவது ஆண்டு நிறைவு விழாவின் சிறப்பு மலராகிய இம்மலருக்கு ஆசிச்செய்தி அளிப்பதற்கு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

சைவ சமயத்தவர்களாகிய எம்மை எதிர்நோக்கும் பிரச்சினைகளை நாம் தக்க முறைகளில் கையாளாவிடின், கணத்திற்குக் கணம் வளர்ந்து வரும் உலக முன்னேற்றத்திற் பங்குகொள்ள முடியாதவர்களாவோம்.

சைவ சமயத்திற்கு தனிச் சிறப்பைக் கொடுக்கும், சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய சாதன வழிகள் ஆலயங்களில் முறைப்படி ஒழுகப்பட்டு வருகின்றன. எல்லா வழிபாடுகளும் ஒரே ஒரு முடிவுக்கு பக்தர்களை உந்துகின்றன. இறைவன் திருவருளில், அன்பில், கருணையில், கலந்துணரும் அனுபவமே ஞானமாகும். இவ்வனுபவ நிலையை அடைவதற்கு தொண்டர்களும் கோவில் கிரியைகளை நடத்துவோரும், அன்பால் உந்தப்பட வேண்டும். சிவஞானத்திலோ அல்லது முருக ஞானத்திலோ வேற்றுமை உணர்ச்சியும் வெறுப்புணர்ச்சியும் இல்லை.

சிவ அன்பில் மகிழ்ந்து, சிவஞானம் பெற்று, கடமையாற்றும் கோவில் நிர்வாகிகளையும் குருக்கள்மார்களையும், திருத்தொண்டர்களையும் இக்கோவிலில் கண்டு அகமகிழ்கின்றேன்.

இறைவனுக்கும் தனக்கும் உலகத்திற்கும் உள்ள தொடர்புகளை அறிந்து தனக்கு வாழ்வு அளித்த முதல்வனிடம் அன்பு செலுத்துவதை ''ஈசன்பால் அன்பு'' என்றும், இறையன்பை தம் உள்ளத்தில் அடியார்கள் நேரே அனுபவிக்கும்போது ''ஞானம் உண்டார்'' என்றும் தெய்வச் சேக்கிழார் அடியார்களும் இறைவனும் அன்பால் இயைந்து இருக்கும் நிலையைப் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

சிவஞானம் உண்டவர்களுக்கு ''நான்'' என்ற உணர்ச்சி நீங்கி விடுகின்றது. சிவகாருண்யம் பெருக சகல உயிர்களையும் இறைவன் அன்பால் தழுவுவது உணர்ந்து எல்லா உயிர்களுடனும் அன்பால் உறவாடுவர்.

இந்த உலகத்தையும், சகல உயிர்களையும் இறைவன் ஒரு பெரு நோக்கம் கொண்டே படைத்திருக்கிறான். எல்லா உயிர்களும் தன்னிலைமை சார்வதற்காகவே சகல சக்திகளையும் அளித்திருக்கிறார் என்பது சிவஞானத்தின் முடிந்த முடிவாகும். சகல உயிர்களும் வையத்து வாழ்வாங்கு வாழ உதவுவது சிவஞானத்தின் பயனாகும். ''இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க'' என்பது சைவ சமயத்தின் இலட்சியமாகும். இனம், சாதி, பெயர், குணம், குறி என வேறுபட்டுக் கிடக்கும் சைவ மக்கள் ஒன்றே குலம் என்ற பெருநோக்கில் மகிழ்ந்து வாழ வேண்டும். அன்பினால் ஒன்றுபட்டு, மனம் கலந்து ஒருவரோடொருவர் ஒன்றி வாழ்ந்து இன்பம் பெற வேண்டும். மனித ஒற்றுமைக்கும் சிவஞான அன்பிற்கும் புறம்பான பேச்சுக்களையும், செய்கைகளையும், கிரியைகளையும் விலக்க வேண்டும்.

நால்வர் காட்டிய நெறியில் அன்பே உருவான சிவபெருமான் மீது பக்தி செலுத்தி எம்மை நாமே உணர்த்திக் கொள்வோமாக. இச்சங்கம் நால்வர் நெறிநின்று, சைவமக்களுடைய அன்பும் ஆதரவும் பெற்று இத்தூய சேவையில் ஓங்கி வளருமாறு கொம்பனித்தெரு வதியும் முருகப்பெருமான் திருவடியை இறைஞ்சுகின்றேன்.

உ
முருகா

# வாரியார் வாழ்த்து

## நேரிசை வெண்பா

தெய்வ நலங்கமழும் சீரார் கொழும்பு நகர்ச்
சைவ முன்னேற்றத் தமிழ்ச் சங்கம் வையமிசை
பல்லாண்டு வாழ்க பழநிக் குகனருளால்
எல்லா நலமும் இசைந்து.

அன்பன்,

கிருபானந்தவாரி



வாரியார் எமது சங்க நிகழ்ச்சியில்

## தவத்திரு

# குன்றக்குடி அடிகளார்



## ஆசிச் செய்தி

நால்வர் நெறி தமிழ் இனத்தின் தலையாய நெறி. நால்வர் நெறி இணையற்ற இன்ப நெறி. சைவத் தமிழ் உலகம் நால்வர் நெறியின் பாற்பட்டதேயாம். ஞாலம் உய்ய, நாம் உய்ய, சைவ நன்னெறியின் சீலம் உய்ய நால்வர் பெரும்மக்கள் தோன்றினார்கள். அவர்கள் இன்பத் தமிழகத்தில் தொடங்கிய புரட்சி போற்றுதற்குரியது. நால்வர் பெருமக்கள் இறைவனைக் கண்டு களித்து மகிழ்ந்தவர்கள். இறைவனை இந்த மண்ணுலகத்தில் எழுந்தருளச் செய்தவர்கள். நடமாடச் செய்தவர்கள். நால்வர் நெறி நன்மை பெருகு அருள் நெறி. இருளகற்றும் நெறி. ஒழி நல்கும் நெறி. இன்ப அன்பு நெறி.

தமிழினம் நம்மைக் காப்பாற்றிக் கொள்ள துணையாக உள்ள நெறியும் நால்வர் நெறியேயாம். இந்த நால்வர் நெறியைப் பேணி வளர்க்கும் நோக்கத்துடன் தோன்றியுள்ள கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்கத்துக்கு நமது பாராட்டுக்கள், நமது வாழ்த்துக்கள்.

### கொழும்பு, கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம்

# நிர்வாகசபை உறுப்பினர்

### பதினைந்தாவது ஆண்டு (1967 — 1968)

| | |
|---|---|
| காப்பாளர்கள் : | பேராசிரியர் அ. சின்னத்தம்பி |
| | திரு. த. சிவலிங்கம் J.P. |
| | திரு. ச. ஆறுமுகம் M.I.C.E. |
| | திரு. அ. நவரத்தினம் |
| | திரு. த. நீதிராசா J.P., M.M.C. |
| | திரு. மு. வயிரவப்பிள்ளை |
| தலைவர் : | திரு வ. சி. செல்லையா |
| உபதலைவர்கள் : | திரு. வை. நா. சோமசுந்தரம் |
| | திரு. வ. செல்வத்துரை |
| கௌரவ பொது நிர்வாகச் செயலாளர் : | திரு. க. பாலசுப்பிரமணியம் |
| கௌரவ பொதுப் பொருளாளர் : | திரு. வ. இ. இராமநாதன் |
| கௌரவ சமயச் செயலாளர் : | திரு. வே. பெரியசாமி |
| கௌரவ பாடசாலைச் செயலாளர் : | திரு. சு. லிங்கேஸ்வரன் |
| கௌரவ துணைப் பொருளாளர் : | திரு. தி. செல்வத்துரை |
| கௌரவ கணக்குப் பரிசோதகர்கள் : | திரு. வே. சண்முகம் |
| | திரு. க. தியாகராசா |
| செயற் குழு : | திரு. தி. பாலசுந்தரம் |
| | திரு. ந. பெ. சதாசிவம் |
| | திரு. இ. கணேசன் |
| | திரு. வ. செல்வரத்தினம் |
| | திரு. அ. கந்தையா |
| | திரு. ச. சாம்பசிவம் |
| | திரு. சு. கந்தையா |
| | திரு. மா. குமாரசாமி |

# எங்கள் தலைவர்



திரு. வ. சி. செல்லையா அவர்கள்

உ

முருகன் துணை

# கொழும்பு கொம்பனித் தெரு

# ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்



## திருவூஞ்சற் பாக்கள்

1 செங்கமல நிதியுடையார் செழித்து வாழும்
தென்கொழும்பு மாநகரிற் சிறந்தே யோங்கும்
கொம்பனிவீ தியிற் கோயில் கொண்டு மேவும்
கோலமயில் வாகனன்மே லூஞ்சல் பாட
அம்பிகைபங் குடையவர னருளும் பாலன்
அருமறையி னடிப்பொருளா மாதி தேவன்
கம்பமத கரடதட விகடநால் வாய்க்
**கரிமுகவ னிருசரணங்** காப்ப தாமே.

2 துதிமேவு நாதவிந்து கால்க ளாகச்
சுத்தசிவ சத்தியொழிர் விட்ட மாக
பதிமேவும் பிரணவமே பலகை யாகப்
பலமோங்கு மந்திரமே கயிற தாக
அதிரூப முடனமைத்த ஊஞ்ச லேறி
அரியயனிந் திரன்முதலா மமர ரேத்த
குதிமேவு நதிபாயுங் கொழும்பின் மேய
**கோலமயில் வாகனரே** யாடீ ரூஞ்சல்.

3 சித்திரஞ்சேர் வித்துருமத் தூண்கள் நாட்டித்
திவ்வியமா ணிக்கமணி விட்டம் பூட்டி
பத்தரைமாற் றுப்பசும்பொன் வடங்கள் பூட்டிப்
பருவயிர ரத்தினத்தாற் பலகை மாட்டி
வித்தகமா யமைத்ததிரு வூஞ்சல் மீதே
மேவுமன்பர் பிணியகல வீற்றிருந் தே
கொத்தலர்கொம் பனிவீதி மேவுங் கோவே
**கோலமயில் வாகனரே** யாடீ ரூஞ்சல்.

4 ஆங்கிலரா ணுவவீர னாதி தன்னில்
அமைத்தசக்தி மீதினரு ளுருவாய்த் தோன்றி
ஆங்கிளைஞ ரரிவையரா டவரெல் லோர்க்கும்
அறுசமயத் தவர்க்குமவ ரல்லா தோர்க்கும்
தேங்கியநல் லருள்சுரந்து துயரம் போக்கி
தீயவினை தீர்த்தருளும் தேவ தேவே
கோங்கலர்கொம் பனிவீதி வாழ்வு செய்யும்
**கோலமயில் வாகனரே** யாடீ ரூஞ்சல்.

5 தேனுலவு செங்கமல பதங்க ளாடச்
செய்யநுதற் சுட்டியொளி திகழ்ந்தே யாடக்
கானுலவு நீபமலர் மாலை யாடக்
கண்டசர மாடவுப வீத மாட
மீனுலவும் விழிமடவார் நடன மாட
விண்ணவர்கள் மண்ணவர்கள் விரும்பி யேத்தக்
கோனுலவு கொம்பனிவீ தியினில் வாழும்
**கோலமயில் வாகனரே** யாடீ ரூஞ்சல்.

6 சீலமிகு தும்புருநா ரதர்பண் பாட
சீர்த்தியுள கந்தருவர் யாழை மீட்கச்
சாலமிகு மரம்பையர்கள் நடன மாடத்
தாளமிடும் வேதனுடன் வேந்தன் போற்றக்
காலமிகு நாரணனார் தீப மேந்தக்
கவரிதனை வருணன்கால் எரிவா ளேந்தக்
கோலமிகு கொம்பனிவீ திவாழ்வு செய்யுங்
**கோலமயில் வாகனரே** யாடீ ரூஞ்சல்.

7 எழும்புமிசை நாமகளிந் திரையா லாத்தி
ஏந்துவார் மங்கலங்கள் தேவ மாதர்
தொழும்புசெயுங் காலனொடு குபேரன் தானும்
துகடீர்கா ளாஞ்சியுட னடப்பை யேந்த
தழும்புடைய கார்த்திகைமின் வடந்தொட் டாட்டச்
சங்கரியு மீசனுந்தண் ணளியி னோக்கக்
கொழும்புநகர்க் **கியூவீதி வ்ாழ்வு** செய்யுங்
**கோலமயில் வாகனரே** யாடீ ரூஞ்சல்.

8 ஈட்டமுள சூரன்முத லோரை யட்டே
இன்பமுறத் தேவர்சிறை மீட்ட தீரா
வாட்டமுறு பாவாணர்க் கருளும் வாழ்வே
வைரவனுங் கணபதியும் வாழ்த்துஞ் செல்வா
நாட்டமுறு பத்தர்தினம் பாடி யாட
நல்லவர மவர்க்கருளும் கந்த வேளே
கோட்டமுறு கியூவீதி வாழ்வு செய்யுங்
**கோலமயில் வாகனரே** யாடீ ரூஞ்சல்.

9 வாயிலுறு வேதசிவா கமங்க ளோசை
வழமைகெழு முழவோசை வான மூடத்
தாயிலுறு மகவதுபோற் றரணி மாந்தர்
தமிழிசையாற் றந்துயரம் போக்கும் தேவே
நோயிலுறு மெம்பவங்கள் நொடியில் மாற
நோன்றாள்கொண் டருணோக்கு நொய்ய வேலா
கோயிலுறு கியுவீதி வாழ்வு செய்யுங்
**கோலமயில் வாகனரே** யாடீ ரூஞ்சல்.

10 அற்றமிலா அறுமுகனே யாடீ ரூஞ்சல்
அரன்றனக்குங் குருவானோ யாடீ ரூஞ்சல்
செற்றமிலாக் கங்கைசுதா யாடீ ரூஞ்சல்
தெய்வானை வள்ளியொடு மாடீ ரூஞ்சல்
சுற்றமிலார்க் குற்றவனே யாடீ ரூஞ்சல்
சுடர்ஞான வேற்கரத்தோ யாடீ ரூஞ்சல்
குற்றமிலாக் கியுவீதி வாழ்வு செய்யுங்
**கோலமயில் வாகனரே** யாடீ ரூஞ்சல்.

## வாழி

11 தெய்வமறை யந்தணரா னினங்கள் வாழி
தேசுவளர் மன்னவர்செங் கோலும் வாழி
மைவிழியார் கற்பினொடு தருமம் வாழி
வாழ்வுதரு கண்டிகையும் நீறும் வாழி
உய்யவருஞ் சைவநெறி யோங்கி வாழி
உலகமெலாம் வளம்பெருகி யுயர்ந்து வாழி
வையமகிழ் கொம்பனிவீ தியினில் மேவும்
வானவர் சேனாபதியும் **வாழி வாழி.**

**ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி திருவடி சரணம்**

# விநாயகப் பிரபாவம்

சைவப்புலவர் க. சி. குலரத்தினம்

விநாயகனே வெவ்வினையைவேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் —
விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம்
தன்மையினல்
கண்ணிற் பணிமின் கனிந்து.

பெருமை மிக்க வசிட்ட முனிவர் மரபில் வந்தவரான மாகதர் என்னும் மகான் ஒருவர் இருந்தார். அவருடைய தவத்தைக் குலைத்த அசுரப் பெண்ணுகிய விபுதை ஆனே முகத்தை யுடைய ஓராண் குழந்தையைப் பெற்ருள். பெருவலிபடைத்த அக்குழந்தை கயமுகன் என்னும் பெயரினன். அவன் அசுர குரு வாகிய சுக்கிராச்சாரியாருடைய உபதேசத் தின் வண்ணம் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவஞ் செய்தான். ஆயிரமாண்டுகள் புல்லையும் இலையையுந் தின்றும், ஆயிரமாண் டுகள் நீரை மாத்திரம் அருந்தியும், ஆயிர மாண்டுகள் காற்றையே உண்டும் மூவாயிர மாண்டுகள் தவஞ் செய்தான். அவன் தவத் துக்கிரங்கிய சிவபிரான் அவன் வேண்டிய வரங்களை ஈந்தருளினுர். ஏற்றுவன, எறிவன, ஈர்வன, எய்வன, குற்றுவன முதலிய படை கள் திரண்டு வந்தாலும் அவற்ருல் அழியா வரமும்; தேவர்கள், மானுடர், அசுரர் ஏனையோராலும், விலங்குகளினுலும் இறவா வரத்தையும் பெற்று; திருமால் பிரமன் இந் திரன் முதலானவர் சேவிக்க உலகமெங்கும் அரசாளும் பெருவரத்தையும் பெற்ருன்.

அவன் தேவர்களுக்கும் பிறருக்கும் செய்த கொடுமையைத் தாங்க மாட்டாதவர் இறை வனிடம் முறையிட்டபோது, அவர் ஐந்து திருக்கரங்களையும் மூன்று கண்களையும், தொங்குகின்ற (நால்) வாயினையும், செஞ் சடையினையும் மும்மதங்களையும், யானே முகத்தையும் உடைய பாலரை அருளிச் செய்தார். **அப்பாலகரே விநாயகர்** என்னும் திருநாமத்தையுடைய **கணபதி**. பிடியதன் உருஉமைகொள மிகுகரியது வடிகொடு தன தடி வழிபடுமவர் இடர்கடி கணபதி எனத் **திருஞானசம்பந்த மூர்த்திகள்** போற்றும் அத்திமுகத்தான் அவர்.

விநாயகக் கடவுள் இறைவனுடைய பூத கணங்களுக்குத் தலைவராய் இடையூறுகளை நீக் குபவராய் எழுந்தருளியிருந்தபோது இந் திரன் முதலிய இறையவர் அவரிடஞ் சென்று கயமுகாசுரன் தங்களுக்குச் செய்யும் கொடு மைகளைக் கூறினுர்கள்.

பின்னு நங்களைப் பீடற வைகலுந்
தன்னை வந்தனை செய்யவுஞ் சாற்றினன்
அன்ன செய்தனம் ஆன்றியும் எங்கள் பால்
மன்ன வேபுதி தொன்று வகுத்தனன்.

* * *

கிட்டித் தன்முன் கிடைத்துழி நெற்றியிற்
குட்டிக் கொண்டு குழையினை யிற்கரந்
தொட்டுத் தாழ்ந்தெழச் சொற்றனன்
ஆங்கதும்
பட்டுப் பட்டுப் பழியிடை மூழ்கினேம்.

தேவர் துயர் தீர்க்கத் திருவுளங் கொண்ட விநாயகக் கடவுள் கயமுகாசுரனை எந்த ஆயு தத்தாலும் கொல்ல வியலாதென அறிந்து தமது தந்தங்களில் ஒன்றை ஒடித்து ஏவி அவ னைக் கொன்றதும், அவன் பெரிய எலி உருவங் கொண்டு அவரை எதிர்த்தான். விநாயகப் பெருமான் அதனைத் தம் ஊர்தியாகக் கொண்டருளினுர்.

கயமுகாசுரன் இறந்ததும் தேவர்கள் விநாயகப் பெருமான் மீது மலர் சொரிந்து அவர்களுடைய புகழைத் துதிப்பாராயினர். காத்தற்ருெழிலைச் செய்யுந் திருமாலும் படைத்தற் ருெழிலைச் செய்யும் பிரமதேவரும் உலகமனைத்தையும் அழிப்பவராகிய உருத்திர ரும் ஏனைய பஞ்ச கிருத்திய கருத்தாக்களும் தேவரீரேயாம். எமது துன்பத்தைத் தீர்த் தருளவன்ருே தேவரீர் இவ்வடிவத்தைக் கொண்டருளினீர். தேவரீரிடத்துப் பிறந்த வேதமானது தேவரீருடைய நிலையை அறிந்த தில்லை. அங்ஙனமாகத் தேவரீரைச் சிறியேம் அறிவதெப்படி. தேவரீர் அன்னையும் பிதா வுமாயினீர். அதனுற் புதல்வர்களாகிய நாம் கூறிய புகழ்ச்சியை அன்போடு கேட்டருளு வீர்போலும்.

காப்பவன் அருளு மேலோன்
கண்ணகன் ஞாலம் யாவுந்
தீர்ப்பவன் ஏனைச் செய்கை
செய்திடும் அவனு நீயே
யேப்படுஞ் செய்கை யென்ன
வெமதுளம் வெதும்பு மின்னல்
நீப்பது கருதியன்றோ
நீயருள் வடிவங் கொண்டாய்.

★

உன்னிடைப் பிறந்த வேதம்
உன்பெரு நிலைமை தன்னை
இன்னதென் றுணர்ந்த தில்லை
யாமுனை அறிவ தெங்ஙன்
அன்னையும் பயந்தோன் தானும்
ஆயினை யதனுன் மைந்தர்
பன்னிய புகழ்ச்சி யாவும்
பரிவுடன் கேட்டி போலும்.

இவ்வாறாகத் துயர் தீர்க்கப் பெற்ற தேவர்கள் அன்று தொடக்கம் தமது சிரங்களிற் குட்டி, காதுகளைப் பற்றித் தாழ்ந்து எழுந்து விநாயகப் பெருமானை வணங்கும் வழக்கத்தை மேற்கொள்வாராயினர்.

விநாயகர் தமக்கு ஒரு நாயகர் இல்லாதவர். தாமே எல்லா நாயகர்களுக்கும் ஏகநாயகராய் விளங்குபவர். மும்மலங்களையுடைய ஆன்மவர்க்கங்களை நடத்துபவர். அவர் ஆனந்தமயமாய் இருப்பவர். பெருமை மிக்கவர். சச்சிதானந்த சொரூபி, குணங்கடந்தவர். தேசங் கடந்தவர். காலங்கடந்தவர். முத்தொழில் நடத்துபவர்.

அவர் பிரணவ சொரூபர். **ஓம் என்னும் பிரணவம் பிள்ளையார் சுழியாக** அமைந்துள்ளது என்பர். மறையோதுமுன் ஓம் எனப் பிரணவமோதுதல் வழக்கம் என்பதை மொழியின் மறை முதலே எங்கள் கணபதியே என வந்துள்ள **அதிராவடிகள்** திருப்பாடல் வலியுறுத்துவது காண்க.

விநாயகருக்குப் பதினாறு வகையான மூர்த்தங்கள் உள. அவருடைய சக்திகள், **சித்தி, புத்தி, வல்லமை** என மூவராம். விநாயகர் ஆணுமல்லர், பெண்ணுமல்லர், அலியுமல்லர். யானைத்தலையும் தேவவுடலும் பூதக்காலும் பிறவும் உள்ளவர். அவர் கருணைமதம் பொழியும் திருக்கன்ன முள்ளவர் என்பதை

''கருணை யென்னும் வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை நினைந்து வருவினைகள் தீர்ப்பாம்'' என்னும் பரஞ்சோதியார் பாடலால் அறியலாம்.

**விநாயகரின் எழுத்தாணி தாங்கிய திருக்கரம் படைப்பையும், கொழுக்கட்டையேந்திய திருக்கரம் காத்தலையும், அங்குசக் கரம் அழித்தலையும், பாசத்திருக்கரம் மறைத்தலையும், அமுதகலசத்திருக்கரம் அருளலையும் குறிப்பனவாம் என்பர்.**

விநாயகப் பெருமானின் மெய்யடியார்கள் அவர்தம் புகழைப் பாடுந்தோறும் திருவுளம் மகிழ்ந்த அப்பெருமான் தம் திருச்செவிகளை அசைத்தருளுகிறார். அதனால் உண்டான காற்று பக்தர்களை முக்திக்கரை சேர்க்கிறது எனக் **காசிகாண்ட முடையார்** கவின் பெறப் பாடியுள்ளார்.

மாற்றரிய தொல்பிறவி மறிகடலின் இடைப்பட்டுப
போற்றுறுதன் குரைகழல்தாள் புணைபற்றிக் கிடந்தோரைச்
சாற்றரிய தனிமுத்தித் தடங்கரையின் மிசையுய்ப்பக்
காற்றெறியும் தழைசெவிய கடாக்களிற்றை வணங்குவாம்.

பிள்ளையார் கருணைமிக்கவர். வேண்டுவார் வேண்டும் வரங்களை விரும்பி விரைவுடன் அருளும் வள்ளல். விநாயக சதுர்த்தி முதலிய நாள்களில் அவரை மெய்யன்புடன் வழிபட்டுய்ந்தவர் பலர். இந்திரன் முதலிய இறையவரும் ஒளவையார் அராவடிகள் முதலிய புலவர்களும் பிள்ளையார் அருளைப் பெற்றவராவர். பிள்ளையார் திருவருளைப் பெற்றே **நம்பியாண்டார் நம்பிகள்** தேவாரம் திருவாசகம் முதலான வைசவத்திரு முறைகளை வெளிப்படுத்தியருளினர்.

கணங்கொண்ட வல்வினைகள் கண்கொண்ட நெற்றிப்
பணங்கொண்ட பாந்தள் சடைமேல் — மணங்கொண்ட
தாதகத்த தேன்முரலும் கொன்றையான் தந்தளித்த
போதகத்தின் தாள்பணியப் போம்.
(கபிலதேவர்)

# கந்தபுராண சாரம்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

மனிதன் இந்தச் சரீரம் கிடைத்ததன் நோக்கத்தை விசாரியாது, பற்றுக்களுக்கு அடிமையாய் விட்டான். வெகு தூரம் பற்றுக்களுக்குப் பிறகே போய்விட்டான். அதனாலே, தன் கருத்துக்களைக் கடவுளின்கருத்துக்கள் என்று சொல்லவுந் தொடங்கிவிட்டான். பற்றுக்களை அடக்கமுடியாது. அவை தாமே அடங்க வேண்டும். அதற்கு ஒரேயொரு உபாயம், பற்றுக்களைத் தருமவழியில் வழிப்படுத்துவது. தருமமாவது திருவருட் குறிப்பு.

தருமம் மிகமிக நீளமானது. அதன் இறுதி மோக்ஷம். மோக்ஷமாவது மெய்ச்சார்பை உணர்ந்து, பொய்ச்சார்புகள் விடுபட ஒழுகுவது. தர்மம் இந்த நிலைக்கு வந்து முற்றுப் பெறுமானால் அந்த நிலைக்கு அறம் என்று பெயர். அறமாவது திரிகரணசுத்தி ''புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை'' விலக்குதல் அறம். 'மேலாம் நன்னெறி ஒழுகல்' அறம். அறங் கைவந்து மனந்தூயர் ஆனவர்களுக்குப் பொருள் தெரியும். பொய்ம்மை இது மெய்ம்மை இது என்று அறிவார்கள். உலகம் அவர்கள் உள்ளங் கைக்கு வந்து விடும். உண்மையைக் காண்பார்கள்.

நவையறு காட்சி கைவந்து மெய்ப்பொருள் தெரிந்தவர்கள் அப்பொருளைப் பிரிந்து வாழ இயலாதவர்களாய் அப்பொருளோடு ஒன்றுபடுகின்றார்கள். அதனை அனுபவிக்கின்றார்கள். அதுதான் ஒப்புயர்வில்லாத இன்பம். இன்பம் தலைப்பட்டவர்கள் சுவர்க்காதி பயன்களைத் தருகின்ற நல்வினைகளையும், தீவினைகளோடு ஒப்பமதித்து வெறுக்கின்றார்கள். வீடு தலைக்கூடுகின்றது. தாடலைப் படுகின்றார்கள்.

அறம், பொருள், இன்பம், வீடு, அரும்பு மலர் காய்கனி. அறத்துக்கு மூலந் தர்மம். தர்மத்துக்கு வெகு தூரத்திலுள்ளவைகள் பற்றுக்கள். சூரபத்மா முதலிய அசுரர்கள் பற்றுக்களின் வழியில் முழுகிக் குதிக்கின்றார்கள். இந்திரன் முதலிய தேவர்கள் இடையிடையே தர்மத்தை விலகிப் பற்றுவழிப் பட்டுத் தவிக்கின்றார்கள்.

ஜனகாதிமுனிவர்கள் கல்லால விருக்ஷ நிழலில் அறங் கேட்கின்றார்கள். பிரம விஷ்ணுக்கள் அடிமுடி தேடி மெய்ப்பொருள் காண முயலுகின்றார்கள். வள்ளிநாயகியார் மெய்ப்பொருளோடு ஒன்றுபட்டு இன்பந் தலைக்கூடுகின்றார். தெய்வநாயகியார் இன்பந் தலைக்கூடித் தாடலைப்பட்டு அன்புத்துறை நிறைவாகி, திருவருள் வெள்ளமாய்ப் பிரவாகிக்கின்றார். சிவம் இருந்தபடி இருக்கச் சிவசக்தியின் சந்நிதியில் ஆத்மாக்கள் பற்றுக்கள் தொடக்கம் வீடு இறுதியான நிலைகளிற் சஞ்சாரம் செய்கின்றன.

இவ்வாற்றால், சூரபத்மா முதல் தெய்வநாயகியார் இறுதியான பாத்திரங்களையும் இன்னும் எத்தனையோ பாத்திரங்களையும் தன்பாற் கொண்ட **கந்தபுராணம் என்கின்ற தேவகங்கை** ஆத்மாக்களின் செல்கதியைப் பேசுவதாய், அவைகளை அவ்வக்கதிகளிற் செலுத்துவதாய், ஒப்பு உயர்வின்றி விளங்குகின்றது.

★ ★

கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரன் தன்னைப்
பாலன் என்றிருந்தேன் அந்நாள் பரிசிவை உணர்ந்திலேனால்
மாயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூல காரணமாய் நின்ற மூர்த்திஇம் மூர்த்தி யன்றோ ?

—கச்சியப்பர்

# மூவிரு முகங்கள் போற்றி

**கி. வா. ஜெகந்நாதன்**

இந்த உலகத்தில் உள்ள பொருள்களைப் புறக்கண்ணுக்குத் தோற்றுவிப்பவை மூன்று சுடர்கள். பகலில் சூரியனும் இரவில் சந்திரனும் அக்கினியும் இல்லையானால் உலகம் முழுவதும் இருள் மண்டிக் கிடக்கும். பரந்த இருளே இயற்கையாக இந்த ஞாலத்துக்கு உரியது. இந்த மாயிருள் ஞாலம் நன்றாக விளங்க வேண்டுமானால் ஒளி வேண்டும். ஒளி இல்லையேல் கண் இருந்தும் பயன் இல்லை. ஒளியையே இறைவனாகப் போற்றுவது வேதம்.

புறத்திருளைப் போக்குவதற்கு புற ஒளி எவ்வாறு இன்றியமையாததோ அவ்வாறே அக இருளைப் போக்குவதற்கு அக ஒளி அவசியம். அக இருளாவது அறியாமை. அதனை நீக்கும் ஒளி ஞானம். உலகம் முழுவதும் அறியாமையின் நிரம்பியது. வெறும் உலக உணர்வு மாத்திரம் படைத்த உயிர் அஞ்ஞானம் உடையதென்றுதான் சொல்ல வேண்டும். இந்த உலகத்ினூடேயிருந்து எல்லாவற்றையும் இயக்குவிக்கும் ஒரு பெரும் பொருளையும், இந்த உலகத்திலே வாழப் புகுந்த உயிராகிய பொருளையும், இவ்விரண்டுக்கும் உரிய தொடர்பையும் தெரிந்து கொள்ளாமல் இருக்கும் நிலை வெறும் உலகியலறிவால் உண்டாகின்றது. அது மாறி மேலே சொன்னவற்றைத் தெரிந்து கொள்ளும் நிலை வந்தால் அகத்தே படர்ந்த இருள் மறைந்து ஒளி உதயமாகும். அவ்வொளியாகிய ஞானம் இறைவன் அருளால் உண்டாகும்.

எனவே இருள்தருமாஞாலத்தில் புற இருளையும் அக இருளையும் நீக்குவதற்கு துணையாக நிற்பது இறைவன் திருவருள். முருகன் அவ்விரண்டு இருளையும் போக்க வல்லவன். அவனுடைய ஆறு திருமுகங்களுள் ஒன்று மாயிருள் ஞாலம் குற்றமன்றி விளங்கும்படியாக பல கதிரை விரிந்து பரப்புகின்றது.

''மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல் கதிர் விரிந்தன்று ஒருமுகம்''

**இந்த முகம்** தன்னுடைய கதிர்களை வீசிக் கொண்டே விளங்குகின்றது. சில கதிர்கள் சூரியனுடைய செங்கதிர்களாக உருப்பெறுகின்றன. சில கிரணங்கள் சந்திரனது தண்ணிலவாக உருக்கொள்கின்றன. சில கதிர்கள் அக்கினியின் வெம்மை நிலவிய ஒளியாக அமைகின்றன. இன்னும் சில கதிர்கள் அஞ்ஞானத்தைப் போக்கும் ஞானமாக உட்புகுகின்றன. ஆகவே பலவகைக் கதிர்களை உடையதாயிற்று இந்த முகம்.

**இரண்டாவது முகம்** வரம் கொடுக்கும் முகம். முருகனை நினைந்து உருகி அன்பு செய்வார் அவனை வாயார வாழ்த்துகின்றனர். அவர்களுடைய அன்பினாலே உள்ளம் குளிர்ந்து அவர்கள் விரும்பியபடியெல்லாம் வளைந்து கொடுப்பவன் முருகன். பக்தர்களுக்கினியவன். வரம் அளிக்கும் அருட்செயலைச் செய்கின்றது முருகனுடைய இரண்டாவது திருமுகம்.

உலகத்தில் அந்தணர்கள் வேள்வி செய்யுங்கால் தேவர்களை அழைத்து அவியுணவு வழங்குவர். அவனுடைய திருமுகங்களில் ஒன்று வேதமந்திர விதிப்படி மரபு தவறாது அந்தணர்கள் புரிகின்ற வேள்விகளைத் தீங்கின்றிப் பாதுகாக்க நினைக்கின்றது.

முருகனை ஞானபண்டிதன் என்று வழிபடுவது பெரியோர்கள் மரபு. ஞானமே திருவுருவாக வாய்த்த பிரான் அவன். பலருக்கு மெய்ஞ்ஞான உபதேசம் செய்ததாக புராணங்கள் கூறும். சிவபிரானுக்கே உபதேசம் செய்தமையினால் **குமரகுருபரன்** என்ற திருநாமத்தைப் பெற்றான். அவன் எல்லாக் குருக்களிலும் மேலான குரு. முருகன் தனித் தலைமைப் பெரும் குரவன். ஆதலின் அவன் இறுதியிலும் இறுதியாக எஞ்சிய பொருளை ஞானவேட்கை உடையவர்கள் இன்புறும்படியாக விளக்குவான். இத்தகைய அருட்செயலால் தெளிவில்லாத திசைகள் எல்லாம் விளக்கம் பெறுகின்றன. இந்தக் காரியத்தை முருகனுடைய **மற்றொரு முகம்** செய்கின்றது. சந்திரனைப் போல விளங்குவது அந்த முகம். அறிவு நிறைவுக்குச் சந்திரனை உவமையாகச் சொல்வர். இங்கே உருவத்தாலும் ஆற்றலாலும் அந்த முகம் திங்களைப் போல திசை விளக்குகின்றது.

பகைவர்களாக வருபவர்களைத் தேய்த்து, மிகநீண்டு செல்லும் யுத்தங்களை முடித்துக் கோபங் கொண்ட உள்ளத்தோடே போர்க் களத்தில் வெற்றிக்கு அறிகுறியாகக் கள வேள்வி செய்பவன் அவன். இந்த களவேள்வியை செய்வது அவன் திருமுகங்களில் ஒன்றின் வேலை.

ஒரு தலைவன், தலைவியை அடுப்பாரும் கொடுப்பாரும் இன்றித்தானே கண்டு உளம் கலந்து அளவளாவும் இன்பமே சிறந்த இன்பம். இவ்வின்பத்தை முருகன் வள்ளி எம்பிராட்டி பால் பெற்முன். குறவர் மடமகளும் கொடிபோன்று இடையை உடையவளுமாகிய மடவரல் வள்ளியொடு இன்புற்று மகிழும் செயலைப் புரிவது, அவன் திருமுகங்களில் ஒன்று.

முருகன் தன் ஆறு திருமுகங்களாலும் இயற்றும் செயல்களைக் கூறும் வாயிலாக நக்கீரர் ''அவன் பேரொளி படைத்தவன். அடியார்க்கெளியன், வேள்வி காவலன், ஞானவள்ளல், வீரன், இன்பத் தலைவன் என்பதை புலப்படுத்திஞர்''.

ஒருமுகம்:
மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்ததன்று

ஒருமுகம்:
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினிது ஒழுகிக்
காதலின் உவந்து வரம் கொடுத்தன்றே

ஒருமுகம்:
மந்திர விதியின் மர புளிவழாஅ
அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே

ஒருமுகம்:
எஞ்சிய பொருளை ஏம்உற நாடித்
திங்கள் போலத் திசை விளங்கும்மே

ஒருமுகம்:
செறுநர்த் தேய்த்துச் செல் சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே

ஒருமுகம்:
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகை அமர்ந்தன்றே.

**ஆங்கம்:**
மூவிரு முகனும் முறை நவின்று ஒழுகலின்....

அஞ்சுமுகம் தோன்றின் ஆறுமுகந் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல் தோன்றும் —
நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா என்று ஓதுவார் முன்.

ஏறுமயில் ஏறி விளையாடுமுகம் ஒன்றே
ஈசனுடு ஞான மொழி பேசுமுகம் ஒன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்த்தமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம் புணரவந்தமுகம் ஒன்றே
ஆறுமுகம் ஆன பொருள் நீயருளல் வேண்டும்
ஆதி அருணசலம் அமைந்த பெருமாளே

மூவிரு முகங்கள் போற்றி, முகம்பொழி கருணை
போற்றி
ஏவரும் துதிக்க நின்ற ஈராறு தோள்கள்
போற்றி
காஞ்சிமாவடி வைகும் செவ்வேள் மலரடி
போற்றி அன்னுன்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல்
போற்றி! போற்றி!

# மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்

வித்துவான், பண்டிதர் மு. கந்தையா B.A. (*Hons.*)

**வேத** நூல் நெறியும் சிவாகம விதிமுறையும் என்னும் இரண்டினையும் அரவணைத்துக் கொண்டியல்கின்ற வைதிகம் என்னும் தனிச்சிறப்பியல்போடு விளங்குவது நம் சைவசமயம். இவ்வைதிகம் என்பது ஒரு சாஸ்திரமுமல்ல. சம்பிரதாயமுமல்ல; ''எங்கும் எவையும் எரியுறும் நீர்போல் ஏகம் தங்குஞ்'' சிவபரம்பொருள் அவற்றின் வேருய்த்தானே தனியாயும் நிற்கும் தன்மை போல சாஸ்திரங்கள், சம்பிரதாயங்கள், சட்ட திட்டங்கள் அனைத்திலும் எரியுறு நீர்போல் வியாபித்திருந்தாலும் அவற்றினுற்கூட விளக்கிக்கொள்ள முடியாது. ''தானே தனி''யாய் நிற்கும் தனித்தன்மை இதற்குண்டு. ஆனால் கால இட்டத்தொடு கலங்கியோடுங் கருத்தோட்டத்துடனே கலந்தோடும் பண்பு இவ்வைதிகத்துக்கு இல்லையாகும். அங்ஙனமாதலினுலே நவீனக் கருத்து வளர்ச்சி இதனேடு ஒன்றில் முட்டி மோதிக் கொள்ளும் அல்லது இதனை மூடி மறைக்க முயலும். அப்படியான ஒரு கால தெசை நம் தமிழ் நாட்டுக்கு கி. பி. ஏழாம் நூற்ருண்டளவிலே ஏற்படுவதாயிற்று. வாழ்க்கைபற்றியும், வழிபாடு பற்றியும், சமயதத்துவ உண்மைகள் பற்றியும் மக்களுக்கு ''நல்ல வழிகாட்டுகிறேம்'' என்று சொல்லிக்கொண்டு நாடெங்கிலும் பரவிய அக்கால நவீனர் **சமணர்** என்று அழைக்கப்பட்டனர். வேத நிந்தனை, ஆகம நிந்தனை, சிவாலய நடை முறைகளிற் புறக்கணிப்பு, சைவசமய சின்னங்களை பரிகசித்தல் ஆதியாம் செயல்கள் அந் நவீனர் முயற்சியால் நாடு முழுவதிலும் பல்கிப் பெருகின. இதனுல் சைவத்திற்கு ஏற்பட்ட தாழ்வை தமக்கு ஏற்பட்ட இழிவை, தம் நாட்டுக்கு விளையக் கிடந்த பழியை எண்ணி இரங்கி வேதனைப்படத் தக்க சீவன்கள் மிகச் சிலவே நாட்டில் மிஞ்சுவனவாயின. தமிழ் நிலப்பெரும் பரப்பிலே — பல கோடி மக்கள் மத்தியிலே, தமது சீவாதாரமான சமயத்துக்கு நேர்ந்த அவமானம் தாங்க மாட்டாத வேதனை ஒரு சில சீவன்களிடத்திலேதான் ஒன்றிக் கிடப்பதெனில் அதனை எப்படி எடுத்துரைப்பது! **''இருவர் தம் பாலுமன்றிச் சைவமங்கு எய்தாதாக''** என்று அந்நிலையைச் சேக்கிழார் உணர்ச்சி ததும்ப எழுதிக் காட்டியிருக்கிருர். இந்த இருவராவார் மதுரையிலிருந்த **மங்கையர்க்கரசியார், குலச்சிறையார்** என்போர்.

இவர்களைப் போலவே சீகாழியில் இருந்து இதற்காக வேதனையுற்ற இருவர் சிவபாத விருதயர், பகவதியார் என்னும் அந்தணத் தம்பதிகள் ஆவர். அவர்களுக்கு ஏலவே பிள்ளையில்லாக் குறையுமொன்று இருந்திருக்கலாமோ தெரியாது. ஆனால் நாட்டில் பரவும் நவீனத்தை அழித்து வைதிகத்தை நிலை நாட்டிச் சைவத்தின் மானங்காக்க ஒரு பிள்ளையில்லையே என்ற குறை. அந்தக் குறையையும் அகப்படுத்தி அவர்களை வேதனைப்படுத்துகின்றது. பழுத்த சிவபக்தியாளர்களாகிய அவ்விருவரும் இப்பெருங்குறை நீங்க வழி காண்கின்றனர். சிவபாதவிருதயர் காதலனைப் பெறக் கருதி அதற்கான விரத நியமங்களிலீடுபட்டிருக்கின்ருர். **''பரசமயம் நிராகரித்து நீருக்கும் புனைமணிப் பூண் காதலனை''**ப்பெறுதல் அவர் குறிக்கோளாகின்றது. அவர் குறிக்கோளை வழுவாமல் அப்படியே நிறைவேற்றி வைக்குமாறு அவர் மனைவியார் பகவதியார் அல்லும் பகலும் சீர்காழி வீற்றிருந்தருளுஞ் சிவபரம்பொருளை நேர்ந்து வினவி வருகிருர்.

நாட்டின் தேவையின் தரத்துக்குகந்த ஒரு புதல்வனையே அவர்கள் வேண்டுகின்ருர்கள். அப்படியான ஒரு **புதல்வனைப் பெறுதற்கான தவநிலைத் தராதரம்** அவர்களுக்கும் வாய்த்திருக்கின்றது. சிவபரம்பொருளும் தரமறிந்து கொடுக்கும் அருட்பண்பிற்கிணங்க மிகமிகத் தரமான புதல்வர் ஒருவரையே அவர்க்குத் தந்து வைக்கிருர்.

மாயாகன்மத் தொடர்புகள் முற்றறக் கெட்டொழிந்து ஏலவே சிவபுவனத்திற் சிவனையே சிந்திக்கும் நிலையிலிருந்த பிரளயாகலர்க்குள்ளே தரமான ஒருவரைத் தேர்ந்து சிவபரம்பொருள் சிவபாத விருதையர்க்குப் பகவதியார் வயிற்றிலே புதல்வராக அவதரிக்கத் தந்து வைக்கிருர். இங்ஙனம் அவதரிக்கும் புத்திரரே மூன்று வயதில் ஞானப்பால் பெற்றுண்டு திருஞானசம்பந்தராகி இந்நிலவுலகிற் பதினுறு ஆண்டுகள் விளங்கித் தமது உருவாலுந் திருவாலும் உபதேசங்களாலும் வைதிகம் என்பது இன்னது என்பதனை முன்னும் முன்னும் எவரே

னும் நினைத்துப் பார்த்திருக்க முடியாத அளவிலன்றிப் பின்னும் பின்னும் யார் யாருஞ் சந்தேகிக்க முடியாத அளவுக்கு அழுத்தந் திருத்தமாக உணர்த்தி வைத்துள்ளார். இது அவர் திருவவதாரத்தின் மகிமைகளுள் முதலாவதாகும். அவர்க்கு வழங்கிய திருநாமங்களுள் ''வைதிக சூளாமணியார்'' ''வைதிக சேகரா'' என்னுமிரண்டும் மிகத் துல்லியமானவைகளாய் விளங்குதல் காணலாம்.

மேலும், சிவசின்னங்களுள் முதன்மை வாய்ந்த **திருநீற்றின்** அருமை பெருமைகளை சிந்தியாத வகையிலே அதனை அவமதித்தொதுக்கும் நடவடிக்கைகளிலீடுபட்டிருந்த சமணர்களுக்கெதிரே, சிவ சின்னம் மாத்திரமன்று; மந்திரமும் இதுதான்; மருந்தும் இதுதான் என்று அதன் அதியற்புத விலாசங்களை அகிலமுமறிந்துய்யுமாறு பாண்டியனுக்கு வெப்பு நோய் தீர்த்த கட்டத்திலே வைத்துப்பகிரகங்கமாக வெளியிட்ட பெருமையும் திருஞானசம்பந்த சுவாமிகளுக்கே உரியதாகும். சிவதலங்கள் பாடல் பெற்றதலம் என்ற சிறப்புக்குரியவாதல் போல, திருநீறு பாடல் பெற்ற சிவசின்னம் என்னும் பெருமையும் மேன்மையும் பெறவைத்த மகிமையும் அவர்க்கே உரியதாகும். இன்னும் அழலோம்பும் அந்தணர்கள் அனைவரும் சிவ மூலமந்திரம் பயின்று சிவவேதியர்களாகவே ஒழுக வேண்டுமென்பதை **''வேதியர்க்கு அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே''**, என்பனவாதி அருள்வாக்குகளினால் வற்புறுத்தி வைத்தவரும் திருஞானசம்பந்த சுவாமிகளேயாதல் குறிப்பிடற்பால தொன்றாகும்.

இங்ஙனம் நாட்டிலே வேதம் ஒலிக்க வேண்டும், வேள்வி நிகழ வேண்டும், சிவாகம விதி முறை தழுவப்பட வேண்டும், திருநீற்றின் பெருமை மதிக்கப்பட வேண்டும்; சிவமூல மந்திரமே முத்திசாதனமாகக் கொள்ளப்பட வேண்டும்; எந்நிலையிலும் சிவவழிபாடொன்றே சமய நெறியாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்; முத்திநெறி மட்டுமன்று வாழ்க்கைநெறியும் சிவவழிபாட்டினாலேயே செழிக்க வேண்டும்; ''மண்ணினல்ல வண்ணம் வாழலாம் வைகலும் — எண்ணினல்ல கதிக்கியாதுமோர் குறைவில்லை — கண்ணிலல்லஃதுறா உறுங்கழுமலவளர்நகர்ப் — பெண்ணினல்லாளோடும் பெருந்தகையிருந்ததே'', மண் பொலிய வாழ்வாரே விண் பொலிய வாழ்வாரே''; ஆலய வழிபாட்டினாலே வினை கெடுமென்பது அசம்பாவிதம் என்று நவீனர் (சமணர்) உரைப்பது பொய். அதனால் வினைகெடுதல் நிச்சயம். அதற்கு **''ஆணை நமதே''** — என்பனவாதி சைவஞான ஆசார அநுட்டான உண்மைகளை உலகுள்ள மட்டுஞ் சைவம் உய்வதற்கு வேண்டிய அளவு வற்புறுத்தி வைத்த மகிமை முற்ற முற்றத் திருஞானசம்பந்த சுவாமிகளின் திருவவதார மகிமையேயாதல் ஒருதலையாகும்.

இன்று சைவத்தை வளர்க்க, சைவத்தின் குறைவு போக்க என்றென்று எத்தனையோ பலர் என்னென்னவோ எல்லாஞ் செய்து வருகின்றார்கள். அவர்களுக்கு யாம் அறுதியாகக் கூறக்கூடிய ஆலோசனை ஒன்றேதான். திருஞானசம்பந்த சுவாமிகளின் தேவாரங்களைப் படியுங்கள். அதனால் உண்மையான சைவ நிலைக்கு உண்மையில் என்ன குறைவு ஏற்பட்டிருக்கின்றதென்பது புலனாகும். அடுத்து அவர் தம் வாழ்க்கை வரலாற்றை விளங்கிப் படியுங்கள். அதனால் உள்ள குறைவை நீக்குதற்கான உணர்ச்சியும் தீரமும் உடனடியாகவே தோன்றும். இவ்வளவில் அமைதல் மேல்.

* *

தென்னி லங்கையர் குலபதி மலைநலி தெடுத்தவன் முடிதிண்தோள்
தன்ன லங்கெட அடர்ந்தவற் கருள்செய்த தலைவனூர் கடல்வாய்ப்
பொன்னி லங்கிய முத்துமா மணிகளும் பொருந்தின மாதோட்டத்
துன்னி யன்பொடும் அடியவ ரிறைஞ்சுகே தீச்சரத் துள்ளானே

—சம்பந்தர்

# சேக்கிழார் வகுத்த அப்பர் ஆற்றுப்படை

ச. கார்த்திகேசு சுவாமிகள், அருளொளி நிலையம்

சமயாதீதப் பழம்பொருளாம் இறைவனைச் சைவ நன்மக்கள் சிவமெனவுஞ் சோதியெனவும் போற்றித் துதிப்ப. சைவ சமயம் தொண்டை மண்டலத்தில் பண்டைத் தமிழ் மக்களால் போற்றிப் புகழப்பட்டு வந்தது.

அண்டத்திலும் பிண்டத்திலும் ஆண்டவனை காணும் தத்துவப் பெரியார்களில் சேக்கிழார் பெருமான் முதன்மை வாய்ந்தவர். அவர் சைவ சமயத்துக்கு ஆணிவேர் போன்று தொண்டாற்றி நிலவிய அறுபத்தி மூன்று நாயன்மார்களின் பிராண நிலைகளையும், அவரவர்களின் திவ்விய வாழ்க்கை வரலாறுகளையும்' அவரவர்கள் முத்தியின்பமெய்திக் கரந்த மூர்த்தி, தலம், தீர்த்தம் முதலியவைகளின் மகிமைகளையும், தமதகவுணர்ச்சி கொண்டு பாடியது பெரிய புராணம்.

பெரிய புராணம் நமக்குச் சைவ சமய பண்பாடுகளை நன்குணர்த்தி உயிர்க்குயிராய் நிலவும் பிராணநாயகனும் இறைவனை அறியும் மார்க்கத்தை நன்குணர்த்துகிறது. திரிகரண சுத்தியுடன் இப்புராணத்தைக் கற்று அல்லது படிக்கக் கேட்டு, அதன் உட்பொருள்களை நன்கு விளங்கிச் சாதனை செய்வோர் எவரும் நாயன்மார்கள் அடைந்த பேரின் பங்களைத் தாமும் அடைவர் என்பது திண்ணம்.

இந்நாயன்மார்களுள் திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் சுந்தரரும் முதன்மை வாய்ந்தவர்கள். அவர்கள் முறையே தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம் என்ற படிகளில் நின்று சிவபெருமானுக்கு — அவர் புகழ்பாடித் தேவ ஆரமாய்ச் சூட்டி, அவரை வணங்கித் தொண்டாற்றினார்கள். அவ்வாரங்கள் இன்றும் வாடா மலர் மாலைகளாய்த் திகழ்கின்றன அவைகளைப் படித்துப் போற்றதார் யாவருளர்?

திருநாவுக்கரச சுவாமிகள் — (அடிமையாகக்) கைத்தொண்டுடன் பாடற் தொண்டும் ஆற்றினர். அவர் பாடிய தேவாரப் பதிகங்கள் சரியை, கிரியை, யோகம் ஞானம் என்ற பாதங்களின் மூலம் எவ்வண்ணம், மக்கள் சாதனை செய்து, சிவனது திருவடி நீழலை அடையலாம் அல்லது அவருடன் இரண்டறக் கலக்கலாமென்று நன்கு விளக்குகின்றன.

நம் தமிழகத்தில் முதன்மை வாய்ந்ததும் நினைக்க முத்தி நல்குவதுமாகிய தலம் திருவண்ணாமலையாகும். அதனை அங்கிருந்து தவம் இயற்றிய குகை நமச்சிவாய சுவாமிகள்,

''ஆதி நெடுமால் அயன்காணவன்று பரஞ்
சோதிச் செழுஞ் சுடராய்த் தோன்றுமலை —
வேதம்
முழங்குமலை சிந்திப்பார் முன்னின்று முத்தி
வழங்குமலை அண்ணாமலை'' என்று பாடிப் போற்றியுள்ளார். அத்தகைய தலத் தேவனை நாயனார்,

''தேடிக்கண்டு கொண்டேன் திருமாலொடு
நான்முகனும்

தேடித் தேடொணாத் தேவனை யென்னுள்ளே
தேடிக் கண்டுகொண்டேன்'' என்று திருஅங்கமாலைப் பதிகத்தில் கூறியுள்ளார். உண்மையில் உடம்பினுள் உத்தமனைக் கண்டு அவனுடன் ஒன்றுதலே அறிவுடைமையாகும். இவ்வுண்மையையே தேவரும் ''எப்பொருள் எத்தன்மைத்தாயினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'' என்றும், ஔவையார்,

''உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லா
முடம்பினிலுத்தமனைக் காண்'' என்றும், பட்டினத்தடிகள் ''உடலுக்குள் நீ நின்றுலாவினதைக் காணாமல், கடமலை தோறும் திரிந்து காலலுத்தேன் பூரணமே'' என்றும்

''வாசிதனைப் பார்த்து மகிழ்ந்துனைத்தான்
போற்றாமல்
காசிவரை போய்த்திரிந்து காலலுத்தேன்
பூரணமே''
என்றும் பாடியுள்ளார்கள்.

மேற்கூறிய வாசியே பிராணவாயு, கலைசரம், மூச்சு, ஆதிசேடம், அநந்தன், கிரியாசத்தி, பரி, குதிரை என்ற பரியாய நாமங்கள்

பொருந்திய நாசிவழியூடாக நடனமிடும் சுவாசமாகும்.

''ஆடும் சுவாசமே ஓடும் பிரகாசம். அதை வேடிக்கை ஆசனத்திற் பார் பார்'' என்று ஒருவர் பாடியுள்ளார். இங்கு ஓடும் பிரகாசமே சிவம். சிவம் போய்விட்டால் இருப்பது சவமே. நாங்கள் யாபேரும் சவநெறியடையாதிருக்கும் உபாயத்தை, அப்பர் சுவாமிகள்,

''காலபாசம் பிடித்தெழு தூதுவர்
பாலகர் விருத்தர் பழையாரெனர்
ஆலநீழ லமர்ந்தவாட் போக்கியார்
சீலமார்ந்தவர் செம்மையுள் நிற்பரே'' என்றும், ''விடுத்த தூதுவர் வந்து வினைக்குழிப் படுத்த போது பயனிலை பாவிகாள்
அடுத்த கின்னரங் கேட்கும் வாட்போக்கியை
எடுத்தும் ஏத்தியும் இன்புறுமின்களே !'' என்றும், திருவாட்போக்கி என்ற பதிகத்திற்பாடியுள்ளார். இக்கருத்தையே மாணிக்கவாசக சுவாமிகள்

''ஞானவாள் ஏந்தும் ஐயர் நாதப்பறையறைமின்
மானமா ஏறும்ஐயர் மதிவெண்குடை கவிமின்
ஆனநீற்றுக் கவசம் அடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோம்நாம் மாயப்படைவாராமே''.
என்ற திருவாசகப் பாவாலும்; திருமூல நாயனர்

''நாவின் நுனியை நடுவே விசிறிடிற்
சிவனும் அங்கே சிவனும் உறைவிடம்
மூவரு முப்பத்து மூவருந் தோன்றுவர்
சாவதும் இல்லைச் சதகோடியூனே'' என்ற திருமந்திரப் பாவாலும்; அருணகிரிநாதர்

''தண்டாயுதமுந் திரிசூலமும் விழத்தாக்கி உன்னை
திண்டாட வெட்டி விழவிடுவேன் செந்தில் வேலனுக்குத்
தொண்டாகிய என்அவிரோத ஞானச்சுடர் வடிவாள்
கண்டாயடா அந்தகா வந்துபார் சற்றென் கைக்கெட்டவே''.

என்ற கந்தரலங்காரப் பாவினுலும் நன்கு விளக்கியுள்ளார்கள்.

மேலும் மேற்கூறிய சிவமே — சீவசுவாசமே பரிபூரணப் பொருளாய் எவ்வுயிரையும் அவ்வவ்வுயிர்க்கு உயிராய் — பிராணனுய் நின்று இயக்குகின்றது. இவ்வுண்மையை நன்குணர்ந்தவனே ஞானி. இவன் தன்னில் தனக்காதாரமாயுள்ள பிராணனை எவ்வெவ்விடத்தில் வைத்து வணங்கினுலும் அப்பிராணனே அவ்வத்தானத்திற்குரிய அதி தேவதையாய் நின்று நற்பலனையடைவிப்பான். அத்தகைய ஞானி அவ்வத்தானத்துற்ற பிராணனைப் பற்றி ஒவ்வோர் புராணம் புனைந்து போடுவான். அவன் அகவுலகிற் புகுந்து அருள் நெறி கொண்டு, எவ்வுயிரையும் தன்னுயிர்போல் உணருகிறவன். அவனுக்கு சாதி, குலம், பிறப்பு என்னும் பேத புத்தி கிடையாது. அதனுல் அவன் நமது ஔவைப் பிராட்டியார் கூறிய,

''நன்றென்றுந் தீதென்றும் நானென்றுந் தானென்றும்
அன்றென்றும் ஆமென்றும் ஆகாதே — நின்ற நிலை
தானதாந் தத்துவமாஞ் சம்பறுத்தார் யாக்கைக்குப்
போனவா தேடும் பொருள்''
என்ற நல்வழி வெண்பாவின்படி, தானதாந் தத்துவம்'' என்ற நிலையிலுள்ளவன் என்றறிய வேண்டும். இது பற்றியே அப்பர் சுவாமிகள்,

''சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கலால்
நலமிலனு டொறும் நல்குவானலன்
குலமிலராகினுங் குலத்துக்கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சிவாயவே'' என்று கூறியுள்ளார்.

''தன்னை அறிந்தவன் தலைவனை அறிவான்'' என்பது ஆன்ருேர் வாக்கு. தன்னையும் தனக்காதாரமான தலைவனையும் தன்னுள் கண்டவன், அத்தலைவனே எல்லாவுயிர்களையும் இயக்குபவன் என்றறிந்து எவ்வுயிரையுந் தன்னுயிர் போலப் பாவித்து யாபேரிடத்தும் தன்னையே கண்காணிக்கின்ருன். இதனை அப்பர் சுவாமிகள்,

''தன்னிற் தன்னையறியுந் தலைமகன்
தன்னிற் தன்னையறியிற் தலைபடும்
தன்னிற் றன்னை யறிவிலனுயிடில்
தன்னிற் றன்னையுஞ் சார்தற்கரியனே'' என்கிருர். இதனை நன்குணர்ந்தால் இறைவன் சந்நிதி யாவருக்கும் பொதுவென்றுணரலாம்

மக்கள் யாபேரும் மதலைகளாய் பிறந்து, வளர்ந்து, உண்டிக்கிரை தேடியுழன்று, பிணிவாய்ப்பட்டு வருந்தி இறந்து போகிருர்கள். இவைகளைத் தவிர்க்குமுபாயத்தை நாயனர்,

''பிறப்பு மூப்புப் பெரும்பசி, வான்பிணி
இறப்பு நீங்கி இங்கின்பம் வந்தெய்திடுஞ்
சிறப்பர் சேறையுட் செந்நெறியான்கழல்
மறப்பதின்றி மனத்தினுள் வைக்கவே'' என்று திருச்சேறைப் பதிகத்தில் கூறியுள்ளார்.

''ஐம்புலனை வென்று ஆனந்த வின்பத்தழுந் துவதே முத்தி'' என்கிறார் தாயுமான சுவாமிகள். ஆம்! ஐவேடர் ஆட்டத்தில் ஆனந்தங் கொள்வோர்க்கு மெய்வேடர் எங்ஙனந் தோற்றுவார். ஐம்புலனை வென்று, நோய் பிணி வராமல் காக்கும் உபாயத்தை நாயனார்,

''மூக்கு வாய் செவி கண்ணுடலாகி வந்
தாக்குமைவர்த மாப்பை அவிழ்த்தருள்
நோக்குவான் நமைநோய்வினை வாராமே
காக்கும் நாயகன் கச்சியேகம்பனே'' எனத் திருவேகம்பப் பதிகத்தால் நன்கு விளக்குகின்றார்.

தமிழன் தான் ஒரு நூலை அல்லது கடிதத்தை எழுதவாரம்பிக்கு முன் அது இனிது முடிதற் பொருட்டு அதற்குக் காப்பாக ஓர் வட்டத்தை வரைந்து அதை தொட்டாற்போல் ஒரு வரியை இழுத்து விடுகிறான். அது 'பிள்ளையார் சுழி' என வழங்கப்படுகிறது. அதன் தத்துவக் கருத்தை ஒருவன் நன்குணர்ந்து விட்டால் அவனுக்குத் தன்னையோ தனக்காதாரமான தலைவனையோ அறிதற் பொருட்டு வேறு நூற்களைக் கற்க வேண்டியதில்லை. இதையே ''ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்தோதிய நூலின்பயன்''

''கல்லாத மூடர் திருவுருக் கொண்டிடச்
சொல்லாததென்ன செயல்'' என்று ஔவைப் பிராட்டியாரும்,

''நற்குஞ்சரக் கன்று நண்ணிற் கலை ஞானங்
கற்குஞ்சரக் கன்று காண்'' என்று உமாபதிச் சிவாச்சாரியாரும் கூறியுள்ளார்கள்.

பிள்ளையார் சுழியிலுள்ள வட்டம் நாதத்தையும், வரிவிந்துவையும், அதன் அசைவு கலாநிதியையும் குறிக்கும். இதுவே ''ஓம்'' என்னும் பிரணவ (தாரக) மந்திரமாம். இதற்குள் நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகாயம், சூரியன் சந்திரன் சீவன் முதலிய சராசரங்களும் பஞ்சாச்சர அதிதேவதைகளாம் பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசன், சதாசிவன் என்ற மூர்த்திகளும் அவைகளோடியைந்து, அகிலங்களைத் தொழிற்படுத்தும் சத்திபேதங்களும் அடங்கியிருக்கின்றன. ''இவையெல்லாங் கூடி உடம்பாயவொன்றில் அவையெல்லாமானது விந்து'' என்றார் ஔவையார்.

இவ்வெட்டுக்கொண்டான் என்ற வரிவடிவாகிய விந்தே நாதவடிவாகிய ஓங்காரப் பிரணவ வட்டத்துள் நுழையும்போது ''ஏரம்ப மூர்த்தியாகவும், நுழைந்த பின் ஏகம்ப மூர்த்தியாகவும் ஆகிறது. இதில் எந்த மூர்த்தியை வழிபட்டாலும் உடல் உயிரும் பூரணமும் ஒன்றாயுள்ள இறைவனே வேண்டுவார் வேண்டுவதை ஈபவனாய் இருக்கிறான்.

கோடி மறைகளிலுங் கூறரிய வான்பொருள் இது. இதை ''நெறிபட்ட சற்குரு நேர்வழி காட்டில் பிறிவற்றிருக்குஞ் சிவம்'' என்றார் ஔவைப் பிராட்டியார்.

''ஓங்காரத்துள்ளே உதித்த ஐம்பூதங்கள்
ஓங்காரத்துள்ளே உதித்த சராசரம்
ஓங்காரத் தீரத்துயிர் மூன்றுமுற்றன
ஓங்காரசீவ பரசிவரூபமே'' என்றார் திருமூலநாயனாரும்.

மேற்கூறிய ''ஓம்'' என்னும் பதம் அ, உ, ம் எனும் எழுத்துக்களைத் தன்னுள் அடக்கியுள்ளது. அவையே முன்கூறிய நாதம், விந்து, கலாநிதி எனப்படும். தமிழில் ''அ'' என்னும் எழுத்து எட்டையும், 'உ' என்னும் எழுத்து இரண்டையுங் குறிக்கும். இதை ஒருவர் ''எட்டும் இரண்டுமின்னதென்று யானுமறியாதபடி வெட்ட வெளிதனிலே விட்டாய் நிராமயமே'' என்று பாடுகிறார்.

தமிழன் தனது ஆதிநிலையீதென்றறியாது அவலை நினைந்து வெறுமுரலை இடிப்பார் போன்று சொல்லும் பொருளுமாயுள்ள தேசோமயப் பொருளைச் சொல்லளவில் கற்றுப் பலரும் மெச்சும்படி நாக்கடிப்பாக வாய்ப்பறை அறைந்து விட்டால் 'தானதுவாகி' விடலாமென்று எண்ணுகிறான். என்னே ! இவன் அறியாமை. வெறுமுரலையிடித்தால் அவலதுவாகுமா? அந்தச் தேசோமயப் பொருள்' சொல்லிறந்த இடத்திலுள்ளது. இது ஒருவன் தானதுவாக மாற்றிப் பிறந்த நிலை அல்லது தமிழன் கூறும் ''நான் மறையாகும். இவ்வுண்மையை அப்பர் சுவாமிகள்,

''பூமேலானும் பூமகள் கேள்வனும்
நாமே தேவரெனுமை நடுக்குறத்
தீமேவுமுருவா திருவேகம்பா
ஆமோ அல்லற்பட வடியோங்களே''.

''கறைகொள் கண்டத்தெண் தோளிறை முக்கணன்
மறைகொள் நாவினன் வானவர்க்காதியான்
உறையும் பூம்பொழில் சூழ்கச்சியேகம்பம்
முறைமையாற் சென்று முந்தித் தொழுதுமே''

''சாக்கியத்தொடு மற்றுஞ் சமண் படும்
பாக்கியம் மிலார் பாடு செலாதுறப்
பூக் கொள்சேவடியான் கச்சி யேகம்பம்
நாக் கொடேத்தி நயந்து தொழுதுமே''

''பொய்யனைத்தையும் விட்டவர் புந்தியுள்
மெய்யனைச் சுடர் வெண்மழுவேந்திய
கையனைக் கச்சியேகம்பம் மேவிய
ஐயனைத் தொழுவார்க்கில்லை யல்லலே''

என்ற திருவேகம்பத் திருப்பதிகத்தில் நன்கு விளக்கியுள்ளார். அவைகளை நன்கு பயின்று நாமும் பிறந்துள்ளாப் பெருநெறியாம் திருவடி நீழலையடைவோமாக !

''என்னிலாரு மெனக்கினியா ரில்லை
என்னிலு மினியா னொருவ னுளன்
என்னுளே யுயிர்பாய்ப் புறம்போந்து புக்
கென்னு ளேநிற்கும் இன்னம்பரீசனே''

அப்பர்.

எங்கும் நிறைந்த இறையே போற்றி
ஆங்காங் காளும் அரசே போற்றி.

— சுபம்

## கடவுளைக்காண்பதெப்படி

தன்க்குப்பிள்ளை இல்லை என்று மனிதன் உதிர்க்கும் கண்ணீர் ஆருய்ப் பெருகின்றது. தனக்குச் செல்வம் இல்லையென்று மனிதன் துன்பத்தால் ஏங்கி வாடித்தவித்துத் துக்கக் கண்ணீர் வடிக்கின்றான். ஆனால், கடவுளைக் காணவில்லையே என்று ஏங்கி இரங்கிக் கண்ணீர் உதிர்ப்பவர் எத்தனையோபேர் இருக்குன்றனர். எவன் இறைவனையே நாடி வாடுகின்றானோ அவனே இறைவனைக்காண வல்லவன். இறைவனைக் காணவேண்டும் என்று தவித்துத் துடிப்பவனை, இறைவனைக் கண்டவன் என்றே கூறிவிடலாம்.

—இராமகிருஷ்ணபரமஹம்சர்

# சுந்தரர் தந்த செந்தமிழ்

பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை

**பூமாலையிற் பன்மடங்கு சிறந்தது பாமாலை**

**''தண்மல ரும்பொழில் தென்கம லேசர்க்குச் சாத்துகின்ற**
**ஒண்மலர் சொன்மலர்க் கொவ்வாது போலுமற் றோர்புலவன்**
**பண்மலர் சாத்திப் பணிகொண்ட வாபச்சை மால்சிவந்த**
**கண்மலர் சாத்தியுங் காண்பரி தான கழல் மலரே''**

*(கமலேசர் — திருவாரூர்த் தியாகேசர், ஒண் மலர் — ஒளிபொருந்திய பூ; சொல்மலர்— பண்மலர் — பாட்டு).*

இப்பாடல் திருவாரூர் நான்மணிமாலையிலுள்ளது. திருமால் இறைவன் இன்னருளை வேண்டி ஆயிரந் தாமரையால் அவன் கழலை வழிபட்டார். ஒரு தினம் ஒரு தாமரைப்பூ குறையக் கண்டு தம் கண்ணாகிய மலரையும் தாமரை மலர்களுடன் இட்டு வழிபட்டும் இறைவன் பூங்கழல் கிட்டவில்லை. ஆயின் செந்தமிழில் வல்ல சுந்தரமூர்த்தி அடிகளார் சொல்லாகிய பாமலர் கொண்டு சிவபிரானையே பரவையார்பால் தூதுவராக்கித் தமக்குப் பணியாளாக்கி விட்டார். ஆகவே பூவாகிய மலரினும் இறைவன் பெரிதும் உவப்பது பாவாகிய மலர்தானென்பது தெளிவாகின்றது. இறைவனே பாடலை நாடி வருகின்றான்.

**''மற்றுநீ வன்மை பேசி வன்தொண்டன் என்னும் நாமம்**
**பெற்றனை நமக்கும் அன்பில் பெருகிய சிறுவன் மிக்க**
**அர்ச்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண் மேல் நம்மைச்**
**சொற்றமிழ் பாடுகென்றார் தூமறை பாடும் வாயார்''**

சுந்தரரை வலியத் தேடி அடைந்த சிவம், தமக்கு அடியவர் அன்பு கனியப் பாடும் பாட்டே சிறந்த பூசனையாகுமாதலால் சுந்தரர் தம்மீது தோத்திரப் பாடல் வேண்டும் என்று கேட்டுக் கொண்டதாகப் பெரிய புராணம் எடுத்தியம்புகின்றது. ''தூமறை பாடும் வாயார்'' என்ற பாட்டின் பகுதி இறைவனுக்குப் பாடலிலுள்ள ஆராமையை சிறப்புறத் தெரிவிக்கின்றது.

''பா வாரின்சொற் பயிலும் பரமரே'' என்று சம்பந்த சுவாமிகளும் செழுந்தமிழ்க் கொழும் பாடற் சொற்களை இறைவன்தானுமே பயின்றின்புறும் பண்பை நமக்குக் காட்டுகிறார்.

''பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும் பெண்சுமந்த பாகத்தன்'' என மணிவாசகரும் செப்புகின்றார்.

''பாடவேண்டு நான்போற்றி நின்னையே'' என்பதும் அப்பெரியார் வாக்கே.

''பாடும் பணியே பணியா அருள்வாய்'' என அருணகிரிநாதரும் முருகன்மீது தாமிடையறாது பாடும் வரத்தை அவனே தந்தருள வேண்டுமென்று வேணவாவுடன் வேண்டுகின்றார்.

''பாட்டினைப் போலாச்சரியம் பாரின்மிசை இல்லையடா'' என்கிறார் பாரதியாரும்.

வாடும் மலர் மாலையினும் வாடாப் பாமாலை பரமனுக்குப் பெரிதும் உவப்பானது என்பது பெரியோர் பாடலடிகளாற்றெளிவாகிறது.

**பாவின் பெரும் பயன்**

தென் தமிழின் பாச்சுவையை மாந்தினர் பரமசிவனார். இனத்தொடும் கூடிப் பாவிருந்தருந்த எண்ணங் கொண்டார் அவர். பராசக்தியும் முருகனும் சவுந்தரமாறனாகிய தம்மொடும் தடாதகைப் பிராட்டி உக்கிர குமார பாண்டியன் எனப் பெயரும் பூண்டு பின் தொடர, தமிழ் மொழி மதுரைக்கு வரலாயிற்று. வந்த நோக்கத்தினிடைக் கிடந்த உட்கிடக்கையை,

''தமரநீர்ப் புவன முழுதொருங் கீன்றுள்
தடாதகா தேவியென் றெரு பேர்
தரிக்கவந் ததுவுந் தனிமுத லொருநீ
சவுந்தர மாறனனதுவுங்
குமாரவேள் வழுதி யுக்கிர னெனப்பேர்
கொண்டதுந் தண்டமிழ் மதுரங்
கூட்டுண வெழுந்த வேட்கையா லெனிலிக்
கொழிதமிழ்ப் பெருமை யாரறிவார்''

என உடைத்துக் காட்டுகிறுர் மதுரைக் கலம்பக ஆசிரியர். (தமரம் — ஒலிக்கின்ற. நீர்ப்புவனம் — கடல் சூழ்ந்த உலகம். கூட்டுண — கொள்ளை கொண்டு உண்ண).

மதுரைத் தமிழ் மதுரம் பழுத்துப் பெருகி ஓடுவதால் நீர் வேட்கை கொண்டான் அதனை அள்ளி அள்ளிப் பருகுதல் போல, இவர்களும் தமிழின் தனிச்சுவையை மாந்த வந்து சேர்ந்தாராம் எனத் தமிழின் பெருமையை அருமையுறக் காட்டுகின்றுர் பாட்டாசிரியர். பாட்டுக்குருகுவான் பணைச் சொக்கனுதலின் பாட்டினுல் ஆக முடியாத தொன்றில்லை.

''பாட நும்பாவம் பற்றறுமே''

''பாடுவார் பசி தீர்ப்பாய்''

''பரவி நாடொறும் பாடுவார் வினைப் பற்றறுக்கும்''

''. . . . எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்
கியாதும் ஐயுறவில்லையே''

என்றின்ன பலவாறெல்லாம் தமிழ் நாவலராம் சுந்தரமூர்த்தி அடிகளார் பாட்டினுற் கிடைக்கும் இம்மை அம்மைப் பயன்களை நாமறியக் காட்டுகிறுர்.

## அருமையுற இறைவனை அழைக்கிறுர் தமிழ் மறை வல்ல சுந்தரர்

செந்தமிழ் கைவந்த சுந்தரனைக் கொண்டு சுந்தரத் துதி பாடுவித்தற் பொருட்டு சிவம் மார்ச்சாரசம்பந்தமாக (பூனை தன் குட்டியைத் தானே தேடி வந்தடையும் முறையில் குரங்கினத்திற்கு மாருன முறையில்) சுந்தரரை வலிய வந்தடைகிறது. குழந்தை தன் விளையாட்டு மிகுதியால் தாயை மறப்பினும் தாய் எப்பொழுதும் எந்த நிலையிலும் தன் செல்வக் குழந்தையின் நினைவாகவே யிருந்து வேண்டுவன உதவுவதனுலே சேக்கிழார் பெருமான்,

''மெய்த்தாயினும் இனியானை அவ்வியன்
நாவலர் பெருமான்
பித்தா பிறைசூடி எனப் பெரிதாந் திருப்பதிகம்
இத்தாரணி முதலா உலகெல்லாம் உய எடுத்
தார்''

என்று தாயிற் சிறக்க சிவம் வந்த வாற்றைக் காட்டுகிறுர்.
(மெய்த்தாய் — ஏனையோரினும் பார்க்கக் குழந்தை மீது நிலைத்த அன்பு வைத்த தாய்) தாயன்பே தலையன்பாதலின் இங்ஙனம் கூறுகின்றுர். குழவிக்கு உடல்தந்து உலகிடை நிலவ வைத்த தாயுமாம். தாய் மெய் கொடுத்தாளெனவே இறையோ மெய்யென்ற உபசார வார்த்தையாற் கூறப்படும் பொய்யாய உடலின்கண்ணுறையும் உயிரினுக்குயிராய் அவ்வுயிரை விட்டு நீங்காதிருக்கும் உயர் பண்பை எடுத்துக் காட்டுஞ் சிறப்பு எம் முளத்தைத் தொடுகின்றது. தாய் பிள்ளையின் சுகநயத்திற் பித்துக் கொண்டாற்போல் இறைவனும் உயிர் உய்து உயர்வடைய வேண்டுமென்ற குன்ரு நல்லருள் கொண்டுள்ளமையால் அவனை 'பித்தா' என்கிறுர் பெரியோர். பிழை செய்த சந்திரன் தன்னை நாடி வந்தடைந்தமையால் அவன் பாவமும் மன்னிக்கப்பட்டது. அதன் மேலும் எவருக்குமெட்டாத இறை செஞ்சடை மீது இனிதிருக்க அவன் பெற்ற நற்பேற்றைச் சுந்தரர் ''பிறை சூடி'' என்ற தொடராற் காட்டுகின்றுர். ''எப்புன்மையரை மிகவே உயர்த்தி விண்ணேரைப் பணித்தி அண்ணு அமுதே'' என்று தானே திருவாசகந் தந்தவரும் இறைவனைக் குறைவற ஏத்துகிறுர். தன் பெருமை காரணமாகவே எம் சிறுமையைப் பொறுத்து நம்மையாளுபவனை ''பெருமானே!'' என விளிக்கிறுர். திருவருள் ஒன்றன் காரணமாகவே இவற்றையெல்லாஞ் செய்பவனை ''அருளாளா'' என அருமையுற அருளிச் செய்கின்றுர். தாம் இறைவனை மறந்த நிலையிலும் அவன் மறையவனுகச் சேணிடை நீங்கி அண்மையில் அணுகி நின்று ஆண்டமையால் ''நல்லூரருட்டுறையுள் அண்ணு'' என்று அழைக்கின்றுர். (அண்ணு — எனக்கு மிக்க அண்மையிலுள்ளவனே!) நன்னெறி என்னும் சிறப்புறு நெறிக்கண் தம்மை நிறுவிய நிமலனை ''நல்லூரருட்டுறையுள் ஆற்றுய்'' என்கிறுர்.
(ஆறு — வழி, ஆற்றுய் — எனக்கு வழியாக நிற்பவனே)

பல தலங்களையும் தரிசித்த சுந்தரர் திருக்கூடலையாற்றிற்கு அருகில் வந்ததும் அங்குச் செல்லாமல் திருமுதுகுன்றை நோக்கிச் செல்லும் வழியை வினவியபோது, மறையவராய் வழிகாட்டி வந்த சிவம் கூடலையாற்றுக்கு அவரை வழிப்படுத்தி அத்தலத்தின் மேல் தேவாரமும் அருளச் செய்தார்.

ஆதலால் சிவபெருமான் நெறிகாட்டும் நாயகர் என்ற அருமைத் திருநாமமும் பெற்ருர். இந்த அதிசயத்தைக் குறிப்பிடும் சுந்தரர் ''அழகன் இவ்வழிபோந்த அதிசயம் அறியேனே'' என்று வியப்புறக் கூறுதல் போலவே அழகாகத் தம்மை வழிப்படுத்திய இறைவனை ''பித்தா பிறைசூடி'' என்ற பதிகத்திலும் (9ஆம் பாடலில்) ''நல்லூர் அருட்டுறையுள் அழகா'' என்று அன்பொழுக மொழிகின்ருர்.

**பெரியபுராணத்திற்கு வித்தித்திட்டு அருமைக் கேதாரமும் ஈழக் கேத்தீச்சரமும் பாடினர்.**

இவ்வண்ணம் ஊனும், உளமும், உயிருங் குழையுந் தமிழ் தந்த நாயனுர் சைவ உலகின் ஒளிவிளக்குகளாயிலங்கும் அடியார் பெயர்களையும் அவர் திருத் தொண்டுகளின் அருமை பெருமைகளையும் நலமுறத் ''தேசமுய்யத் திருத்தொண்டத் தொகை''யாக வடித்தெடுத்துத் தந்திருக்கின்ருர். இத்திருத் தொண்டத் தொகையே சைவ உலகின் சரிதமாகிய பெரிய புராணந் தோன்ற வழி வகுத்தது. தமிழ்ச் சரித ஆராய்ச்சியாளருக்கு கைகொடுத்துதவும் நல்லநூல் தெய்வமணங் கமழச் சேக்கிழார் தந்தருளிய பெரியபுராணந்தான். தமிழ்நாட்டுச் சரிதமாய், அருளாளர் மாக்கதையாய், நல்ல ஆகமமாய், உயர் புராணமாய், தேவாரத் திறவுகோலாய் நற்பொற் பக்திக் காப்பியமாய் இலங்கும் நூலொன்றிற்கு வித்திட்ட சுந்தரருக்கு நாம் செய்யும் கைம்மாறுமுள்ளதோ? அந்தணர் திருவும் அரச திருவும் ஒருங்கெய்திய நம் சுந்தரமூர்த்தி நாயனுர் ''துன்பமும் இடும் பையுஞ் சூழகிலாவாய்'' நாம் இன்புற்று வாழ வழி ''அழுமலர்க் கண்ணிணை உடன்'' தொழுமலர் எடுத்தகை அடியவர் ஆதலே எனத் திருக்கழுமலப் பதிகத்தில் (பா. 10) காட்டியருளுகிருர்.

வடக்கே இமயத்துள் கிடக்கும் கேதாரத்தைப் பாடிய இந்த அரிய அடியவர் அதி தெற்கே கடலுக்கப்பாலுள்ள திருக்கேதீச்சரத்தையும் பாடியமையால் ஈழமும் வளம் பெற்றது. அவர்தந் திருவாக்குப் போல் இடையிலே மண்மூடிக் கோயில் என்ற அடையாளமுமில்லாதிருந்த இடத்திலே இன்று,

''படவேரிடை மடவாளோடும் பாலாவியின்
கரைமேல்
திடமாயுறைகின்ருன் திருக்கேதீச்சரத்தானே''

''வாழ்க சுந்தரர் தந்த செந்தமிழ்''

### சமய குரவர்கள் முத்தியடைந்த நாள்

''சித்திரைச் சதயம் அப்பர் சிறந்தவை காசிமூலம்
அத்தரைப்பணி சம்பந்தர் ஆனிமா மகத்திலந்தம்
முத்தமிழ் வாதவூரர் முதியநல் ஆடிதன்னில்
சுத்தமாம் சோதி நாளில் சுந்தரர் கயிலைசேர்ந்தார்''

# திருத் தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்

**செ. சின்னத்துரை** B. A.

*நேசநிறைந் தவுள்ளத் தானீலநிறைந்த மணி கண்டத்*
*தீசனடியார் பெருமையினை யெல்லாவுயிருந் தொழவெடுத்துத்*
*தேசமுய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்ததிருவாளன்*
*வாசமலர் மென்கழல் வணங்கவந்த பிறப்பை வணங்குவாம்''.*

செயற்கரிய செய்கை செய்த பெரியோர்களின் சரிதங்களை எடுத்துக் கூறும் ஒப்பற்ற பெரும் காப்பியமான பெரிய புராணத்திற்கு மூலமாக விளங்கிய ஆதாரம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியருளிய திருத்தொண்டத் தொகையாகும். தேனினுமினிய பெரியபுராணம் சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பற்றிக் கூறும் திருமலைச் சிறப்புடன் தொடங்கிய அப்பெரியார் திருக்கயிலைக்கு வெள்ளானையில் செல்லும் காட்சியைப் படம்பிடித்துக் காட்டுவதைப் போல் கூறும் வெள்ளானைச் சருக்கத்துடன் முடிவுறுகிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகையைப் பாடாவிட்டால் தெய்வச் சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராணம் பாடியிருக்க முடியாது. பத்திச் சுவைசொட்ட சொட்டப் பாடப்பட்ட இப் பெரியபுராணத்தில் 13 சருக்கங்கள் உள. சருக்க முடிவில் ஒவ்வொன்றிலும் சுந்தரமூர்த்தி சுவாமிகளைச் சிறப்பித்துப் பாடியிருக்கிறார் தெய்வச் சேக்கிழார் சுவாமிகள். அவற்றுள் ஒன்றுதான் மேற்குறித்த செய்யுள். சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய பாதங்களை வணங்க வந்த பிறப்பை வணங்குவாம் என்று பாடுகிறார். இப்பெருங் காப்பியத்திற்குத் தலைவனாய் விளங்குபவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். அவருடைய சரித்திரம் பற்பல இடங்களில் கூறப்படுகின்றது. அவையாவன: திருமலைச் சிறப்பு, தடுத்தாட்கொண்ட புராணம், ஏயர்கோன்கலிக்காம நாயனார் புராணம், சேரமான்பெருமாள் புராணம், வெள்ளானை சருக்கம் என்பனவாம். சேக்கிழார் சுவாமிகளே தம்மை உய்விக்க வந்த தலைவராகக் கொண்டு அவரிடத்து அதிக ஈடுபாட்டுடன் மனம் தோய்ந்து அவரின் சரிதத்தைக் கூறியுள்ளார்.

**''கழல் பரவ அடியேன் முன்னைப் பிறவியிற் செய்த தவம் பெரியவாமே'',** என்றும், **''வேடர் வழி பறிக்கப் பறியுண்டவரெம் பழவினைவேர் பறிப்பாரெனும் பற்றாலே''** என்றும் **''குலவும் மலர்பாதம் யானும் பரவித்தீர்க்கின்றேன் ஏழு பிறப்பின் முடங்கு கூன்''** என்றும் சருக்க முடிவுகளில் சேக்கிழார் கூறும் பொன்மொழிகளால் அறிக.

வேத சிவாகமங்களின் உள்ளுறைப் பொருளைப் பிழிந்தளித்த நாலு **பெருமக்கள்** திருஞானசம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்திசுவாமிகள், மாணிக்கவாசகசுவாமிகள். மேற்கூறப்பட்ட நால்வரும் முறையே சரியை, கிரியை, யோகம் ஞானம் முதலிய நாற்பாதங்களை விளக்கி முத்தியெய்தினர். கயிலைமலையிலிருந்தே அகத்தியரும், திருமூலரும் தென்னாட்டில் வந்து தமிழை வளர்த்தனர். அவ்வண்ணமே ஒரு தவக்குறைவாலோ அல்லது தென்திசை செய்த புண்ணியத்தினாலோ ஞாலமுய்ய நாமுய்ய சைவநன்னெறியின் சீலமுய்ய நால்வரும் தமிழ்நாட்டில் அவதாரம் செய்து ஈடும் எடுப்புமில்லாப்பீடுசேர் நன்னெறியைக் காட்டி நாட்டை உய்வித்தனர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கயிலாயத்தில் ஆலாலசுந்தரராயிருந்து **''வள்ளல் சாத்துமதுமலர் மாலையுமள்ளு நீறுமெடுத்து''** தொண்டு புரியும் காலத்தில் அநிந்திதை கமலினி என்னும் உமாதேவியாருக்குத் தொண்டு புரியும் கன்னிமார் இருவரை எல்லாம் வல்ல இறைவன் ஆக்ஞையினால் கண்ணுற்றார். மாதவஞ் செய்ததென்றிசை வாழ்ந்திட — தீதிலாத் திருத்தொண்டத் தொகைதர — மாதர்மேல் மனம் வைத்த குற்றத்திற்காக மண்ணுலகத்தில் திருநாவலூரில் ஆதிசைவப் பிராமணர் சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் புதல்வராக ஆலால சுந்தரர் பிறந்தார். அவருடைய பிள்ளைத் திருநாமம் நம்பியாரூரர். அவரது மறு நாமங்கள் வன்தொண்டர், சுந்தரர், தம்பிரான் தோழர், ஆரூரர், சேரமான் தோழர் என்பனவாம். ஐபடை, சதங்கை யணி

மணிச் சுட்டி செம்பொன் நாண் அணிந்து நம்பியாரூரர் தெருவில் தேர் உருட்டுங்காலத்தில் அவரின் முகமண்டல ஒளியினுல் கவரப்பட்ட அந்நாட்டரசராகிய நரசிங்க முனையர் தகப்பனுரிடத்தில் தமக்கு அவரைத் தரும்படி வேண்டிநின்ருர். தம் குலத் திருவும் மன்னவர் திருவும் பொங்க மாளிகையில் வளர்ந்து சகல கலைகளையும் ஐயந்திரிபறக் கற்று மணப்பருவமடைந்தார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் புத்தூரிலுள்ள சடங்கவிச்சிவாசாரியாரின் மகளை விவாகம் செய்யச் சென்ற காலத்தில் மார்ச்சார சம்பந்தமாக எல்லாம் வல்ல சிவபெருமான் சிவப்பிராமண வேடம் தாங்கி அடிமை யோலையைத் திறம்பட சபையில் காட்டி அவரைத் தடுத்தாட்கொண்டார். சிவபெருமான் இடபாரூடராய்த் தோன்றி அவரைத் தமக்கு ஆட்படுத்தி தமக்கு அர்ச்சனை பாட்டேயாகும் என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் கூறிப் பாடுவித்தார். ஆன்மாக்கள் எக்காலத்தும் தமக்கு அடிமை என்பதை இச்சம்பவத்தால் இறைவன் காட்டியுள்ளார்.

திருவாரூர்க் கோயிலுக்குச் சென்ற பொழுது தேவாசிரிய மண்டபத்தில் வீற்றிருந்த அடியார் கூட்டத்தைக் கண்ணுற்று அவர்களுக்கு அடிமையாகவேண்டுமென்று விழைந்து மனம் நெக்குருகி நின்ருர். ஞாலமுய்ய மன்றுள் ஆடுபவரும் நீதிமாதவர் நெஞ்சிற் பொலிந்து சோதியாய் விளங்குபவருமாகிய சிவபெருமான் அவருக்கு முன்னே தோன்றி அவ்வடியவர்களைப்பற்றி பாடுவாயென்று ஆஞ்ஞாபித்தார். எல்லாம் வல்ல சிவபெருமானே ''தில்லைவாழ் அந்தணர்'' என்று அடியெடுத்துக்கொடுக்க ஊழிக்காலத்திலும் அழியாத பெருமையுடைய அடியார்களுக்குத் தாம் அடிமை என்று ஒவ்வொரு பாட்டிறுதிதோறும் கூறும் திருத்தொண்டத்தொகை என்னும் தேவாரப் பதிகம் பாடி எமக்கு அடியாரின் பெருமையை வலியுறுத்தியுள்ளார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இவர் 63 நாயன்மார்களுக்கும் 9 தொகை அடியார்களுக்கும் அடியேன் என்றும் பாடியுள்ளார். இனிமேல் தோன்றும் அடியார்களுக்கும் அடியேன் என்பதனை ''அப்பாலும் அடிச் சார்ந்தார்க்கும் அடியேன்'' என்பதால் நாம் அறியலாம்.

எல்லாம் வல்ல இறைவன் ஆணையால் பரவையாரையும் சங்கிலியாரையும் திருமணம் செய்து தமது மண்ணுலக யாத்திரையை முடித்தார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். திருப்புகலூரில் சுவாமிகள் செங்கட்டிகளைத் தலையணையாக வைத்துக்கொண்டு நித்திரை செய்தார். அக்கட்டிகளைப் பொற்கட்டிகளாக எம்பெருமான் மாற்றினுர். சிவபெருமான் கொடுத்த 12,000 பொன்னை மணிமுத்தா நதியில் போட்டுத் திருவாரூர்க் குளத்தில் எடுத்தார். விருத்தாசலமாகிய திருமுதுகுன்றத்திலுள்ள ஆற்றில் பொன்னை இட்ட பொழுது மச்சம் வெட்டி வைத்திருந்தார். திருவாரூர்க் குளத்தில் பொன்னை எடுத்த பொழுது தாம் வெட்டி வைத்த பொன்னுக்கும் அவ்விடத்தில் எடுத்த பொன்னுக்கும் மாற்றுக் குறையாமலிருப்பதை பரவையாருக்குக் காட்டினுர். சிவபெருமான் தமது தோழராகிய சுவாமிகளிடமிருந்து அன்பைப் புலப்படுத்துவதற்கும் அவரைக் கொண்டு பாட்டுப் பாடுவிக்கவேண்டுமென்ற திருவுள்ளத்தோடும் பல தடவைகளில் சுவையுள்ள திருவிளையாடல்கள் செய்திருக்கிருர். திருவதிகைச் சித்தவட மடத்தில் சுவாமிகள் துயிலும் பொழுது ஒரு பிராமண வேடம் தாங்கிச் சிவபெருமான் இருமுறை அவரின் தலையில் தமது காலால் உதைத்துத் திருவடித் தீட்சை செய்தார். பரவையாரிடத்தில் தூதுவராகச் சென்று ஒரு முறையுடன் அவருடைய மனதைத் திருத்தாமல் விடுத்தல், சுந்தரர் திருவாரூர்க் குளத்தில் பொன்னை எடுப்பதற்குத் தாமதம் செய்தல், சங்கிலியாரை விவாகம் செய்யும் பொழுது கனவில் தோன்றி மகிழமரத்தடியில் சுந்தரரைக் கொண்டு சத்தியம் செய்வித்தல், சுந்தரரின் கண்களின் ஒளியை இழப்பித்தல், பின்கண்ணைக் கொடுத்தல், சேரமான் கொடுத்த பொன்னையும் திரவியங்களையும் திருமுருகன் பூண்டியில் பூதங்களைக் கொண்டு பறிப்பித்தலும் திரும்பக் கொடுத்தலும் முதலியன சிவபெருமான் செய்த சுவையுள்ள அருட்செயல்களாகும். எல்லாம் வல்ல சிவபெருமானிடத்திலே பொன்னையும் பெண்ணையும் கேட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமான் பெருமாள் கொடுத்த பொன்னையும் திரவியங்களையும் வேடரைக் கொண்டு பறிப்பித்தலிலிருந்து ஒரு பெரிய உண்மை புலப்படுகின்றது. சிவபெருமானே எல்லாவற்றையும் சுந்தரமூர்த்தியாருக்குக் கொடுத்தார் — வேறொருவர் பொன் கொடுப்பது தகாது என்பது குறித்தோ வேடரைக் கொண்டு இறைவன் பொன்னைப் பறிப்பித்தார். ''பொருவிடையார் நம்பிக்குத் தாமே பொன் கொடுத்தலாலொருவர் கொடுப்பக் கொள்ளவொண்ணுமைக்கது வாங்கி'' என்று சேக்கிழார் பெருமான் கூறுகிருர். ''பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை....'' என்று சுந்தரமூர்த்தியாரே பாடுகிருர். ''யாம் ஓதிய கல்வியும் எம் அறிவும் தாமே பெறவேலவர் தந்ததனுற்'' என்று அருணகிரி நாதர் கந்தரனுபூதியில் கூறியுள்ளார். சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு மாத்திரமல்ல

சகல ஆன்மாக்களுக்கும் தனு, கரண, புவன, போகங்கள் எல்லாம் கொடுப்பவர் சிவபெருமான் என்பதே சித்தாந்த உண்மை. ''**ஆவதும் அழிவதுமெல்லாம் அவன் செயல்**'' என்பது சேக்கிழார் வாக்கு. சுந்தரமூர்த்தி சுவாமிகள் சகமார்க்க நிலையை நிறுத்தியவரென்பது பல சந்தர்ப்பங்களால் அறியலாம். சுந்தரர் எல்லாவற்றிற்கும் சிவபெருமானே மூலகாரணர் என்பதை நன்குணர்ந்த பரமஞானியாவார். ''**முன்னவன் முன்னின்றால் முடியாத பொருளுளதோ**'' என்ற எண்ணத்தில் திளைத்தவர் சுந்தரர். சிவபெருமானிடத்திலே எதையும் வாங்க வேண்டும் என்ற எண்ணத்தின் வழியில் ஊறி நின்றவர். குண்டையூர்க் கிழவர் சிவபெருமானிடத்தில் பெற்ற நெல்லை அள்ளுவதற்கு ஆளைத்தரும்படி கேட்கிறார். ''**ஆளிலை எம்பெருமான் அவை அட்டித்தரப் பணியே**'' என்று தேவாரம் பாடுகிறார். இடக் கண்ணைப் பெற்றபின் வலக்கண்ணைத் தரும்படி ''**மற்றைக் கண்ணைத் தாரீராகில் வாழ்ந்து போதீரே**'' என்று பாடுகிறார். பரவையாரை பிரிந்ததனுலுண்டான ஊடலைத் தீர்க்க இறைவனைத் தூதுவராகப் போகும்படி கேட்டு வெற்றி பெறுகிறார். திருவையாற்றிற்குப் போகும் வழியில் காவேரி ஆறு பெருக்கெடுத்துத் தடுப்ப வழிவகுத்துத் தம்மை அடுத்த கரையைப் போக வகை செய்யுமாறு ''**பரவும் பரிசொன்று அறியேன்....**'' என்று தேவாரம் பாடுகிறார். மேரு மலையிலும் உயர்ந்த தவத்தோனாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் உயிர்க்கு உயிராகியும், அறிவுக்கு அறிவாகிய அரிபிரமேந்திராதி தேவர்களாலும் காணமுடியாதவராகியும், பாலில் வெண்ணெய் போல மறைந்திருக்கிறவராகியும், அடியார் இடுக்கண் தரியாதவருமாகியுமுள்ள எல்லாம் வல்ல சிவபெருமான் தம்மால் ஆட்கொள்ளப் பட்ட தோழருக்கும் பரவையாருக்குமிடையிலுள்ள ஊடலைத் தீர்ப்பதற்காக ஓர் ஒப்பற்ற பிராமண வேடம் தாங்கி வருகிறார். நடுச்சாமத்தில் தனியேயிருந்து தனது துயரத்தைத் தீர்க்க எழுந்தருளி வரும்படி சிவபெருமானை வேண்டுகிறார் சுந்தரர். அவர் நினைத்த மாத்திரத்தில் சிவபெருமானும் எளிதாக எழுந்தருளி வருகிறார். அரிதிலுமரிய சிவபெருமானை தான் நினைத்த மாத்திரத்தில் அழைக்கிறார். சிவபெருமான் பரவையார் மாளிகைக்கு எழுந்தருளிச் சென்ற போது திருவாரூர் சிவலோகமாக விளங்கிற்று என்று சேக்கிழார் சுவாமிகள் நவில்கிறார்.

''**தொடர்ந்து கொண்டவன் றெண்டர்க்குத் தூதுபோய் — நடந்து சென்ற செந்தாமரையடி நாறுமால்**'' என்பது சேக்கிழார் வாக்கு. மணப் பந்தலில் தடுத்தாட்கொண்ட போதும், குருகாவூருக்குப் போகும் வழியில் பொதிசோறும் பந்தல் வைத்திருந்த போதும், திருக்கச்சூரில் பிராமண வீடுகளில் பசியுற்ற நம்பியாரூரர்க்கு சோறு வாங்கச் சென்ற போதும் பிராமணவேடம் தாங்கி வருகிறார் சிவபெருமான்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் பல முறைகளில் எல்லாம் வல்ல சிவபெருமானை அழைத்து நாட்டைத் தூய்மை செய்தார். சிவபெருமானை நேரே கண்டு தரிசனம் பெற்ற கிடைத்தற்கரிய பாக்கியத்தைப் பெற்றார். ஆகையால் அவர் தவமன்றே தவம்!

சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஒரு விசித்திர புருஷர். அவரின் குணங்களையும் அவரின் செயல்களையும் அகக்கண் கொண்டு பார்த்தால்தான் அவற்றின் பொருளை நாம் உணரலாம். சுந்தரரின் செந்தமிழாகிய பாடல்களில் ஓர் தனிச் சிறப்பு வாய்ந்த நகைச்சுவை, பொருட்சுவை நிரம்ப உண்டு. சிவபெருமானை சில இடங்களில் ஏசுகிறார். சில இடங்களில் தான் கேட்டதைத் தராவிட்டால் உயிர்விடுவதாகவும் கூறுகிறார். சிவபெருமானை நிந்தாஸ்துதி செய்கிறார்.

**பத்தூர் புக்கிரந்து....** என்ற தொடக்கத்தையுடைய தேவாரத்தில், ''**முத்தாரமிலங்கி மிளிர் மணிவயிரக் கோவை — அவை பூணத்தந்தருளி மெய்க்கினிதா நாறும் கத்தூரிகமழ் சாந்துபணித்தருள வேண்டும்**'' என்று உரிமையோடும் அன்பு உறைப்போடும் கேட்கிறார். செண்டு எறிந்தும் ஆட்டுக்கடா சண்டை, சேவற் போர், புள்ளினங்களின் அமர் முதலியவற்றைக் கண்டும் களிக்கிறார். அவர் எல்லாவற்றையும் சிவமாகக் காண்கிறார். அவர் போகம் சிவபோகம். அவர் உறவும் ஓர் ஒப்பற்ற உறவு. சுந்தரர் உலக இச்சைகளில் சிக்காமல் அமிழ்ந்தாமல் யான் எனது என்று அற்ற இடமாகிய திருவடி உணர்வில் திளைத்தார். உலக போகத்தை விரும்பினாராயின் தேவாரங்களில் மானிட வாழ்க்கையை இழித்துக்கூறியிருக்க மாட்டார்.

''மணம் எனமகிழ்வர் முன்னேமக்கள்
தாய்தந்தை சுற்றம்
பிணம் எனச்சுடுவர் பேர்த்தேபிற
வியை வேண்டேன் நாயேன்'' என்றும்

''பொய்த்தன்மைத் தாயமாயைப் போர்வை
யை மெய்யென்றெண்ணும்
வித்தகத் தாயவாழ்வு வேண்டிநான் விரும்ப
கில்லேன்'' என்றும் தேவாரம் பாடுகிறார்.

அவர் ஐம்புலன்களினுல் நுகர்ந்த இன்பம் திருவடிஉணர்வாம் இன்பம்.

''படியினீடும் பத்திமுதலன்பு நீரிற்பணைத் தோங்கி
வடிவு நம்பியாரூரர் செம்பொன் மேனி வனப்பாக
கடியவெய்ய விருவினையின் களைகட்டெழுந்து கதிர்பரப்பி
முடிவிலாத சிவபோக முதிர்ந்து முறுகி விளைந்ததால்''

என்று வெள்ளானைச் சருக்கத்தில் சேக்கிழார் சுவாமிகள் கூறுகிருர். சாக்கிரத்தில் அதீதத்தை அடைந்தவர்கள் உலகத்தவரைப் போல் உண்டு உடுத்திருந்தாலும் பிறவிஎடார்.

''ஆக்குமுடி கவித்தரசாண்டவர்கள்
அரிவையரோடு அனுபவித்தாங்கிருந்திடினும் அகப்பற்றிருப்பர்
நோக்கியிது புரியாதோர் புறப்பற்றற்ரு
நுழைவர் பிறப்பினின் வினைகள் நூங்கிடாவே''

என்று சிவஞான சித்தியார் செப்புகிறது.

''பார்த்தால் உலகத்தவர்போல் இருப்பர் பற்றற்றவரே'' என்று முற்றும் துறந்த பட்டினத்தடிகள் கூறுகிருர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளை வழிபடு தெய்வமாகக் கொண்டவர்கள் பெருமிழலைக்குறும்பர் சோமாசிமாறநாயனுர் ஆகிய இருவரும். அவ்வாறு வழிபட்ட வாய்ப்பினுல் சிவபதம் அடைந்தனர். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரம் 7ஆம் திருமுறையாகும். அவரின் தேவாரங்களை தினமும் நியதியாகப் பாடுவதனுல் மலம்தேயும். மனம் தெளிவடையும். நோய், வறுமை மனத்துன்பம் முதலியன தலையெடுக்கமாட்டா. ''பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்'' என்றும் ''ஒண்பொழில் நாவலர் கோன் ஆகிய ஆரூரன் பண்ணும் இசைக் கிழவி பத்திவைபாட வல்லார் — பத்தர்குணத்தினராய் எத்திசையும் புகழ் மன்னி இருப்பவர்கள் வானின் இழிந்திடினும் மண்டலநாயகராய் வாழ்வது நிச்சயமே'' என்று இவ்வாறு பாடுகிருர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். ஒவ்வொரு பாட்டினிறுதி தோறும் தமது தேவாரத்தைப் படிப்பதனுல் வரும் செல்வம், இன்பம் முதலியன சேருமென ஆணையிட்டுப் பாடுகிருர். ஆகையால் சைவர்களாகிய எங்களுடைய பரம்பரைச் சொத்து திருமுறைகள். அவற்றை நாம் நாடோறும் அன்போடும் உறுதியோடும் ஓதி உய்வோமாக.

''என்றுமின்பம் பெருகு மில்பினே
டொன்று காதலிந்துள்ளமு மோங்கிட
மன்றுளார டியாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாம்''

## சமய குரவர்களின் வயது

அப்பருக் கெண்பத் தொன்று அருள் வாதவூரருக்குச்
செப்பரிய நாலெட்டில் தெய்வீகம்—இப்புவியில்
சுந்தரர்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க்
கந்தம் பதிஞறறி.

# மணிவாசக விவேக சிந்தாமணி

**ஸ்ரீமத் ஸ்ரீரங்கானந்த சுவாமிகள்,**
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், கொழும்பு

**மனித** வாழ்வு குறைகளையுடையது. குறைகளை நீக்கி நிறைவைத் தருவது சமய வாழ்வு. எதனுல் குறைவு உடையோம் என்று ஆர அமரச் சிந்திப்பது விவேகவிசாரம் எனப்படும். விவேகத்தால் பேரறிவு — ஞானம், உண்டாகிறது.

மனித வாழ்வில் குறைகள் சேருவதற்கு காரணம் உணர்ச்சிகளின் வயப்பாட்டாலேயாகும். உணர்ச்சிகள் பொறி புலன்களால் உண்டாகின்றன. உடலோ புலன்களாகிய ஒரு கருவி. அதை இயக்குவது மனம். மேன்மைக்கும் கீழ்மைக்கும் காரணம் ஆவது மனம் என்பது ஆன்ருேரின் அனுபவக்கருத்து.

மேட்டில் இருந்து பள்ளத்தை நோக்கிப் பாயும் வெள்ளத்தைப் போல், மனம் கீழ் நோக்கியே இயங்குவதால் அது வேகத்தையும் அடைகின்றது. கட்டுப்பாட்டிற்கு அது அடங்குவதில்லை. அதை அடக்குவதற்கு தனி முயற்சியும் தேவைப்படுகிறது. வேகமாய் ஓடும் வெள்ளம் வழியில் கிடைத்த செடி கொடி குப்பை கூழங்களையெல்லாம் தன்னகத்தே சேர்த்துக் கொண்டு ஆரவாரத்துடன் பாய்ந்து ஓடுவதுபோல் மனமும் ஆருக — காமம், குரோதம், லோபம், மதம், மூடம், மாத்சரியம் என்னும் ஆருக — பாய்ந்து ஓடிச் செயல் படுகின்றது.

வெள்ளத்தில் அகப்பட்டோர் மயங்குகின்றனர், வேதனைப்படுகின்றனர், உருண்டும் புரண்டும் கீழும் மேலுமாக மூழ்கியும் எழும்பியும் அல்லல் உற்றுத் தவிக்கின்றனர்! அவ்வெள்ளம் கடலைச் சேர்ந்து விட்டால், கடலின் அலைகளால் மோதுண்டும் மொத்துண்டும் அவஸ்தைப்பட்டுத் தத்தளிக்கும் நிலை எவ்வாருே அவ்வாறே சம்சாரக் கடலில் நாம் படும் பாடும் ஆகின்றது! இதற்கெல்லாம் காரணம் நமது மனம். பொறி புலன்கள் வாயிலாக ஏற்படும் அவல நிலை. கவலைகளைப் பெருக்கும் அவலமான நிலை. படிப்பும் பாண்டித்தியமும் செல்வமும் செருக்கும் மற்றும் எது இருந்தாலும், எத்தாலும் நீக்க இயலாத மோசமான நிலை!

''இந்திரிய வயம் மயங்கி இறப்பதற்கே காரணமாய் அந்தரமே திரிந்து போய் அருநரகில் வீழ்வேற்கு'' — என்றும்,
''வினைப்பிறவி என்கின்ற வேதனையில்அகப்பட்டு தனைச்சிறிதும் நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை'' — என்றும்
''கொழுமணி யேர்நகையார் கொங்கைக் குன்றிடைச் சென்று குன்றி, விழுமடி யேனை''
—என்றும்
''புலன்கள் திகைப்பிக்க யானுந் திகைத்திங்கொர் பொய்ந் நெறிக்கே விலங்குகின்றேனை''
— என்றும்
''அடற்கரி போல்ஐம் புலன்களுக் கஞ்சி
அழிந்த என்னை'' — என்றும்

சம்சாரக் கடலில் படும் பாட்டைக் கூறித் தவிக்கின்ருர்! அவரா தவிக்கின்ருர்? அவ்வாறு நாம் தவிப்பதை தாம் சுட்டிக் காட்டுகின்ருர்!

இத்தகைய இடர்பாடுகளோடு அமைந்த நம் வாழ்வில் கிட்டும் சொட்டுச் சொட்டான சுக போகங்களை ''**மெய்யான இன்பம்**'' என்று எண்ணி மயங்குகிருேம் — அதாவது, மயக்கமடைகிருேம். மயக்கம் என்பது உணர்வு — அறிவு — அற்ற நிலை. மயங்கிய வாழ்வே மாய வாழ்க்கை! உண்மையற்ற பொய்யான வாழ்வு என்பதாம். பொய்யான வாழ்க்கையில் நாம் கொள்வதும் அனுபவிப்பதும் எல்லாம் பொய்ம்மையானவை. நமது மனம், வாக்கு, காயம் எல்லாம் பொய்யானவை. பொய்ம்மையிலிருந்தே எல்லாவித குற்றங்களும் குறைகளும் உண்டாகின்றன. நமது மேலெழுந்த வாருன சமய வாழ்வும்கூட பொய்யான நாடகமாகவே இருக்கின்றது. பொய்ம்மையுடையவனைத் தண்டிக்காத சட்டமோ, நீதிமன்றமோ, சமூகமோ, தேசமோ கிடையாது. அதுபோல் பொய்யான வாழ்வில் படும் அவஸ்தைகள் எல்லாம் தண்டனைகளே ஆகின்றன! அத்தண்டனைகளும் பிறவி தோறும் மாறி மாறி ஓயாது அமைந்த வண்ணமாய் இருக்

கின்றனவன்றே! இத்துன்பத்தினின்று விடுபட வழியே இல்லையா? இருப்பின் அவ்வழிதான் என்ன? சிறைப்பட்டவன், விடுதலைபெறத் துடிப்பது இயற்கையே அல்லவா?

அவனவன் அடைய வேண்டிய குறிக்கோளுக்கு அவனவனே முயற்சிக்க வேண்டும். கடலில் மூழ்கித் தவிக்கும் போது ஒருவன் தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ள முயலுகிறான். அச்சமயம் அவன் பக்கத்திலே மனைவி, மக்கள், சுற்றம் என்பவர் இருக்க நேர்ந்தால் எவரையேனும் சிந்திக்க முடிகின்றதா? சிந்திப்பானா? கடலில் மூழ்கித் தவிக்கும் அவன் தன் மனைவி மக்களை தன் தோளில் ஏற்றிக்கொள்வானோ? உடுத்திய ஆடையுடைகளையுங்கூட கழற்றியோ கிழித்தோ எறிந்துவிட்டு நிர்பந்தனாய் நீந்தத் தொடங்குவான்! நீந்தினாலும் கரைகாண முடியாத கடலில் ஏதாவது **புணை** ஒன்று கிடைத்தால் அதைப்பற்றி ஏறிப் பிழைத்துக் கரைசேரவே பார்ப்பான்! அவ்வாறு முயற்சிப்பவனே அறிவாளி. தன்னையே காப்பாற்ற வழி அறியாதவன் பிறரை எவ்வாறு காப்பாற்ற முடியும்? அவனைக் காப்பதும் துணைசெய்வதும் அவனது விவேகம் ஆகும்.

கரை சேருவதுதான் அவனது குறிக்கோள். வாழ்க்கை என்னும் கடலில் ஒருவனுக்கு புணையாக அமைவது **''புயங்கப் பெருமான் பூங்கழல்கள்''**. அவனைக் கட்டிப் பந்தப்படுத்தும் ஆடை உடைகள் **''பொய்ம்மை''** ஆகும். கரையேற உதவி புரிகின்றவர்கள் **கோமானின்** (இறைவனின்) **தொண்டர்கள்**. சுமக்க முடியாத பழுவான மனைவி மக்கள் சுற்றமாகிய சுமைகளை நீக்க உதவி செய்வது விவேக விசாரம். இவ்விவேகம் (பகுத்தறிவு) இல்லாவிட்டால் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளஇயலாது மூழ்கித் தவிப்பான் மனிதன்!

இக்கருத்து ஆண்களுக்கும் பெண்டிருக்கும் பிள்ளைகட்கும் யாவர்க்கும், எல்லா உயிர்கட்கும் பொதுவானதேயாகும். எல்லா உயிர்களும் ஒரே பாங்கில் சம்சாரக் கடலில் உழலுகின்றன. தனியாய்ப் பிறந்தவர்கள் தானாகவே தன் முயற்சியால் தனியானை அடைய வேண்டும். அதற்கு **விவேகம்** இன்றியமையாதது. இவ்விவேகத்தை மணிவாசகப் பெருந்தகையார் திருவாசகத்தில் போதிக்கின்றார்: ''தாமே தமக்குச் சுற்றமும் தாமேதமக்கு விதி வகையும்'' என்று. ஸ்ரீ கண்ணபிரானும் கீதையில், ''உத்தரேத் ஆத்மனா ஆத்மானம் ந ஆத்மானம அவஸாதயேத்'' (6-5) — ''ஆத்மாவைக் கொண்டு ஆத்மாவை உத்தாரணம் செய்க. ஆத்மாவை கீழ்மைப்படுத்தலாகாது'' — அதாவது ''தன்னைக் கொண்டு தன்னை உயர்த்திக்கொள்ளவேண்டும். தன்னைக் கீழ்மை அடைய விடலாகாது'' என்று!.

ஏனென்றால் ''ஆத்மைவ ஹ்யாத்மனோ பந்து: ஆத்மைவ ரிபுராத்மன:'' — ''ஆத்மாவே ஆத்மாவிற்கு நண்பன்; ஆத்மாவே ஆத்மாவிற்குப் பகைவன்'' — அதாவது, ''தானே தனக்கு நண்பன் தானே தனக்குப் பகைவன்'' ஆகிறான். இக்கருத்தே ''தாமே தமக்குச் சுற்றமும் தாமே தமக்கு விதி வகையும்'' என்று பிரதிபலிக்கின்றது. மேலும் விவேகத்தையும் குறிக்கோளையும், நெறி முறையையும் சுட்டியும் காட்டுகின்றார்:—

''யாமார் எமதார் பாசமார் என்ன மாயம் இவை போகக், கோமான் பண்டைத் தொண்டரொடும் அவன் தன் குறிப்பே குறிகொண்டு, போமா றமைமின் பொய்நீக்கிப் புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே'' — இந்த உபதேசச் சிந்தாமணியை உன்னித்து நாம் தியானிக்க வேண்டும்.

வாழ்க்கையில் உண்மையை உணர்ந்து பொய்ம்மையை நீக்கி, பந்தபாசம் நீங்க முயற்சித்து, குறிக்கோளையெய்த வேண்டும் என்பது குறிப்பு. அதற்கான உபாயம் இறைவனுடைய தொண்டர்களோடு சேர்ந்து வாழ்ந்து, வழிபடுதலாகும். செம்மையை அடைய வேண்டில் செவ்வழிப் பயில வேண்டும்.

பந்தபாசங்களை விடுவது இலகுவான தன்று. **அறியாமை** இருக்கும் வரை பாசம் நீங்காது. ஆயினும், பதியிடம் பற்று ஏற ஏற உலகியலில் பாசம் குறையும். பாசத்தால் எல்லாப்பந்தப் பிணைப்புகளும் அமைகின்றன. பாசம் அறுபட பதிநேசம் அதிகரிக்க வேண்டும்.

மரத்தில் உள்ளவன் ஒரு கிளையைப் பிடித்துக் கொண்டுதான் ஒரு கிளையை விட்டு முன்னேற முடியும். அதுபோல் பதியைப் பிடித்துக் கொண்டால்தான் உலகப் பற்றை விடமுடியும். அதற்குச் சாதனமாக அமைவதே அடியாரின் உறவு.

அருள் வாழ்க்கையில் அடியாரின் உறவு அருள் உறவாகும். மணிவாசகப் பெருமான் சித்தமலம் அறுவித்து சிவமாகி நின்ற செம்மல்! ஸ்ரீ கண்ணபிரான் சொன்னபடி, ''ஸர்வபூத ஹிதே ரதா: ''(கீதை 5-25;

12-4) — எல்லா உயிர்களுக்கும் நன்மையையே நாடுபவர் நம்பெருமான். எனவே, நமக்கு இவ்வுபதேசத்தைத் தந்தருளுகின்றார். அவரும் அவர் வாக்கும் ஒன்றே. மணிவாசகரே திருவாசகம் ஆகும். அவரோடு உறவு கொள்வதும் திருவாசகத்தில் மூழ்கித் திளைப்பதும் ஒன்றேயாகும். இதைவிட சிறந்த அடியார் உறவு கிட்டுவதற்கில்லை. அவரது உபதேசம் நாம் உய்வதற்கான ஆதேசமாகும். அவரது மணிவாசகம் நம் சிந்தனைக்கோர் மணியாகும்:—

''விடுமின் வெகுளி வேட்கைநோய்
மிகவோர் காலம் இனியில்லை,
உடையான் அடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோ
டுடன் போவதற்கே ஒருப்படுமின்,
அடைவோம் நாம்போய்ச் சிவபுரத்துள்
அணியார் கதவ தடையாமே,
புடைபட் டுருகிப் போற்றுவோம்
புயங்கன் ஆள்வான் புகழ்களையே''

உய்வதற்கான உபதேசம் இது! நெறியைப்பற்றியே இக்குறியும் அமைகின்றது. ஸ்ரீ கண்ணபிரானும் ''ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஜ்ஞானே பரிஸமாப்யதே'' (கீதை 4-33) — ''எல்லா கர்மங்களும் ஞானத்தில் முற்றுப் பெறுகிறது'' என்று அருளுகின்றார். விவேகத்தால் விளைவது அறிவு, ஞானம் அறியாமையை அகற்றும் விளக்கு.

சைவன் அடையவேண்டியது சிரேயஸ் (ஆன்மீயப் பெருநலம்)—அதாவது, மோக்ஷ சாதனம்—விவேகம் ஆகும். வைராக்கியம் இன்றி பேரருளைப் பெற்றவர் எவரும் இலர். நாம் பொருளை நாடுகிறோமேயன்றி அருளை நாடுகிறோமில்லை. அருளைத் தருவது திருவாசகம். அது ஓர் அருள் சுரங்கம். சுரங்கத்திலுள்ள மாணிக்கங்களை எடுத்து நமது சிந்தனைக்கு உரிய மணிகளாக்கி மகிழ்வோமாக. நமக்கான அருளும் பொருளும் பயனும் யாவுமாக அமைவது திருவாசகம்! அதுவே நமக்கான சிந்தாமணி! மணிவாசகரின் இணையடிகள் வாழ்க!

## தியாகம்

உலகத்திலே, கொடுப்போனது நிலையிலே எப்போதும் நில். ஒவ்வொன்றையும் கொடுத்து விடு. பதிலாக ஒன்றையும் எதிர்பாராதே. அன்பைக் கொடு, உதவியைக் கொடு, பணியைக் கொடு, உன்னால் இயன்ற அளவு சிறிதேனும் கொடு. ஆனால் விலை பேசுவதை ஒழித்து விடு. நிபந்தனைகளை ஏற்படுத்தாதே. நம்மீது நிபந்தனை ஒன்றும் சுமத்தப்படாது, இறைவன் நமக்குக் கொடுப்பது போன்று நமது உதார குணத்தால் நாமும் கொடுப்போமாக.

சுவாமி விவேகானந்தர்

# குறிக்கோள்

**வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன்**

மாக்கள் இனத்தினின்று மக்களினத்தை வேறு பிரிப்பது, பகுத்துணரும் உணர்வினை நல்கும் பகுத்தறிவே. தக்கன இன்ன, தகாதன இன்ன என்று பிரித்துணரும் அறிவே பகுத்தறிவு. இப்பெறற்கரும் பேற்றை மக்கட் பிறவிக்கே வைப்புச் சொத்தாக வழங்கியிருக்கின்றான் வரையாடு மங்கை பாகன். அரிது, அரிது, மானிடராய்ப் பிறத்தல் அரிது. அதிலும் கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறத்தல் மேலும் அரிது. இப்படி பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும் அதனைப் பூரணமாகப் பயன்படுத்துவோர் எத்துணை பேர்?

பிறவியின் பயன் பிறவி நீக்கமே. பிறவா யாக்கைப் பெரியோனின் பொன்னடி பணிந்து மாறிவரும் மறுபிறவிக்கு வித்திடாமல் இருப்பதே பிறவியின் நோக்கம். பிறவிக்கு வித்து ஆசை. ஆசையின் வழியாக விளைவது பாசம். ஆசையும் பாசமும் அற்று பற்றற்றான் பற்றினைப் பற்றினால்தான் பிறவிவேர் அறும். இதனை எங்கள் தருமையாதீனக் குருமுதல் வரும், ஞானச் செம்மலும் ஆகிய குரு ஞானசம்பந்த சுவாமிகள்,

''ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவபூசை பண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய் — சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்''.

என்று மாயையில் உழலும் மனத்தினைச் சாடுகின்றார். மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்று அழியும் பொருட்களை அடைவதையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு, நாம் அடைய வேண்டிய இலக்கை எய்தத் தவறுகின்றோம்.

''பாலனாய்க் கழிந்தநாளும் பனிமலர்க் கோதை மார்தம்
மேலனாய்க் கழிந்தநாளு மெலிவொடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்தநாளும் குறிக்கோளிலாது கெட்டேன்
சேலுலாம் பழனவேலித் திருக்கொண்டீச்சரத் துளானே''

என்று வாகீசப் பெருந்தகையும்,

''அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே விழி அம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே விம்மிவிம்மிஇரு
கைத்தலை மேல்வைத் தழுமைந்தரும் சுடுகாடு மட்டே
பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே''.

என்று முற்றும் துறந்த பட்டினத்தடிகளும்,

''வேனில்வேள் மலர்க் கணைக்கும்
வெண்ணகைச் செவ்வாய் கரிய
பானலார் கண்ணியர்க்கும்
பதைத் துருகும் பாழ்நெஞ்சே
ஊனெலா நின்றுருகப்
புகுந்தாண்டான் இன்றுபோய்
வானுளான் காணாய்நீ
மாளா வாழ்கின்றாயே''

என்று மணிவாசகப் பெருந்தகையும், மன்பதை உயிர்களுக்கு உய்யும் வழியை உணர்த்தி யருளுகின்றார்கள்.

''நில்லாதவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை''

என்று போதிக்கின்றது பொய்யாமொழி. நீரில் குமிழியன்ன நிலையற்றதாய், பிறப்பிற்கு வித்தாய், இன்னலின் இருங்களமாய் இலங்கும், மாடு (செல்வம்) மனைவி, மக்கள் பொருட்டு நாம் மேற் கொள்ளும் துன்பங்கள் எத்தனை? முயற்சிகள் எத்தனை? ஆறாகப் பெருக்கும் கண்ணீரின் அளவுதான் எத்தனை? இத்தனை முயற்சிகளில், துன்பங்களில், பெருக்கும் கண்ணீரில் நூறில் ஒரு பங்கு, ஏன், ஆயிரத்தில் ஒரு பங்கு, முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய், பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனாய் ஒளிரும் பெருமானை, உன்னுவதில் உணர்வதில்லை செலவிட்டால் அவனது குன்றா அன்புக்கு நாம் கொள்கலம் ஆவோம் என்பது திண்ணம். கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை, வல்லாளன், தென்னன் பெருந்துறையான், கல்லை ஒத்த நம் வன்மனத்தைப் பிசைந்து கனியாக்கி, தன் கருணை வெள்ளத் தழுத்தி, வினைகடிவான். உள்குவார் உள்ளத் துறையும் உத்தமன் நம் அல்லல் நீக்கி ஆட்கொள்வான்.

''யானே பொய், என் நெஞ்சும்
பொய், என் அன்பும் பொய்
யானல் வினையே னழுதா
லுன்னைப் பெறலாமே.
தேனே யமுதே கரும்பின்
தெளிவே தித்திக்கு
மானே யருளா யடியே
னுனை வந்துறு மாறே''.

என்ற மாணிக்கவாசகரின் தேனொத்த வாசகத்தை நமது வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு, இதயத்தில் மன்னிய மாசுகள் இரிந்தோட, காதலாகிக் கசிந்து கண்ணீர் வார, பேராத இன்பப் பேறருளும் பொன் வண்ணன் பூங்கழல்கள் பணிவோமாக!

வணக்கம்.

# காமகோடியின் கருணைமொழி



மனிதனாயிருந்தாலும், மிருகமாயிருந்தாலும், பறவையாக இருந்தாலும் உயிரினங்கள் யாவற்றின் மீதும் மனிதன் அன்பு செலுத்தப் பழக வேண்டும். அன்பில்லாத வாழ்க்கை வீண், வியர்த்தமே. எல்லோரிடத்தும் அன்பு செலுத்தும் தன்மை நம்மிடம் நிறைந்திருந்தால் துக்கத்துக்கே இடமில்லை. குழந்தைகளைப் பாருங்கள். அவர்களிடம் அன்பு பொங்கி வழிகிறது. ஆனால் வயது ஆக ஆக அவர்களுடைய அன்பு குறைய ஆரம்பிக்கிறது. அன்பு என்பது என்ன? ஒரு தாய் தன்னுடைய குழந்தையிடம் காட்டும் அன்பை இதற்கு உதாரணமாகச் சொல்லாம் பெற்றோரிடம் பற்றில்லாத பிள்ளைகளை உலகத்தில் பார்க்க முடியும். ஆனால் தன் குழந்தையிடம் பாசம் இல்லாத தாயைப் பார்க்கவே முடியாது. தாய் தன் குழந்தையிடம் காட்டும் அன்பைப் போலவே, நம்முடைய சுகத்தைவிட மற்றவர்களுடைய சுகம்தான் அதிக முக்கியமானது என்று நினைக்கத் தயாராக இருக்க வேண்டும்.

இந்த அன்பில் வேதனையும் இல்லாமலில்லை. ஏனெனில், ஆரம்பம் என்றிருந்தால் அதற்கு முடிவும் இருக்க வேண்டுமென்பது பொது விதி. நாம் மிகுந்த அன்பு வைத்துள்ள ஒருவர் மரணமடைந்தால் ரொம்ப மன வேதனை அடைகிறோம். இதற்காக நாம் அன்பை வளர்க்கக் கூடாது என்று சொல்ல முடியுமா? ஆனால் அழிவில்லாத அன்பு ஒன்றிருக்கிறது. அதைப் பழகிக் கொண்டால் வேதனைக்கே இடமில்லை. அதுதான் கடவுளிடம் அன்பு செலுத்துவது. அழிவில்லாத கடவுளிடம் செலுத்தும் அன்புக்கு அழிவேது?

# திருமூலர் கண்ட சமய நெறி

க. பொன்னையா B. A. (Cey.)

**நாம்** வாழும் இப்பரந்த உலகில் எத்தனை எத்தனை விதமான காட்சிகள். ஒரு புறத்தில் உதயசூரியனின் அழகும், இளம் மதியின் தண்மையும், வானளாவிய மலைகளின் கம்பீரமும், சல-சல என ஓடும் ஆற்றின் பரப்பும் — இரைச்சலும்; இன்னொரு புறத்தில் பேரிருளின் பயங்கரமும், தேய்பிறையின் அழிவும் என்று இவ்வாறு அழகும் — அழகின்மையும், ஆக்கமும் — அழிவும் காணப்படுகின்றன. இவைகளை இயற்கை என்கிறோம். இவ்வியற்கை மனித எண்ணங்களை — சிந்தனைகளை உருப்படுத்த உதவின. அச்சிந்தனைகளின் பிரதிபலிப்பாக ''இயற்கை என்பது யாது? அது எங்கிருந்து வந்தது?'' என்னும் கேள்விகள் தோன்றியிருக்க வேண்டும். ஏனெனில் இற்றைக்கு 4,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான இந்துமத வேதத்திலும் கூட ''இப்பிரபஞ்சம் எதனிடத்திலிருந்து உண்டாயிற்று?'' என்பன போன்ற கேள்விகள் காணப்படுகின்றன. இதற்கு மெய்ஞ்ஞானிகளும், விஞ்ஞானிகளும் விடை கண்டனர்; காணுகின்றனர். ஆனால் பொதுவாக இயற்கையை இறைவனைக - இறைவனிலிருந்து பகுக்க முடியாததாகக் கண்டனர் மெய்ஞ்ஞானிகள். பண்டு தொட்டு இயற்கையில் இறைவனையும், இறைவனில் இயற்கையையும் கண்டு போற்றினர் தமிழர்கள். **மெய்ஞ்ஞானச் சித்தர்களில் திருமூலர் தலை சிறந்தவர்** எனின் மிகையாகாது. திரு என்பது அழகு, செல்வம், உயர்வு என்பன போன்ற பொருள்களை உணர்த்துகின்றது. தமிழில் திருக்குறள், திருவாசகம், திருக்கோவையார், திருமந்திரம் என்பவையும்; திருவள்ளுவர், திருமூலர் என்பவர்களும் திரு என்னும் சிறப்பு அடையைப் பெற்றுள்ளனர். இச்சிறப்புடைய திருமூலர் உண்மைத் தத்துவங்களையும் — சமய நெறிகளையும் நன்குணர்ந்திருந்தார் என்பதை திருமந்திரம் விளக்காநின்றது. திருமந்திரம் சைவாகமங்கள் காட்டுகின்ற சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நெறிகளுக்கு ஆதாரமாயுள்ளது. ''மலை, நட்சத்திரம், கல், அணு என்பன போன்ற பொருள்கள் முழுவதும் பரம் பொருளின் ஆனந்த நடனமே என்று தெரியவேண்டும். தெரிந்தால் சகல பொருள்களும் இறைவனாகத் தெரிந்து விடும்; இறைவன் நடனம் செய்யும் ஆலயம் ஆகிவிடும்'' என்கிறார். பாடல் வருமாறு:—

''அண்டம் எழுகோடி பிண்டம் எழுகோடி
தெண்திரை சூழ்ந்த திசைகள் எழுகோடி
எண்திசை சூழ்ந்த இரங்கம் எழுகோடி
அண்டன் நடம்செயும் ஆலயம் தானே''

''கடலுடையான் மலையான் ஐந்துபூதத்து
உடலுடையான் ஊழிதோ றூழி'' — என்றும்

இறைவனை இயற்கையிலும், இயற்கையில் இறைவனையும் காண்கின்றார். அவர் மாத்திரமல்ல; சைவம் உய்யவந்த நாயன்மார்களும், பிறரும்கூட இயற்கையில் இறைவனைக் கண்டனர்.

''இருநிலனாய் தீயாகி நீருமாகி
இயமான னாயெறியும் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி
ஆகாச மாயட்ட மூர்த்தியாகி'' — என்று அப்பரும்

''மண்ணாய் புனலாய் கனலாய் வழியாகி
விண்ணாய் இருசுடராய் இத்தனையும் வேறாகி''
''அருக்கனிற் சோதி அமைத்தோன் திருத்தகு
.....................மதியில் திண்மை வைத்தோன்
அனைத்தனைத் தவ்வயின் அடைந்தோன்'' — என்று மணிவாசகரும் இயற்கையுடன் பிணைத்து இறைவனையும் இயற்கையைக் கடந்த நிலையில் இறைவனையும் காண்கின்றனர். ''சமயங்கள் எல்லாம் எப்பொருளைக் கடவுள் என்றும், தெய்வம் என்றும், பகவான் என்றும் இன்னும் என்னென்னவோ பெயரிட்டு அழைக்கின்றனவோ அப்பொருட்கள் வேறொன்றுமல்ல; இயற்கையைக் கடந்தும் இயற்கையினுள்ளும், இயற்கை சொரூபமாகவும் அது இருக்கின்றது'' என்று சுவாமி **விவேகானந்தரின்** கருத்தினைத் தழுவி சுவாமி **சித்பவானந்தர்** கூறுகின்றார். ஆகவே பண்டு தொட்டு இன்றுவரை இயற்கையில் இறைவனைக் கண்ட நெறியே சித்தர் திருமூலர் கண்ட சமய நெறியுமாகும்.

பன்னிரு திருமுறைகளில் திருமந்திரம் 10ஆம் திருமுறையாக இலங்குகின்றது. "தமிழ் மறையாகிய திருமந்திரம் உபநிடதம் போன்று போற்றத்தக்க தத்துவச் சிறப்பும் — சமய உண்மைகளும் கொண்டது." இச்சிறப்புடைய திருமந்திரத்திலுள்ள சில பாடல்களில் நுழைந்து அவர் கண்ட சமய நெறியை நாமும் காண முற்படுவோம்.

"அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவமில்லை
அவனன்றி மூவரால் ஆவதொன்றில்லை
அவனன்றி ஊர்புகும் ஆறறியேனே" — என்கின்றார்.

"அவன் — அதாவது அறிவும், அறிவிப்பனவும், அறிபவனுமாகிய இறைவன்; ஆகவே பரம்பொருள். அவன் இல்லாமல் சராசரங்களின் ஒழுங்கும், நியதியும் உயிர்த்தத்துவமும் இல்லை. இறைவனின்றி படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தத்துவ நிலைகளும் இல்லை. இறைவனின் துணையின்றி இறைவனை அடைந்து விடுகின்ற நெறி தெரியவில்லை" என்கிறார். இறைவனை அடையும் ஆசை கொண்ட அவர் இறைவனின் துணையையே நாடுகின்றார். அதனால்தான் "பற்றது பற்றிற் பரமனைப் பற்றுமின்" என்கிறார். இதே கருத்தினை — அதாவது இறைவன் அருளின்றி ஆன்மாவினால் செயற்பட முடியாது என்பதனை, "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்ற அடிகள் மூலம் விளக்குகின்றார் மணிவாசகர். இதனை மறந்து உலக மக்களாகிய நாம் வாழ்க்கைக் கடலுள் அமிழ்ந்தி ஆணவம், கன்மம், மாயை என்னும் மலங்களுட்பட்டு, நான் — எனது என்னும் அகங்கார, மமகாரங்களுடன் வாழுகின்றோம். இவற்றை ஒழித்து, இறைவனை அடைய அவன் துணையையே நாட வேண்டும் என்னும் தத்துவத்தைத் திருமூலர் அழகாகக் காட்டியுள்ளார். இறைவனைக்காண—மெய்ஞ்ஞானத்தை உணர உயிர் நிலைபெற வேண்டும். உயிர் நிலைபெற உடம்பைப் பாதுகாக்க வேண்டும். "உடம்பால் அழியின் உயிரால் அழிவர்; திடம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார், உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே உடம்பை வளர்த்தேன்; உயிர் வளர்த்தேனே" — என்கின்றார். உடம்பைப் பாதுகாத்தல் மூலம் உயிரைப் பாதுகாத்து இறைவன் திருப்பணியிலும், திருத்தொண்டிலும் மூழ்கி — பக்குவம் அடைந்த உள்ளத்தினர் சகலமும் அவனே என்று எண்ணுவர்." ஓட்டையும் பொன்னையும் ஒப்பவே நோக்கும்" இயல்பு பெற்று விடுவர். அந்நிலையில் உயிர்களிடத்து வேற்றுமை காணார்.

"யாவர்க்கும் ஆம்இறை வற்கொருபச்சிலை
யாவர்க்கும் ஆம்பசு விற்கொரு கைப்பிடி
யாவர்க்கும் ஆம்உண்ணும் போதொரு
வாயுறை
யாவர்க்கும் ஆம்பிறர்க்கு இன்னுரை தானே"
என்கின்றார்.

"பசுவையோ — மனிதனையோ கண்டாலும் எல்லாம் இறைவனே என்கின்ற நிலையை அடைந்தோர்க்கு பசுவுக்கு புல் அளித்தலும் மனிதனுக்குணவிடலும், தொண்டு செய்தலும் இலகுவான செயலாகி விடும்." இத்தொண்டினையே அப்பர் பெருமானும் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்கின்றார். இத்தொண்டில் ஈடுபட்டுக் கனிந்த அன்பு உள்ளவர்களிடையே ஆணவ அறிவு ஒழிந்து இறைவனை அடையும் உன்னத நிலை ஏற்படும். இன்னும் உலக வாழ்க்கையில் காணப்படும் புறங்கூறல், பிறர் பொருள் வெளவல், கொலை, களவு, கள், காமம் போன்றன பெரும் பாதகங்களாகும் என்று கூறி அவற்றை ஒழித்து இறைநிலையை அடையுமாறு வேண்டுகின்றார்.

இறைவனை அடைவதற்கு வழி சகல ஜீவ ராசிகள் மீதும் அன்பு செலுததுதல் ஆகும். உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும், ஜீவ ராசிகளும் கூட அன்புடையனவாக இருக்கின்றனர். அவை சுய அன்பு ஆகும். பிறந்த குழந்தையின் மீது தாய் அன்புடையவளாக இருக்கின்றாள். குழந்தை தாய்மீது அன்பு செலுத்துகின்றது. குழந்தை தாய்மீது கொண்ட அன்பு தந்தை, சகோதரம் என்றும், பின் மனைவி, மக்கள் என்றும் பரவுகின்றது. உறவினர் மீதும் பரவுகின்றது. இவ்வுறவுகளுக்கு அப்பாலும் அன்பு பரவும் போது மனித சமுதாயம் ஒரே குடும்பம் என்ற நிலை ஏற்படும். ஒன்றே குலம்' என்ற நிலையில் சாதிகளுக்கோ — சண்டைகளுக்கோ இடமில்லை. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற உயர்ந்த பண்பாட்டிற்கு அன்புதான் அடிப்படை. அதனால்தான்

"அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோ
யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு
ளாரே"

என்றார் **தாண்டக வேந்தர்**. ஆகவே, அன்பு வியாபிக்க, வியாபிக்க சகல ஜீவராசிகளையும் ஒப்பு நோக்கும் தன்மையும் — இறைவனை அடையும் தன்மையும் ஏற்படுகின்றது. அதனால்தான் திருமூலர் "அன்பினுள்ளான்

முனிவர்க்கும் பிரானுவான்'' என்ருர். அது மாத்திரமல்ல; அன்பையும் இறைவனையும் பகுத்து நோக்கவில்லை. ''இறைவன் அன்பு அன்புமயமாக இருக்கின்ருன். இறைவன் அன்பே பேரண்டம் முழுவதையும் உண்டாக்கியது. அவ்வன்பே அவைகளை வாழவைத்துக் காப்பாற்றுகிறது. அன்பைப் பேணி வளர்ப்பவர்கள் அன்புமயமாய் — தெய்வமாய் ஆகிவிடுகின்ருர்கள்''. ஆகவேதான்

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவம் என்பதாரும் அறிகிலார்
அன்பே சிவம் என்பதாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே''

என்கிருர் திருமூலர். ஆகவே தமிழர்கள் இறைவனை அன்புப் பிழம்பாகக் கண்டனர். தமிழ் மறையாகிய திருமந்திரம் காட்டும் சமய நெறியும் அதுவேயாகும். **இறைவன் உள்ளத்துள் இருக்கின்ருன்.** அவனைக் காண முடியாது ஆணவம் தடுக்கிறது. ஆணவத்தை அகற்றினுல் உள்ளத்துள் உள்ள இறைவனைக் காணலாம்.

''உள்ளத்தொருவனை உள்ளுறு சோதியை
உள்ளம்விட் டோரடி நீங்கா ஒருவனை
உள்ளமும் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறியாதே''

என்கின்ருர். ஆகவே இறைவனைக் காண மூலமல மாகிய ஆணவத்தை நான் — எனது என்னும் தன்மையை ஒழித்தல் வேண்டும் என்ற சித்தாந்த கோட்பாட்டை திருமந்திரம் காட்டுகிறது. இது மாத்திரமல்ல ''ஞானிகளுக்குச் செய்யும் ஒவ்வொரு பணியும் இறைவனைச் சேரும்'' என்பதை

''படம்ஆடும் கோயில் பகவற் கொன்றீயின்
நடம்ஆடும் கோயில் நம்பர்க்கங் (கு) ஆகா''

என்கிருர். இறைவன் ஒருவன்தான் என்கின்ற உண்மையை அறிய ஐம்புலன்களையும் அடக்கித் தியானிக்க வேண்டும். இதனையே அருணகிரி சுவாமிகளும் ''**சும்மாயிரு**'' என்ருர். திருமூலரும்,

''ஆனைகள் ஐந்தும் அடங்கி அறிவுஎன்றும்
ஞானத் திரியைக் கொழுவி'' —

என்று வருகின்ற பாடலில் பரம்பொருளோடு கலந்து இறுதியற்ற ஆனந்த நிலை பெறுவதற்கு வழிகாட்டுகின்ருர். 'மரணத்தைக் கண்டு பயப்படாதவர்கள் ஞானிகள்; ஆனுலும் அம்மரண பயத்தை ஏற்படுத்தி மக்களை நல்வழியில் — நற்கருமங்களைச் செய்யத் தூண்டினர். திருமூலர் காட்டும் தத்துவார்த்தமான பாடல் ஒன்று வருமாறு:—

''நாட்டுக்கு நாயகன் நம்மூர்த் தலைமகன்
காட்டுச் சிவிகை யொன்று ஏறிக் கடைமுறை
நாட்டார்கள் பின்செல்ல முன்னே பறை
கொட்ட
நாட்டுக்கு நம்பி நடக்கின்ற ஆறெ'' —

என்கிருர். அதாவது ''உயிரற்ற சடலத்தை இப்படியெல்லாம் பாடையில் வைத்து, மேளதாள வாத்தியங்களோடு சுற்றிச் சுற்றி வருகின்ருர்களே. இது என்ன அநியாயம்! என்று அதிசயப்படுகின்ருர் திருமூலர்''. மரத்திலே செய்யப்பட்டுள்ளது ஒரு யானை. அதனைச் சிறந்த கலாரசிகன் பார்க்கும்போது உண்மையாக மரத்தை அங்கு காணுது யானையைக் காண்கின்ருன். மரம் அவனது புலனுக்கு எட்டவில்லை. மரத்தைக் காண்பவனுக்கு யானையைக் காணும் சக்தியில்லை. இவ்வுண்மைத் தத்துவம் காட்டுவது யாதெனில் ''பொருள்களை உண்மை என்று மயங்குபவனுக்கு பரம்பொருள் தெரிவதில்லை. பரம் பொருளை அனுபவிப்பனுக்கோ பொருள்கள் தெரிவதில்லை''. இதனை மிக அழகாக

''மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்தில் மறைந்தது மாமதயானை
பரத்தை மறைத்தது பார்முதல்பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல்பூதம்'' —

என்கிருர். இது மாத்திரமல்ல. ''இடம் கொண்ட சக்தியும் எந்தை பிரானும்'' என்று இறைவன் — சக்தி என்னும் இரண்டு கூறுகளையும் ஒன்ருகக் காண்கின்ருர். மணிவாசகரும் ''அம்மையே! அப்பா!'' என்கின்ருர். பரம்பொருளின் ஆனந்த நடனம் எங்கும் எப்போதும் இடையருது நடைபெறுவதைக் காட்டுகிருர்.

''காளியோ டாடிக் கனகாசலத்தாடி
கூளியோ டாடிக் குவலயத்தேயாடி
நீளிய நீர் தீக்கால் நீள்வான் இடையாடி
நாள்உற அம்பலத்தே ஆடும்நாதன்'' — என்கிருர். ''சைவம் சிவனுடன் சம்பந்தமாவது சைவம் சிவானந்தசாயுச்சியம்'' என்கின்ருர்.

ஆகவே இறுதியாக நோக்கும்போது திருமூலர் கண்ட சமயநெறி அன்பின் அடிப்படையில் விரிவுறுகின்றது. அன்பே சிவமாகின்றது. சைவம் சிவனுடன் சம்பந்தமாகிறது. இயற்கையில் இறைவனைக் காண முடிகிறது. இறைவனைக் காண ஆணவ இருளை ஒழித்தல் வேண்டும்; திருத்தொண்டு

கள், திருப்பணிகள் புரிதல் வேண்டும் என்று பலவாறு விரிந்து செல்லுகின்றது **திருமூலர் கண்ட சமயநெறி.** இவரின் சமய நெறி நால்வர் கண்ட சமய நெறிக்கு, **சித்தாந்த நெறிக்கு முரண்பட்டதல்ல.** சிறப்பாக **தமிழர் கண்டநெறிக்கு** ஓர் எடுத்துக் காட்டாய் விளங்குவது திருமூலர் கண்ட சமய நெறி எனின் பிழையாகாது.

துணை நூல்கள்:

பன்னிரு திருமுறைகள்:

1. அப்பர் திருப்பதிகங்கள்
2. மணிவாசகர் திருவாசகம்
3. திருமூலர் திருமந்திரம்.

ஞானயோக விளக்கம்—சுவாமி சித்பவானந்தர்
ஆனந்தக் கூத்து

## கடவுளைக் காண்பதெப்படி ?

ஒரு தூணைப் பற்றிச் சுற்றும் ஒரு பையன் கீழே விழுந்து விடுவோம் என்ற பயமின்றியே வேகமாகச் சுழல்வது போலவே, இறைவனை உறுதியாக நம்பி இப்பற்றுக்கோடே துணையாக வாழ்க்கையை நடத்தும் மனிதன் ஒருவன் தனக்குள் உலக அலுவல்களை முறையே இயற்றுவதோடு அவ்வகையான ஆபத்துக்களினின்றும் விடுபட்டு உய்யும் வகையை அறிபவன் ஆகிறான்.

நீரில் மூழ்கும் நிலையில் உள்ள ஒருவன் மூச்சுத் திணறி தவிப்பது போலவே கடவுளைக் காண விரும்பும் பக்தனின் இருதயமும் கடவுளை அடைய வேண்டும் என்று துடிதுடிக்க வேண்டும். உலோபி பொன்னைப் பெறத் தவிப்பது போலவே உன் உள்ளமும் அவனுக்காகத் துடித்து உருக வேண்டும்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

# சேக்கிழார் தொண்டு

**கோ. சுந்தரமூர்த்தி M. A.**

தமிழைத் தெய்வ மொழியென்றும், தமிழ்த் திருநாட்டை தெய்வத்திருவருள் நிறைந்த நாடென்றும் சொல்வது மரபு. தமிழ் நாட்டின் மீதுள்ள தேசப் பற்று காரணமாகத் தமிழர்கள் கொண்டுள்ள வெறும் நம்பிக்கையென்று இம்மரபை இலேசாகப் புறக்கணித்துவிட முடியாது. நால்வர்கள் காலத்திற்கு பல ஆண்டுகள் முன்பிருந்து தொடங்கி சமீப காலம் வரை தமிழ் மண்ணில் உதித்து இறையருள் பெற்று வையகம் வாழ்வித்த பக்தர்கள் எண்ணிக்கையை மட்டும் மனத்தில் கொண்டாலே தமிழ் நாட்டின் திருநிலை விளங்கும். தமிழ்நாட்டில் தோன்றியுள்ள பக்தர்கள் போன்று இறையருள் பெற்ற பக்தர்கள் பாரதநாட்டின் மற்றும் பல பகுதிகளிலும் வாழ்ந்திருக்கிறார்கள். ஆகவே தமிழ் நாட்டின் தனிப்பெருமை இதில் என்ன இருக்கிறது என்று கேட்கத் தோன்றலாம்.

ஆனால் மற்றப் பகுதிகளில் தோன்றியுள்ள பக்தர்களுக்கும் தமிழக பக்தர்களுக்கும் இடையேயுள்ள வேற்றுமை மிகவும் கூர்ந்து நோக்கத்தக்கது. தமிழக பக்தர்கள் ஆண்டவனுடன் கொண்டிருந்த அளவு நெருக்கமான உறவை மற்ற பக்தர்கள் கொண்டிருக்கவில்லையென்பது சற்று ஆராய்ந்து பார்த்தால் புரியும். இதற்குப் பல மேற்கோள்களைத் தந்து இக்கூற்றை நிரூபிக்க முடியும். ஆனாலும் மிக முக்கியமான ஒரேயொரு எடுத்துக்காட்டை மட்டும் தந்து இதை நிறுவுவோம்.

மற்றப் பகுதிகளில் உள்ள பக்தர்கள் இறைவனை உள்ளம் கனிந்து பாடலால் உவந்து ஏத்தியிருக்கிறார்கள். ஆனாலும் தன் மீது ஒரு பாடலை பக்தன் பாடி அதனைக் கேட்டு மகிழ விருப்பமும் ஏக்கமும் உள்ளதென்பதை இறைவனே தன் வாயினால் சொன்னதாக மற்ற நாட்டு பக்தர்களின் சரிதையில் பார்க்க முடியாது. பாடினால் அதனைக் கேட்டு இறைவன் மகிழ்ந்திருக்கிறானேயொழிய, பாடச் சொல்லி கேட்டு மகிழ்ந்ததாகக் காண முடியாது. மற்ற சிறுபிள்ளைகள் மழலை மொழி பேசினால் அதைக் கேட்க யாவருக்கும் இன்பமாக இருக்கும். ஆனால் மழலைச் சொல்லை பேசச் சொல்லி கெஞ்சிக் கேட்பது, பின்னால் திரிந்து கேட்பது போன்றவைகளை நம் பிள்ளைகளிடம்தான் செய்கிறோம். ஆகவே தான் வள்ளுவப் பெருந்தகையும் ''குழலினிது யாழினிது' என்று சொல்லி அதைவிட மழலை இனிது என்று சொல்லும்போது 'தம் மக்கள்' என்று 'தம்' மை அழுத்திக் கூறுகிறார். இது பெற்றோருக்கும் பிள்ளைக்கும் உள்ள நெருக்கமான உறவை எடுத்துக் காட்டுகிறது.

தமிழ் நாட்டு பக்தர்கள் வரலாறு ஒன்றில் தான் 'என்னைப் பாடு' என்று இறைவன் விரும்பிக் கேட்டதாக வருணிக்கப்படுகிறது. இது ஒன்றே போதும் இறைவன் தமிழக பக்தர்கள்மீது எத்துணை பாசம் கொண்டுள்ளார் என்பது. தன் பிரிய குழந்தைகளை தனக்கு விருப்பமில்லாத மண்ணில் தோன்றச் செய்வது இறைவன் வழக்கமல்ல. இத்தனை பாசம் கொண்டுள்ள பிள்ளைகளைத் தமிழகத்தில் தோன்றச் செய்ததிலிருந்தே தமிழகம் இறைவனுக்கு எவ்வளவு உகந்த இடம் என்று அறிந்து கொள்ளலாம்.

மேலும், பாடல் பெற்ற தலங்கள் என்ற புண்ணியக் கோவில்களை தமிழகத்தில் மட்டுமே காண முடியும். இவை போன்ற உதாரணங்களிலிருந்து தமிழக பக்தர்களின் பெருமையை ஒருவாறு உணர முடியும். இத்தகைய பக்தர்கள் பிறந்தது இறைவனின் பெருமையைச் சாதாரண மக்களுக்கு எடுத்துக் காட்டத்தான்.

இறைவனின் பெருமையை பக்தர்கள் இரண்டு முறைகளில் காட்டியிருக்கிறார்கள். ஒன்று, தங்கள் பாடல்களின் மூலம். இரண்டாவது, தங்கள் வாழ்வின் மூலம். பக்தர்களின் வாழ்வின் ஒவ்வொரு திருப்பத்திலிருந்தும் புலப்படுவது இறைவனின் பெருமையே. இத்தகைய வாழ்வை, பக்தர்கள் வாழ்வை நமக்கு அளித்ததன் மூலம் வார்த்தைகளால் வருணிக்க முடியாத அளவு பெருந்தொண்டாற்றியுள்ளார் சேக்கிழார் பெருமான் அவர்கள்.

இறையருள் பெற்ற பக்தர்களின் வாழ்வைக் காவியமாகப் பாட மனித அறிவு படைத்த பெரும் புலவனால் மட்டும் முடியாது. அதற்கென இறையருள் பெற்றவர்கள்தான் தோன்ற வேண்டும். அப்படித் தோன்றியவர் மாபெரும் புலவர் சேக்கிழார். இவர் இறையருள் பெற்றவர் என்பதும், இறைவனின் கருவியாக நின்றுதான் இக் காவியத்தை இவர் எழுதினார் என்பதற்கு உள்ள மகத்தான சான்று 'உலகெலாம்' என்று இறைவன் முதலடி எடுத்துக் கொடுத்ததுதான். இது போன்ற செயற்கரிய மகத்தான பணியை சேக்கிழார் தவிர வேறு யாரும் செய்திருக்க முடியாது.

சேக்கிழாரின் பெரியபுராணத்தை வெறும் சமய நூலாக மட்டும் கொள்ள முடியாது. தமிழகத்திலும் மற்றப் பகுதிகளிலும் உள்ள இலக்கிய நயம் படைத்த எக்காவியத்துடனும் இதை ஒப்பிட்டு நோக்கலாம். இத் தகைய இறையருள் பாலிக்கும் நாட்டில் இறை மொழியான தமிழைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள நாம் எந்த அளவிற்கு நிமிர்ந்து நின்றாலும் அது தற்பெருமையாகாது. தமிழனென்று சொல்லி, தலைநிமிர்ந்து நிற்போமாக.

* *

## கோபுரம் தாங்கி

கோபுரத்தைச் சுமந்து கொண்டிருப்பது போன்று கோபுரம்தாங்கி காட்சி கொடுக்கிறது. ஆனால் உண்மை அதற்கு நேர் மாறானது. கோபுரம் தாங்கியை தாங்குவது கோபுரம். உலகில் எத்தனையோ காரியங்களைத் தான் தான் தாங்கிக்கொண்டிருப்பதாக மனிதன் எண்ணுகிறான். தன்னிலும் மிக்கதொரு சக்தி தன்னைத் தாங்கிக் கொண்டிருக்கிறது என்பதை மனிதன் அறிந்துகையாள்வதில்லை.

சுவாமி சித்பவானந்தர்.



வள்ளி—தெய்வயானை சமேதரராய் ஸ்ரீ சிவசுப்ரமணியப்பெருமான் இரதத்தில் வீதி உலா வரும் காட்சி

★ ★ ★




கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு முன்னுள்ள டீ மெல் வீதியின் ஒரு பகுதி **"ஸ்ரீ முருகன் வீதி"** என்று மாற்றியமைக்கப்பட்டுள்ளது. கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தின் வேண்டுகோட்கிணங்கவே கொழும்பு மாநகர சபையினர் இப்பெயரை மாற்றியமைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இம்முயற்சி வெற்றிபெற சங்க உபதலைவர் திரு. வை. நா. சோமசுந்தரம் அவர்கள் ஆற்றிய அரும்பணி சங்க வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும். புதிய வீதிப் பெயர்ப் பலகையைப் படத்தில் காணலாம்.



கொம்பனித் தெரு, சைவமுன்னேற்றச் சங்க அன்பர்களும், ''நால்வர் சமய பாடசாலை'' ஆசிரியர்களும், மாணவர்களும்.

# நல்லைநகர் தந்த நாவலர்

திருமதி கண்மணி ஸ்ரீஸ்கந்தராஜா

நல்லைநகர் ஆறுமுக நாவலர் பெருமானைப் பற்றி அறியாதவர் தமிழ் நாட்டில் யாருமிலர் என்பது உண்மையே. இந் நல்லைநகரானது யாழ்ப்பாணம் என்னும் குடாநாட்டின் தலைநகரமாய் ஒரு காலத்தில் விளங்கியதென அறிவோம். அதற்கு ஆதாரமாய் சங்கிலி என்னும் தமிழரசன் வாழ்ந்த அரண்மனையின் பகுதிகளையும் இன்றும் காணலாம். இந்து சமுத்திரத்தின் திலகம் போல விளங்குவது இலங்கைத் தீவு. ''தென்னாடுடைய சிவனே'' என்னும் சிறப்புப் பொருந்திய தமிழ் நாட்டின் ஒரு பகுதியே இவ்விலங்கையென்பது ஆன்றோர்கள் கூற்று. ஆதியிலே பூமியின் கோளாறுகளால் பிளவு ஏற்பட்ட காலத்தில் கால்வாய்கள் மூலமாக கடல் மேற்கொண்டு பிரிந்த பிரிவு இலங்கை.

கந்தபுராணம், இராமாயணம், பாரதம் முதலிய நூல்களிலே இவ்விலங்கையின் சிறப்பை மிகவிரிவாக விளக்கியிருப்பதைக் காணலாம். இத்தீவிலே முத்துக்குளிக்கின்ற கடற் பகுதியும், இரத்தினங்கள் தோன்றுகின்ற தரைப்பகுதியும், தண்டமிழ் வளரும் வட இலங்கையும், சிங்களம் வளங்கும் தென்னிலங்கையும் சைவம் முதல் புத்தம், கிறிஸ்தம், முகம்மதியமாகிய பல்வேறு சமயத்தவர்களும் பலதேச தூது கோஷ்டிகளும், நீர் வளம், நில வளம், மலைவளம், செய்குன்று முதலிய இயற்கை அழகும் பொருந்திய வள நாடாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த ஈழநாட்டிலே நல்லூரைச் சேர்ந்த திருநெல்வேலியிலே மிகவும் சிறந்த குடியிலே ஞானப்பிரகாச சுவாமிகளின் மரபிலே, சிவனை மறவாத சிந்தையுடைய பரம்பரையிலே கந்தப்பிள்ளை என்னும் பெரியாருக்கும் சிவகாமியம்மையாருக்கும் புத்திரனாகவும், ஈழநாடு பெற்ற தவப் புதல்வனாகவும், சைவம் சிறக்க வந்த சமயகுரவனாகவும் தமிழ் அன்னையை ஆதரித்து பெருமையொடு போற்ற வந்த பேரறிஞனாகவும் அவதரித்தார் ஆறுமுக நாவலரவர்கள்.

சிறுவயதிற்றானே அவர் கல்வி வேட்கையுடையவராயும் தமிழிலே விசேட ஆவலுடையவராயும் நீதி நூல்களையும் நிகண்டு முதலிய கருவிநூல்களையும், மனமும் ஆவலும் ஒத்த நிலையில் கற்று, கண்டோர் எவரும் வியப்புறத் தன் கல்வியில் சிறப்புற்று விளங்கினார். இவருடைய தந்தையார் தமது மூதாதையர் போல தமிழில் மிகத் தேர்ச்சி பெற்ற ஒருவர். ஆனால் அத்துடன் மருத்துவத்துள்ளும் சிறந்தவராயிருந்தார். தமிழில் பாண்டித்தியம் உடையவரே முற்காலத்து மருத்துவ விற்பன்னராயிருந்தது உலகறிந்த விஷயம். அவ்வாறே தமிழ் வல்லுனராகிய கந்தப்பிள்ளையவர்களும் தனது வைத்திய திறமையுடன் தமிழையும் வளர்க்க விரும்பி இயலிசைநாடகமென்னும் முத்தமிழையும் வளர்க்க வேண்டுமென்னும் ஆவல் கொண்டு அக்காலத்தில் ஆர்வம் குன்றி மறைந்து ஒழிந்து விடும் நிலையில் இருந்த இசைக்கலையையும் நாடகக் கலையையும் வளர்த்து உலகுக்கு இசையினால் இறைவன் திருவளைப் பெறுவதற்கும் நாடகத்தினால் மக்கள் நல்வாழ்வின் விளக்கம் பெற்று வாழ்வதற்கும் உதவி புரிய வேண்டி அநேக நாடகங்களை மிகவும் சிறந்த முறையில் எழுதினார். அக்காலத்து நூல்களெல்லாம் ஏடுகளில் எழுதப்படுவது வழக்கம். அவ்வாறே ஒரு நாடகத்தை எழுதிக்கொண்டிருக்கும் நேரம் மண்ணுலக வாழ்வை நீத்தார். அப்போது நாவலர்க்கு. வயது ஒனபது ''தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவது மைந்தன் கடமை'' என்பதற்கிணங்க தனது தந்தை ஆவலோடு செய்த தொண்டினை நிறைவேற்றி வைப்பது தனது கடமை என மனதில் எண்ணி, அந்நாடகத்தின் மீதிப்பகுதியை தந்தையின் கருத்தமைய எழுதி நிறைவேற்றினார். அந்நாடகத்தை தனது தமையனிடம் காண்பித்தார். அதைக்கண்டு உற்றார் உறவினர் எல்லோரும் மிகவும் போற்றி மகிழ்ந்து கொண்டனர். அன்று தொட்டு அவர் வெண்பாக்கள் பாடி அதில் வல்லுனர் ஆனார்.

இவருடைய அறிவு நுட்பங்களைக் கண்டு மகிழ்ந்த உறவினரில் விசுவநாத முதலியார் என்பவரும் ஒருவர். இவருடைய தமிழ் அறிவின் திறத்தோடு ஆங்கிலமும் கற்பிக்க வேண்டுமென்று விரும்பி பேர்சிவல் துரை

நடத்தி வந்த ஆங்கிலப் பள்ளிக்கூடத்தில் இவரைக் கல்வி கற்க விடுத்தனர். மாணுக்கர்களுக்கு இருக்க வேண்டிய அறிவு நுட்பமும் ஆர்வமும் முதற்படியை நோக்கி இருந்ததால் தமிழைப் போல ஆங்கிலத்திலும் வல்லுனர் ஆனுர். அதனுலே பேர்சிவல் துரைக்குத் தமிழ் ஆசிரியரானுர். அக்காலத்தில் பேர்சிவல் துரை கிறிஸ்தவ நூலாகிய பிபிலிய வேதத்தை மொழிபெயர்ப்புச் செய்து வந்தார். நாவலர் அவர்களுடைய தமிழும் ஆங்கிலமும் செறிந்த அறிவு நுட்பத்தைக் கொண்டு தன்னுடைய மொழிபெயர்ப்புக்கு உதவி செய்யுமாறு நாவலரைக் கேட்டுக் கொண்டார். அதனுலே நாவலர் சைவசமயத்தின் ஆதியும் அந்தமுமாகிய கொள்கைகளை அறிந்ததோடு கிறிஸ்த மதத்தின் கொள்கைகளையும் ஐயம் திரிபுற விளங்கிக்கொண்டார். மொழிபெயர்ப்பில் கருத்துக்கள் சிறிதும் மாறுபடாத வண்ணம் பொருளும் சுவையும்ஆங்கிலத்தைப் போலவே விளங்க இனியதும் எழியதுமான தமிழ்ச் சொற்களால் மொழிபெயர்த்துதவினர்.

இதே காலத்தில் சென்னையிலும் பிபிலிய வேதம் மொழிபெயர்க்கப்பட்டது. அவைகளை ஒப்பிட்டு நாவலர் அவர்களுடைய மொழிபெயர்ப்பிற்கே பரிசு வழங்கப்பட்டது. பரிசுபெற்ற புகழுடன் நாவலர் அவர்கள் யாழ்ப்பாணம் வந்து மேலும் புகழ் பெற்ருர். பேர்சிவல் துரைமகனுர் தன்னுடைய சமையத்தைப் பரவச் செய்வதற்கு எடுத்த முயற்சிகளெல்லாம் நாவலர் அவர்களுடைய உள்ளத்தில் நம்நாட்டு மக்கள் மொழியார்வமும் சமயார்வமும் இன்றி அந்நிய நாட்டவர்களுக்கு அடிமையாகி மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கின்ருர்களென்று துடிதுடித்தது. அவ்வுணர்ச்சியால் உந்தப்பெற்ற நாவலர் அவர்கள் சித்தாந்த சாத்திரங்களைப் பிறருதவியின்றி தானே படித்து அதன் ஆழ்ந்த கருத்துக்களைத் தெரிந்து கொண்டார். அதைத் தொடர்ந்து சகல சைவ ஆகமங்களையும் கற்றுத் தெளிந்தார். **வேதம் பொது நூலும் சிவாகமம் சிறப்பு நூலும்** ஆனதினுல் அதைக் கற்பதற்கு வடமொழியும் கற்கவேண்டியிருந்தது. அவர் அதையும் கற்றுத் தெளிந்தார். இவ்வாறு தமிழ் ஆங்கிலம் வடமொழி ஆகிய மும்மொழியிலும் தேர்ச்சி பெற்ற நாவலரவர்கள் சமய உட்கருத்துக்களையும் மொழியின் ஆர்வத்தையும் சகலர்க்கும் எடுத்துக்காட்ட ஆவல் கொண்டார்.

பேர்சிவல் பாதிரியார் தன் சமயத்தை வளர்ப்பதற்கு எடுக்கும் பிரயாசத்தைக் கண்டு நாவலர் அவர்களும் இவ்வாறு நமது சைவ சமயத்தையும் தமிழையும் வளர்க்க வேண்டும் என்று மனதில் விரதம் பூண்டார். தமிழினம் தலைநிமிர்ந்து வாழவும் சைவ சமயம் ஒப்பற்ற தன் மகிமையை உலகிற்குக் காட்டவும் வேண்டுமாயின் தான் பிரமச்சாரியாகவே இருந்தாற்ருன் இத்தொண்டை நிறைவேற்றலாமென்று மனதில் துறவியாகவேயிருந்து பணியாற்றத் தீர்மானித்தார்.

நாவலர் வாழ்ந்த காலத்தில் அநேக தமிழ் புலவர்களும் சிவநெறிப் பெரியார்களும் இருந்தும், மொழியையும் சைவ சமயத்தையும் தங்கள் அளவிலேயே புகழ் பெற வாழ்ந்தார்களன்றி உலகத்தவர்களும் அனுபவித்து இன்பமுற வாழவில்லை. ஆகையினுல் நாவலர் தமிழை மற்றவர்களுக்கு புகட்டுவதற்காக மாணுக்கர்களைத் திரட்டி அவர்களுக்கு இலவச முறையாகக் கல்வியூட்ட முயற்சித்தார். மொழியினுலே மக்களுடைய அறிவும் பண்பாடும் நாகரீகமும் மேன்மை மையடையும். ஆதியிலே உள்ளதான சைவமும் தமிழும் தளர்வுற்ருல் தமிழ் நாடெனும் பெயரே அற்றுப் போய்விடும். நமது அரசர் முதல் புலவர் ஈருக ஆதிகாலம் தொட்டு காப்பாற்றிய செல்வத்தை இழப்பது முறையல்லவென்று மிகவும் துடிதுடித்தார்.

பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே
கிடந்து சங்கத்
திருப்பிலே இருந்து வைகையாற்றிலே தவழ்ந்த
**பேதை**
நெருப்பிலே நின்று கற்ருேர் நினைவிலே இருந்து
ஓர்ஏன
மருப்பிலே பயின்ற **பாவை** மருங்கிலே **வளரு
கின்ருள்.**

என்ற சிறப்பு வாய்ந்த தமிழ்த்தாய் உலகத்தில் முதன் மொழியாக விளங்கியதை எவ்வாறு காப்பாற்ற வேண்டுமென்று எண்ணி தமிழ்நாடெங்கும் சைவப்பள்ளிக்கூடங்கள் அமைக்க வேண்டும்; சமைய நூல்களை சிறு சிறு புத்தகங்களாக அச்சிட்டு மாணவர்களுக்கும் வளர்ந்தவர்களுக்கும் அளிக்க வேண்டும், கோயில்கள் தோறும் சைவப் பிரசங்கங்கள் செய்யவேண்டும், கந்தபுராணம், இராமாயணம், பாரதம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் முதலியவைகளை கோயில்களிலே படித்துப் பயன் சொல்லுவித்தல் வேண்டும் ஆகிய இக்கைங்கர்யங்களை நடத்துதலே தமிழையும் சைவத்தையும் வளர்க்கும் முறையாகுமென மனதில் உறுதி கொண்டார்.

இதற்குப் போதிய பொருளாதாரம் இல்லாததனால் இத்தொண்டின் உட்கருத்தை விளக்கித் துண்டுப் பிரசுரங்கள் மூலமாக தமிழ் நாடெங்கும் அறிக்கை விடுத்தும் ஒருவரும் பொருள் உதவ முன்வரவில்லை. ஆனாலும் தானே சென்று பலபல இடங்களிலும் சொற்பொழிவாற்றி வந்தார். பாடசாலைகள் அமைப்பதற்கும் இலவச நூல்கள் அளிப்பதற்கும் வசதி இல்லையேயென்ற மனக்கவலையால் ஒருநாள் வழக்கமான சிவபூசை முடிந்தபின், **பாடும் வழக்கத்திற்குப் பதிலாக அன்று கூவென்று இறைவனை நினைந்து அழுதார்.** அடுத்த நாள் ஓர் அன்பர் மிகவும் கூடிய ஒரு தொகை பொருளுதவியை அனுப்பியிருந்தார். இல்லற வாழ்க்கையையே துறந்து நல்லற வாழ்க்கையே செய்ய விரும்பிய நாவலர்க்கு பற்றற்ற மனப்பண்பு உடையவர்க்கு இருந்த ஒரு ஆசை, சமயப்பணி செய்வதற்கு வேண்டிய பொருளாசைதான். அதற்கு மணிவாசகப் பொருமான் சொல்லிய வண்ணம் ''அழுதால் உன்னைப் பெறலாமே'', என்றபடி அழுதார். இறைவனும் அருள்புரிந்தார்.

அவ்வாறே தான் பிறந்த ஈழநாட்டிலும் இந்திய நாடாகிய தமிழ் நாட்டிலும் தமிழ்ப் பணியும் சைவப்பணியும், புலமைப் பணியும் சிவஞானப் பணியும் தனக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி சைவமக்களுக்கு தமிழையும் சைவத்தையும் மீண்டும் தழைக்க வைத்து இன்றும் அழியாதிருக்க ஆக்கிவைத்த குரவர் இவரே. சைவக்கலாசாலைகள் யாழ்ப்பாணத்திலும், சிதம்பரம் முதலிய புண்ணிய பூமியிலும் நிறுவிவைத்த பெரியாரும் இவரே.

ஆகையினாலே **நல்லைநகர் ஆறுமுக நாவலரவர்கள்** நமது நாட்டிலே தோன்றி, அழிந்து போகும் நிலையிலிருந்த தமிழையும் சைவத்தையும் வளர்த்தெடுத்து அறியாமை என்னும் இருளில் மூழ்கியிருந்த சைவமக்களுக்கு சிவநெறி காட்டி உய்வித்த பெருமையினால் இவரை ஐந்தாம் சமய குரவரென அழைப்பதும் தகுதியாகும். யாழ்ப்பாண நல்லை நகரிலே பிறந்ததனாலே ஈழநாட்டு மக்களுக்கு ஒரு சிறப்பு உண்டென்று பாராட்டி இக்கட்டுரையை வணக்கத்துடன் முடிக்கிறேன்.

வாழ்க நாவலர் பெருமான்

வாழ்க சிவநெறித்தொண்டு.

வாழ்க தமிழகம்.

* *

நல்லைநகராறுமுக நாவலர் பிறந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே
மேத்து புராணுகமங்க ளெங்கேபிரசங்க மெங்கே
யாந்தனறி வெங்கே யறை

— சி. வை. தாமோதரம்பிள்ளை

# சும்மா கிடைக்குமோ !

தருமையாதீனத் தமிழ்ப் புலவர் சித்தாந்தகலைமணி
**மகா வித்துவான் சி. அருணை வடிவேலு முதலியார்**
தருமபுரம்

''சும்மா கிடைக்குமோ சோணாசலன் பாதம்'' என்பது சில வேளைகளில் தமிழ் மக்களிடையே ஒரு பழமொழி போல வழங்குவது. ஒரு காரியத்தைக் குறித்து முயற்சி செய்பவர்கள் அம்முயற்சியில் சோர்வு அடையும்போது, விடாது முயன்றாலல்லாது காரியம் கைகூடாது, என்பதை நினைவூட்டுவதற்கே மேற்குறித்த தொடரைக் கூறுவர். இத்தொடர் ஒரு பழமொழியன்று. '**குகை நமச்சிவாயர்**' என்னும் பெரியார் அருளிய 'அருணகிரி அந்தாதி' என்னும் நூலில் உள்ள ஒரு பாடலின் முதலடியாகும்.

'குகை நமச்சிவாயர்' என்பவர் திருவண்ணாமலையில் வாழ்ந்த ஒரு பெரியார். அவரது திருமடம் இன்றும் அங்குள்ளது. வீரசைவ மதத்தினர். அண்ணாமலைப் பெருமானது அருளை நேரே பெற்றவர். அப்பெருமான் மீது இவர் பாடிய 'அருணகிரி அந்தாதி' என்னும் அழகிய நூல் எளிய நடையையும், அரிய பொருள்களையும் உடையது. நூறு வெண்பாக்களில் அமைந்த இவ்வரிய நூலைப் பள்ளியில் இளஞ்சிறார்களுக்குப் பயிற்றுவிப்பது அக்கால வழக்கம். அந்நூலிலுள்ள ஒரு பாடலின் முதலடியே மேற்காட்டிய தொடர். பாடலை முழுதும் காண்போம்.

''சும்மா கிடைக்குமோ சோணா சலன்பாதம்
அம்மால் விரிஞ்சன் அறிகிலார் — நம்மால்
இருந்துகதை சொன்னக்கால் என்னாகும் நெஞ்சே
பொருந்த நினையாத போது.''

''இறைவனது திருவடிகளைப் பிரம விட்ணுக்களாலேயே அறிய இயலவில்லை. அங்ஙனம் இருக்க நாம் இறைவன் திருவடியை இவர் அடைந்தார் என்று அவர்கள் அடைந்த வரலாற்றை சொல்லிக் கொண்டு நாம் ஒன்றும் செய்யாமலேயே இருந்தால் எப்படி அவைகளை அடைய முடியும்! இறைவன் திருவடிகள் ஒரு முயற்சியும் இல்லாமல் எளிதில் அடையக் கூடியவோ?'' என்பது பாட்டின் பொருள்.

இது, ஒரு தொண்டும் செய்யாதிருப்பவர்களை நோக்கிக் கூறியதாக இருப்பினும், சில தொண்டுகள் செய்து விட்டு இறைவன் அருள் செய்யவில்லையே என்று சலித்துக் கொள்பவர்களுக்கும் பொருந்துவதேயாம். இறைவனுடைய திருவருள் ஒருநாள், இரண்டு நாள் அல்லது சிலநாள் செய்து அந்த அளவிலே பெறக்கூடியதன்று. பலநாளும் — வாழ்நாள் அளவும் ஏன்? பற்பல பிறப்புக்களில் கூட மனமொழிமெய்களால் இடையறாது செய்யும் தொண்டினாலேயே பெறப்படுவதாகும். இதையறியாது, சில நாட்களில் சிறு தொண்டு செய்து இறைவன் திருஅருள் கிடைக்கவில்லையே என்று எண்ணுவது அறிவுடைமை ஆகாது. எத்துணைப் பேர் எத்துணை பெருந் தவங்கள் செய்தும் இறைவன் திருவருளைப் பெற இயலாமல் இருக்கின்றனர் என்பதை,

''உலவாக் காலம் தவமெய்தி
உறுப்பும் வெறுத்திங் குனைக்காண்பான்
பலமா முனிவர் நனிவாட''

''வான்வந்ததேவர்களும்மாலயனோடிந்திரனும்
கானின்று வற்றியும் புற்றெழுந்துங் காண்பரிய
தான்''

''புற்றுமாமர மாய்ப்புனல் காலே
உண்டியாய் அண்ட வாணரும் பிறரும்
வற்றியாரும்நின் மலரடி காணா — மன்ன''

என்பன போன்ற திருவாக்குகள் இனிது விளக்கும். இந்த அரிய கருத்தையே அருணகிரி அந்தாதித் தொடர் விளக்குகின்றது.

''பல்லூழிக் காலம் பயின்றவனை அர்ச்சித்தால் நல்லறிவு சற்றே நகும்'' என்கின்றது ''சைவ சமய நெறி'' என்னும் நூல். எனவே இறைவனை ஒருநாள் அல்ல இருநாள் அல்ல பலநாளும் மறவாமல் வழிபட வேண்டும். அவ்வாறின்றி இடையிலே சோர்வடைதல் கூடாது என்பது தெளிவா

கின்றது. இக்கருத்து நமது அருள் நூல்களாகிய திருமுறையில் சொல்லப்பட்டது.

காரைக்கால் அம்மையார் தம் நெஞ்சை நோக்கி, ''அறிவில்லாத மனமே பேய் சூழும் காட்டில் ஆடுகின்ற இறைவன் வாளா அருள் புரிவானோ? பல நாட்கள் நாம் அவனைப் பணிந்து குறையிரந்தால் அவன் நமக்கு இரங்குவான். இரங்குவானாயின் நம்மை எந்நிலையில் வைக்க மாட்டான். எந்தப் பதவியைத் தரமாட்டான் என்று கூறுமுகத்தால் இதனை அருளிச் செய்கின்றார்.

''அரங்கமாய்ப் பேய்க்காட்டி லாடுவான்வாளா
இரங்குமோ எவ்வுயிர்க்கும் ஏழாய் —
இரங்குமேல்
என்னாக வையான்தான் எவ்வுலகம் ஈந்
தளியான்
**பன்னா ளிரந்தாற் பணிந்து''.**

இதில் **''பன்னாள் இரந்தால் பணிந்து''** என்று அருளிச் செய்துள்ள தொடர் மிகவும் குறிக்கொளத்தக்கது. திருநாவுக்கரசரும் சிவன் என்னும் சிறப்புப் பெயரையுடைய நம் பெருமானை நாம் பவன் என்ற பெயரால் விடாது பல நாள் அழைத்தால் அப்பெருமான் இவன் நம்மை விடாமல் பல நாளாக அழைத்துக் கொண்டிருக்கிறான் என்று என்றாவது ஒருநாள் வந்து எதிர்ப்படுவான்'' என்று அருளிச் செய்கின்றார்.

''சிவனெனும் நாமந் தனக்கே
யுடையசெம் மேனியம்மான்
அவன்எனை ஆட்கொண் டளித்திடு
மாகில் அவன்றனையான்
பவன்எனும் நாமம் பிடித்துத்
திரிந்துபன் னாளழைத்தால்
இவன்எனைப் பன்னாள் அழைப்பொழி
யான்என் றெதிர்ப்படுமே''

இவ்வாறு பலநாள் பணிய வேண்டும் என்பதைக் கேட்டு நாம் சோர்ந்து விடுதல் கூடாது. பணிபவர்களுக்கு அவன் என்றாயினும் ஒருநாள் அவன் அருள் செய்தே தீருவான் என்பதையும் அருளாளர்கள் வலியுறுத்தியே சென்றிருக்கிறார்கள். 'இரைதேர் கொக்கொத்து இரவு பகல் ஏசற்று' இருக்க வேண்டுமென்கின்றார் மாணிக்கவாசகர். மடைத்தலையில் இசைக்குரிய மீனை எதிர்நோக்கி இருக்கும் கொக்கு மனத்தளர்ச்சி அடைவதேயில்லை. அதனால் அது தனக்குரிய நல்ல இரையைப் பெற்றே விடும். அதுபோலவே நாம் மனத்தளர்ச்சி அடையாதிருத்தல் வேண்டும். நம்மைத் தாங்கிக் கொள்ளுதல் இறைவன் கடமை யாதலால் அது பற்றி நமக்குக் கவலை வேண்டுவதில்லை. அவனுக்குச் செய்ய வேண்டிய பணிகளைச் செய்து கொண்டிருப்பது தான் நமது கடமை என்பதை,

தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே

என்னும் அப்பர் அருள்வாக்கு நன்கு உணர்த்துகின்றது. ஆகவே நாம் நம் கடனாகிய பணியைச் செய்து இறைவன் திருவருளுக்கு உரியவர்கள் ஆவோமாக !

வணக்கம்

✱ ✱

# அன்பிலே விளைந்தது

**வித்துவான் திருமதி ப. நீலா**
*தமிழ்ப் பேராசிரியை, தருமையாதீனத் தமிழ்க் கல்லூரி, தருமபுரம் — மாயூரம்*

**அன்பெனும் அரும்பொருள்:**

உலகமுவப்ப வலனேர்பு திரிதரும் பலர் புகழ் ஞாயிறு என்பிலதனைக் காயுமாறு போல அன்பிலதனை அறம் வருத்தும் என்றருளுவார் வள்ளுவர். அன்பினின்றும் தோன்றும் அருளுணர்வே ஆண்டவனை அடையும் வழியைக் காட்டும். நல்வழி காட்டுவோராகிய நால்வரும் இந்த அருட்பாதையை அகலப்படுத்தி மன்பதையை அவ்வழி நோக்கி அழைக்கின்றனர். அத்தனிவழி நடக்க நமக்குத் துணையாவது செங்கோடனின் வடிவேலும், மயூரமும் என்று உறுதி பூண்டால் அதிரவரும் அவதியில்லை.

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
பாதங்கள் மெய்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு
நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு
தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங்
கோடன் மயூரமுமே.

(கந்தரலங்காரம் - 70)

**வழிபடும் வகைதான் என்னே:**

நல்லவர் தீயர் எனாது நச்சினர் செல்லல் கெட சிவமுத்தி காட்டுவதோடு கொல்ல நமன்தமர் கொண்டு போமிடத்து அல்லல் கெடுக்கும் ஐந்தெழுத்தை மனமொன்றி ஓதுதலே உயர்வுதரும் என்றாலும் காலையில் மூழ்கி — கடிமலர் கொண்டு கண்ணுதலை வழிபடுதலும் அவசியம் என்பர் ஆன்றோர்.

நித்தலும் எம்பிரானுடைய கோயில் புகுந்து புலர்வதன்முன் அலகிட்டு, மெழுக்குமிட்டு, பூமாலை புனைந்தேத்தி, புகழ்ந்து பாடி, தலையாரக் கும்பிட்டுக் கூத்தாடும் போது சங்கரா போற்றி என்றும் ஜய ஜய போற்றி என்றும் கூற — அப்போது வரும் இன்பத்திற்கு இணையேது! எல்லையேது !!

பெரும்புலர் காலைமூழ்கி பித்தர்க்குப்
பத்தராகி
அரும்பொடு மலர்கள்கொண் டாங்கார்வத்தை
உள்ளேவைத்து
விரும்பிநல் விளக்குத்தூபம் விதியினால் இட
வல்லார்க்கு
கரும்பினில் கட்டிபோல்வார் கடவூர் வீரட்
டனாரே.

(திருமுறை 4 — 307)

கரும்பினில் கட்டிபோல இனிமையில் இணக்கம் தருவதோடு வேண்டிய வரமும் தருவார் என்பதை இராமாயணத்தில் வரம்பெற்ற வாலி உணர்த்துகிறான். அவனது சிவபக்தியைத் தாரை வெளியிடுகிறாள்.

அணங்கார் பாகனை ஆசை தொறுமுற்று
உணங்கா ஒண்மலர் கொண்டு உள்அன்பொடும்
இணங்கா காலம் இரண்டொடு ஒன்றினும்
வணங்காது இத்துணை வைக வல்லையோ —

(கிட்கிந்தா. தாரை புலம்பு படலம்)

என்று வாலியின் மறைவில் தாரை புலம்பும் சொற்கள் அப்பர் சுவாமிகளின் வாக்கிற்கு 'வாலி' இலக்கியமாவதைக் காட்டுகிறது.

**ஆட்பாலவர்க்கருளும் வண்ணம்:**

ஆட்பாலவர்க்கு அவன் அருளுவது எவ்வண்ணம் என்று கேட்டால் அதற்கோர் அளவில்லை — அதனால் ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் இறைவனைச் சோதிக்க வேண்டாம் என்பார் சீர்காழிச் செம்மல். சூழ்தரு வல்வினையும், உடல்தோன்றிய பல்பிணியும் பாழ்பட வேண்டுமானால் போழிள வெண்மதியும், அனல் பொங்கரவும் புனைந்த தாழ் சடையானை — திருப்பனந்தாளென்னும் தாடகையீச்சரத்தானையே மிக ஏத்துமின்! என்ற ஞானசம்பந்தப் பெருமானின் திருவாக்கில் ஓர் அற்புத வரலாறே அடங்கியுள்ளது.

**தள்ளரிய அன்பிற்குத் தாழ்ந்த சடை:**

விண்ணுக்கடங்காமல் வெற்புக்கடங்காமல் வந்த கங்கை இறைவரின் சடாமகுடத்திலே அடங்கினாள். பெண்ணை இடத்திலே கொண்ட

பெருமானை ஆணவத்தால் அசைக்க முடிய வில்லை. 'அன்புக்கிரங்கும் கருணைக் கடல்' என்பதை மெய்யாக்குவதே போலத் தன் செஞ்சடையைத் தாழ்சடையாக்கிக் கொண் டான் தாடகை எனும் தையல் நல்லாளுக் காக. அவ்வழகிய கதை இதுதான் —

பனசைப் பதியிலே தாடகை என்ற அரக்கி யொருத்தி (இராமாயணப் பாத்திரமல்ல) செஞ்சடையப்பரை (அருணஜடேஸ்வரர்) நாளும் நியமத்துடன் பூசனை செய்து வந் தாள். அன்றலர்ந்த மலர்களை அலங்கலாக்கி அம்பிகை பாகனின் திருவடிகளில் அணிவிப் பாள். ஒருநாள் கனகச்சடை விரித்த கண் ணுதலின் திருமுடிமேல் கோதையை அணி விக்கும் சமயத்தில் மேலாடை நழுவியது. நாயகனுக்குரிய திருப்பள்ளித் தாமத்தைத் தரையிலிட்டு மாசாக்கத் தாடகை விரும்ப வில்லை. நளிர் முடியில் அவற்றைச் சாத் தவோ நழுவிய ஆடை இடந்தரவில்லை. நடுங்கி நாணும் நங்கைக்கு அபயம் தர தன் முடியையே சாய்த்தான் சர்வேஸ்வரன். மாலைகளைக் கடுக்கை கமழும் திருமுடியில் அணிவித்துக் கைகுவித்து வணங்கினாள் தாடகை. அன்றிலிருந்து சிவபெருமானுடைய திருமேனி சாய்ந்தவாறே காட்சி தந்தது.

**கலயரின் காதன்மை:**

மாயூரத்திற்குக் கிழக்கே சுமார் பதி னைந்துகல் தொலைவில் — தொண்டர்மேல் வந்த கூற்றைக் காய்ந்த சேவடியார் எழுந் தருளியிருக்கும் திருக்கடவூர் உள்ளது. கடவூரிற் கலயன்தன் அடியார்க்கு மடியேன் என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் அப்பெரு மகனாரை அறுபத்து மூவருள் ஒருவராக்கித் தொழுதார்.

செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்தி ருக்கும் இல்லறத்தின் நற்றுணைவியாய் கலய ரின் மனைவியார் அமைந்திருந்தார். விருந் தினரும் தங்களை ஓம்பும் இனிய பெண்ணரசி வீட்டில் இல்லையானால் வாடி வறிதே திரும்பி விடுவர். இதனைக் கவிச்சக்கரவர்த்தி கம்பர் அரிய ஓர் இடத்தில் பெருமைபெறக் காட்டு கிறார். சடாயுவின் வலிய இறக்கை மேல் பட்ட இராவணனது வேல் மீண்ட காட்சி விலைமாதரை விரும்பிய புன்கணாரும் — அன்புகெழுமிய பெண் இல்லா இல்லம் சென்ற விருந்தினரும் — யோகியரை நெருங் கிய மென்னோக்கியரும் போல 'வேல்' — வறிதே மீண்டது.

பொன்னோக்கியார் தம்புலனோக்கிய
புன்கணோரும்
இன்னோக்கிய ரில்வழி யெய்திய நல்விருந்தும்
தன்னோக்கிய நெஞ்சுடை யோகியர் தம்மைச்
சார்ந்த
மென்னோக்கியர் நோக்கமும் ஆமென
மீண்டதவ்வேல்.
(ஆரண்யகாண்டம்)

விருந்தோம்பியும் — குங்குலியப் பணி செய்தும் வரவே வளமை குறைந்தது. தன் மங்கல அணியைக் கலயரின் கையில் கொடுத் துப் புதல்வர்களின் பசியை மாற்ற வழி தேடச் சொன்னாள் கலயரின் துணைவி. அவரோ அதனையும் ''அமுதகடேச''ருக்குச் செய்யும் குங்குலிய பணிக்கே ஆக்கினார். அன்புடைய சிந்தை அடியவரை நன்கறிந்த அண்ணல் அவரது வறுமையை ஒழித்து வளமையத் தந்தார். இத்தகைய நாட்களில் பனசையில் நடந்த அற்புதம் இவரது செவிக் கும் எட்டியது. சோழ மன்னன் யானை சேனை பரிவாரத்துடன் வந்து முயன்றும் செஞ்சடையப்பனை நேர்நிறுத்த இயலவில்லை.

**அன்பெனும் கயிறாடு அகப்பட்ட அருண்மலை:**

நன்னெறிக் கலயர் தாமும் மின்னெறித் தனைய வேணி விகிர்தனை வணங்கப் பனசை வந்தார். அருட்பெருகு தனிக்கடலாம் அண் ணலைத் தொழுது 'யானும் இவ்விளைப்புற்று எய்க்கும் இதுபெற வேண்டும் என்று பெரு மான் கழுத்தில் பூங்கச்சைக் கட்டித் தன் கழுத்தில் மானவன் கயிறு பூண்டு வலித்து வருந்தினார். அன்பின் பாசத்தாலே திண்ணிய தொண்டர் பூட்டி இளைத்தபின் திறம்பி நிற்க அண்ணலாற்கு ஒல்லுமோ! தீவண் ணன் நேரே நின்றார் — தேவர்கள் விசும்பில் ஆர்த்தார்.

அன்பிலே வளைந்தது — அன்பிலே நிமிர்ந் தது. இவ்வன்பின் திறத்தை அகில உலகமும் கண்டு ஆனந்தம் கொண்டது.

**பக்திசெய்ய பாவம் போகும்:**

வினையும் பிணியும் நீங்க, பகையும் பழி யும் அகல, அவலமும் அயர்ச்சியும் அகன் றொழிய பெண்ணொரு கூறுடையானின் பொற் பாதங்களைப் பல்காலும் பணிவோம். இம் மைக்குச் சோறும் கூறையும் தந்து அம் மைக்குச் சிவலோகமும் தரும் அவனருளுக் குத்தான் அளவேது!

வணக்கம் !

# இவ்வாறு இறைவனை இறைஞ்சுவாம்

**ம சி. சிதம்பரப்பிள்ளை**

இறைவனுடைய மென்மலர்ப்பாதங்களை இதய மலரில் இருத்த ஈரிரண்டு நெறிகள் உள்ளன. இறைவனைத் தந்தையாகக் கண்டார் ஒருவர். இன்னொருவர் தன்னை அடிமையாகக் கண்டு வழிபட்டார். வேறொருவர் இறைவனைத் தோழனாகக் கண்டார். மற்றுமொருவர் தலைவன் தலைவி நிலையில் நின்று வழிபட்டார்.

இதனையே சற்புத்திர மார்க்கம், தாச மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்று ஆன்றோர்கள் வகுத்துள்ளார்கள்.

தாசமார்க்கத்திலிருந்து தன்னையே மறந்து இறைவனை நினைந்து மனம் உருகி, தேனருவியாகப் பாடிய தாண்டகவேந்தருடைய பாற் கடலுள் ஒரு அகப்பை இதோ!

கொடுமைகள் பலசெய்தன நானறியேன்!
இரவும்பகலும் பிரியாது வணங்குவன்!
நெஞ்சம் உமக்கேயிடமாக வைத்தேன் !
சலம்பூ வொடு தூபம் மறந்தறியேன் !
தமிழோ டிசைபாடல் மறந்தறியேன் !
உன்னும மென்னுவின் மறந்தறியேன் !
எனவும்,

மாதர்ப்பிறைக் கண்ணியானை, போழிளங்
கண்ணியினை, பிறையிளங் கண்ணியினை,
ஏடுமதிக் கண்ணியானை, திங்கள்பதிக்
கண்ணியானை, நரியைக்குதிரை செய்வானும்!
தாழிளஞ் செஞ்சடையானும், சீர்தரு
பாடலுள்ளானும்;
எனவும்,

தலையே நீவணங்காய், கண்காள் காண்மின்
களோ! செவிகாள் கேண்மின்களோ !
மூக்கே நீமுரலாய் — வாயேவாழ்த்து
கண்டாய், நெஞ்சே நீநினையாய் —

கைகாள் கூப்பித் தொழீர் — ஆக்கையாற் பயனென்?
கால்களாற் பயனென்! உற்றாருளாரோ இறுமாந்
திருப்பன் கொலோ! தேடிக்கண்டு கொண்டேன்

எனவும்,
சொற்றுணை வேதியன் சோதிவானவன்
நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே !
எனவும்,

ஒன்று கொலாமவர் சிந்தையுயர்வரை
இரண்டுகொலா மிமையோர் தொழுபாதம்
மூன்றுகொ லாமவர் கண்ணுதலாவன
நாலுகொ லாமவர் தம்முகமாவன
அஞ்சுகொ லாமவராட ரவின்படம்
ஆறுகொ லாமவரங்கம் படைத்தன
ஏழுகொ லாமவரூழி படைத்தன
எட்டுக்கொ லாமவரீறில் பெருங்குணம்
ஒன்பது போலவர் வாசல்வகுத்தனர்
பத்துக் கொலாமவர் பாம்பின்கண்
எனவும்,

நங்கையைப் பாகம் வைத்தார்
விண்ணினை விரும்ப வைத்தார்
வாமனை வணங்க வைத்தார்
அறுவகைச் சமயம் வைத்தார்
அங்கமும் வேதம் வைத்தார்
எனவும்

மஞ்சனே மணியுமானாய் மரகதத்திரளுமானாய்
கோலமா மங்கைதன்னைக் கொண்டொரு கோலமாய,
கையராய்க் கபாலமேந்திக் காமனைக்கண்ணாற் காய்ந்து
முண்டமே தாங்கினானை முற்றிய ஞானத்தானை
முற்றுணை யாயினானை முதல்வர்க்கு முதல்வன் றன்னை
நிருத்தனை நிமலன்றன்னை நீணிலம் விண்ணின் மிக்கவிருத்தனை
எனவும்,

வென்றுளே புலன்களைந்தும் — நின்றுளே துளும்பு
கின்றேன் — கற்றிலேன் கலைகள் ஞானம் —
உணர்வுக்குஞ் சேயனானேன் — முன்னையென்
வினையினாலே மூர்த்தியை நினைக்கமாட்டேன்—
வளைத்துநின் றைவர்கள் வந்தெனை நடுக்கஞ் செய்ய —
எனவும்,
குனித்தபுருவமும் கொவ்வைச் செவ்வாயும்
பொன்மலையில் வெள்ளிக் குன்றதுபோல்
பூத்தன பொற்சடை பொன்போல்

பொன்னொத்த மேனிமேல் வெண்ணீறணிந்து
எனவும்,

ஈன்றாளுமா யெனக்கெந் தையுமாய்
கருவாய்க் கிடந்துன் கழலேநினையும்
புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்டின
எனவும்,

எங்கே யென்னையிருந் திடத்தேடி
பாடிப்பெற்ற பரிசில் பழங்காசு
தீண்டற் கரியதிரு வடியொன்றினால்
எனவும்,

ஓட்டைமாடத்தி லொன்பது வாசலும்
இன்றுளார் நாளையில்லை யெனும்
தேனைவென்ற சொல்லாலொடும் செல்வமும்
ஊனைவிட் டுயிர்போவதன் முன்னமே!
மாறுகொ ண்டுவளைத் தெழுதூதுவர்
கானமோடிக் கடிதெழு தூதுவர்
பார்த்துப் பாசம்பிடித் தெழுதூதுவர்
இரக்கமுன்ன றியாதெழு தூதுவர்
எனவும்,

அரியானை அந்தணர்தஞ் சிந்தையானை
கற்றானைக் கங்கைவார் சடையான்றன்னை
மனத்தகத்தான் றலைமேலான்வாக்கினுள்ளான்

குருகாம் வயிரமாங் கூறுநாளாம்
துறந்தார்க்குத் தூநெறியாய் நின்றான்றன்னை
வாயானை மனத்தானை மனத்துணின்ற கருத்
தானை
உருகாதா ருள்ளத்து நில்லார்போலும்
பொருளியலநற் சொற்பதங்க ளாயினானை
நினையாவென் நெஞ்சை நினைவித்தானை
யுணராவென் நெஞ்சை யுணர்வித்தானை
கையாற்கயிலை யெடுத்தான் றன்னைக்கால்
விரலாற் றோணிரிய வூன்றினானை —
எனவும்,

எண்ணுகே னென்சொல்லி யெண்ணுகேனோ
எனஈற்றில் திருவாய் மலர்ந்து —
உற்றவரு முறுதுணையு நீயேயென்றும்
உன்னையல்லா லொருதெய்வ முள்கேனென்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதாவென்றும்
பொழிலா ரூராவென்றே போற்றாநில்லே.

— திருச்சிற்றம்பலம்

* *

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோருல்கொண்டான் என்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின் றேனே.

— திருமூலர்

# திருவருளால் திக்குலா

**கோவை—மணி**

வருடம் ஒருமுறையாவது பாடல்பெற்ற தலங்களுக்கு யாத்திரை செல்ல வேண்டும் என்பது எமது சங்கத்தின் இலட்சியங்களில் ஒன்ருகும். இவ்வருடம் திருஞானசம்பந்தராலும், திருநாவுக்கரசராலும் தேவாரம் பாடப்பெற்ற திருக்கேதீச்சர திருத்தலத்திற்கு யாத்திரை செய்ய முடிவு செய்தோம். முற்கூட்டியே கடிதமூலம் பல ஆதரவாளர்களுடன் தொடர்பு கொண்டோம். பாலாவியின் கரைமேல் திகழும் மாதோட்டத்திற்கு போகும் வழியிலும் திரும்பி வரும் வழியிலும் உள்ள பிரதான தலங்களேயும், சரித்திரப் புகழ்பெற்ற இடங்களேயும் கண்டு களிக்க திட்டமிட்டிருந்தோம்.

3.5.68 வெள்ளிக்கிழமை காலே 4.30 மணிக்கு இ. போ. ச. பஸ்ஸும் ஏனைய யாத்திரிகர்களும், கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலே வந்தடைந்தனர். 5.00 மணிக்கு விசேட பூசை நடைபெற்றது. எல்லோரும் பூசையில் கலந்து கொண்டோம். யாத்திரிகர்கள் தத்தமக்குரிய ஆசனங்களில் அமர்ந்தனர். சங்க அங்கத்தவர்களும், ஆதரவாளர்களும், வழியனுப்பினுர்கள். எமது சமயபாடசாலே மாணவ மாணவிகள், ஆசிரியர்கள், பெற்ருேர்கள் பழைய மாணவ மாணவிகள், விசேட பிரமுகர்கள் உட்பட 67 யாத்திரிகர்கள் காலே 6.00 மணியளவில் கோவிலே விட்டுப் புறப்பட்டோம்.

பஸ் சீரான வேகத்தில் செல்கின்றது. எங்கும் ஒரே அமைதி. வானளாவி நிற்கும் கட்டடங்களேக் கொண்ட கொழும்பு மாநகரை கடந்து களனியாற்றின் பாலத்தைத் தாண்டி இருமருங்கும் தென்னேகள் நிறைந்த நீர்கொழும்பு பாதைவழியாக பஸ் செல்கின்றது. இடையிடையே பரந்த நெல் வயல்கள். பறவையினங்கள் கீதம்பாடிக் கீழ்த்திசையில் உதிக்கும் சூரியனே வரவேற்கின்றன. இறைவன் திருவருளே இயற்கையழகாகக் காட்சி தருகின்றது என மகிழ்ந்தோம். ஒரு சிலரின் கண்கள் இயற்கையழகில் ஈடுபட, பலரின் உள்ளங்கள் பஜனேயில் மகிழ்ந்தன. வி. பி. சாமி அவர்களின் முருக பஜனேயில் தொண்டர்கள் கலந்து, மெய் மறந்து, பக்தி பரவசமானுர்கள்.

காலே 8.30 மணியளவில் நாம் முன்னேஸ்வர தலத்தை அடைந்தோம். குளத்தில் கால் முகம் கழுவி, கோயில் பூசையில் கலந்தோம். ஆலயப் பிரதம குருக்கள் எம்மை இன்முகங் காட்டி வரவேற்ருர். இராமநாதன் மடத்தில் காலே உணவு பரிமாறப்பட்டது.

9.30 மணிக்கு யாத்திரை தொடர்ந்தது. சிலாபம், புத்தளம் முதலிய நகரங்களேக் கடந்து, இருமருங்கும் அடர்ந்த காடுகள் நிறைந்த புத்தளம் அனுராதபுரப் பாதையில் பஸ் மிக வேகமாக ஓடுகின்றது. பகல் 12.30 மணியளவில் அனுராதபுரப் புதிய கதிரேசன் கோவிலே அடைந்தோம்.

திரு. ச. சுவாமிநாதன் அவர்கள் அனுராதபுர நீர்ப்பாசன அலுவலகத்தில் கடமை புரிகிறவர். அவர் எம்மை வரவேற்ருர். கோயில் குருக்கள் எமக்காக விசேட பூசை நடாத்திஞர். எல்லோரும் பூசையில் கலந்தோம். பகல் உணவு அருந்தி சிறிது நேரம் இளேப்பாறினேம். திரு. வி. பி. சாமி, திரு. விசுவலிங்கம் ஆகியோர் திருமறை ஓதினுர்கள். திருவாளர் சிவசம்பு அவர்கள் ''முருகன் பெருமை'' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றினுர். ''இங்கு காற்று பலமாக வீசாது ஓங்கி வளர்ந்த மரங்களும் மலேகளும் தடுக்கின்றன. சூரியவெப்பம் அதிகம் தாக்காது இருண்ட கார்மேகங்கள் ஓடுகின்றன. சூட்டினுல் பூமி வெடித்து புழுதி பறவாது நித்திய மழை காக்கின்றது. வெள்ளப்பெருக்கினுல் சேதம் நடவாத கடலனேய வாவிகள் காக்கின்றன. முருகன் காக்கும் கடவுளாக நின்று அருள்புரிகின்ருனே! பக்தர்கள் மனதை மரங்களில் துள்ளி விளேயாடும் மந்திகள் பறிக்கின்றன. தொண்டர்கள் கோயிலே வலம் வந்து பஜனே செய்யும் ஓசை கேட்டதும் நிலத்திலும் கிளேகளிலும் அலேந்து திரிந்த மந்திகள் உயர்ந்த மரங்களில் வேகமாக ஏறி, மரநுனிகளே அடைந்து, மழை வரப்போகின்றதா? என்று அண்ணுந்து பார்க்கும் காட்சி திருஞானசம்பந்த சுவாமிகள் விவரிக்கும் திருவையாற்றுத் திருத்தலத்தை நினேவுபடுத்துகின்றன'', என்று எமது சங்கப் பெரியார் திரு. தி. பாலசுந்தரம் சொல்லி முடிப்பதற்குள் அன்பர் சிவசம்பு,

''புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட்டை
மேலுந்தி அலமந்த போதாக அஞ்சேலென்
றருள்செய்வான் அமரும்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர
மழையென்றஞ்சி
சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்கும்
திருவையாறே.''

என்னும் தேவாரத்தைப் பண்ணோடு பாடி முடித்தார்.

எல்லோருக்கும் ஒரே ஆனந்தம். ஒரு வயோதிபர் பழைய நகரத்தில் இருந்த கோவில் எவ்விதம் புதிய நகரத்திற்கு மாற்றப்பட்டது, விவேகானந்த சபை செய்துவரும் சமய சேவை என்பனபற்றி சுருக்கமாக விளக்கினர்.

2.30 மணியளவில் அனுராதபுரத்தை விட்டு மன்னார் பாதை வழியாக பஸ் செல்கின்றது. பாதையின் இருமருங்கும் பரந்த பச்சைப்பசேலென்ற நெல்வயல்கள், இடையிடையே அடர்ந்த காடுகள், வாவிகள், சிற்றாறுகள், வானெங்கும் பறவைகள் பறந்து திரிகின்றன. வாவிகளின் மேற்பரப்பை தாமரை மலர்கள் அழகுசெய்ய பஞ்சவர்ண இயற்கையழகு காண்போர் கண்களை கவர்ந்தன. குளக்கரைகளிலும் வயற்பரப்புகளிலும் மந்தைக் கூட்டங்கள், பறவை இனங்கள், நாட்டின் வளத்தை சிறப்பித்துக் காட்டுகின்றன. காடுகளுக்கூடாக செல்லும் பொழுது கூட்டம் கூட்டமாக நிலத்திலுள்ள மந்திகள் மரக்கிளைகளில் தாவி ஏறி உச்சக் கொப்புகளை அடைகின்றன. மேகக்கூட்டம் போன்ற வண்ணாத்திப் பூச்சிகள் மரங்களை மொய்க்கின்றன. புள்ளிமான் கூட்டங்கள் தாம் உயிர்தப்ப வேண்டும் என்று பயந்து ஓடுகின்றன. காட்டு யானைகள் தம் இச்சைபோல் திரிகின்றன. பாலை மரங்களிலும் காட்டு மல்லிகை, முல்லை செடிகளிலும் மலர்கள் கொத்துக்கொத்தாக மலர்ந்திருக்க தேன் வண்டுகள் தக்கை தக்கையாக மொய்க்கின்றன. இறைவன் திருவருளே இயற்கை அழகாக விரிந்திருக்கின்றது என எண்ணி உள்ளம் மகிழ்ந்தோம்.

மாலை 5.30 மணியளவில் மாதோட்ட நன்னகரை அடைந்தோம். திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் செயலாளர் அல்விராசா அவர்கள் எம்மை வரவேற்று நால்வர் நூல் நிலையத்தில் நாம் தங்குவதற்கு ஒழுங்கு செய்து தந்தார். பொதிகளை அங்கே வைத்து விட்டு உடைகளை மாற்றி பாலாவியில் தீர்த்த மாடினோம். பாலாவியில் நின்று திருக்கேதீச்சரஆலயத்தை நோக்கும்போது ஒரே அழகு. உயர்ந்த கோபுரத்தை பதுமைகள் அழகு செய்ய மயில் கூட்டம் நடனமாட, இயற்கையும் கலந்த ஓர் கவர்ச்சியான தனியழகு.

திருக்கேதீச்சரப் பெருமானுக்கு நிகழ்ந்த மாலை நேரப் பூசையில் கலந்தோம். அன்று தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் திருவிழாவாகையால் அக்கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றோர்களும் திரள் திரளாக வந்திருந்தனர். ஒரே பக்தர்கள் கூட்டம். வசந்த மண்டபத்தில் அடியார்கள் கூடினர். வேதபாராயணம் குருகுல மாணவர்களால் ஓதப்பட்டது. தேவார திருவாசக பாடல்கள் பண்ணோடு அவர்கள் பாடுவது ஒரே தனியழகு. பிரம்மஸ்ரீ நா. சுந்தரமூர்த்தி ஐயர் தலைமையில் எமது சங்கச் சமயப் பிரசாரகர் திருவாளர் சிவசம்பு ''அன்னை பராசக்தி'' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றினர். ஆசிரியர் திரு. சி. சின்னத்துரை அவர்கள் நன்றியுரை வழங்கினர். சுவாமி வெளிவீதி வலம் வந்தார்.

அப்பாபிள்ளை மடத்தில் இரவுணவு வழங்கப்பட்டது. எல்லோரும் நாவலர் வாசிக சாலையில் குழுமினோம். பகல் முழுவதும் பிரயாணம் செய்த களைப்பினால் எல்லோரும் அயர்ந்து தூங்கினர்கள். ஆனால் சிலருக்கு தூக்கமே வரவில்லை. முற்றத்தில் உள்ள வாங்கு ஒன்றில் அமைதியாகச் சேர்ந்து திருக்கேதீச்சர ஆலயப் பணியைப் பற்றி உரையாடினோம். திருவாளர் அல்விராசா அவர்களின் கண்களில் நீர் ததும்பியது. ''சைவம் வளர வேண்டுமானல் பாடல் பெற்ற தலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்'' என ஆறுமுகநாவலர் எழுப்பிய குரல் கந்தையா வைத்தியநாதனின் உள்ளத்தை எவ்வாறு உருக்கியது. நல்ல அந்தஸ்தில் உள்ள அந்த மகான் செல்வங்கள் எல்லாம் துறந்து தனது குடிசையில் இருந்து அல்லும் பகலும் உழைத்த உழைப்பு! பாரதநாட்டிற்கு காந்தி எப்படியோ அப்படித்தான் கந்தையா வைத்தியநாதன் எமக்கு! அவர் ஒரு கர்மயோகி மட்டுமல்ல சிறந்த பக்தனும்கூட. எதை மறந்தாலும் தீர்த்தக்காவடியை மறக்க மாட்டார்''. காற்று அடித்தாலென்ன? மழை பெய்தாலென்ன? உடம்பு வருத்தத்தால் வாடினுலென்ன? காலை எழுந்து பாலாவியில் தீர்த்தமாடி, ஒரு செம்பு தீர்த்தம் எடுத்துவந்து, சிவலிங்க அபிசேகம் செய்து கோவிலை வலம் வந்து, பக்தியில் பெருமானை வணங்கும் காட்சி உள்ளத்தை உருக்கும் காட்சி மாணிக்கவாசக சுவாமிகள் போல பொருளும் அருளும் பெற்ற அடியார் அவர்'' என்று உள்ளம் குழைந்து சொன்னர்.

எல்லோரும் தீர்த்தக்காவடி எடுக்கலாமா? என்று கேட்டேன். இங்கு ஒரு கட்டுப்பாடு மில்லை. எல்லோரும் காவடி எடுக்கலாம் என்றார், மறுநாள் நிகழ்ச்சிகளை எண்ணி எண்ணி மனம் சுழலும்போது இரவு தூக்கமே வரவில்லை. ஒருவாறு அயர்ந்து தூங்கினேன்.

கோழிகள் கூவின. குருக்கைகள் அலர்ந்தன. பழுத்துக் குலுங்கும் மாமரங்களில் இருந்து குயில்கள் கூவுவது திருக்கேதீச்சர பெருமானை திருப்பள்ளி எழுப்புதல் போல இருந்தது. காலைக்கடன் முடித்து தீர்த்தக் காவடி எடுக்க கோவில் மடத்தில் வரிசையாக நின்றோம். ஓர் பெரியவர் காவடிக்கு செம்பை கொடுக்கிறார். வரிசை வரிசையாக பக்தர்கள் பாலாவியாற்றை நோக்கி நடக்கிறார்கள். ஒருவர் சிவபுராணத்தை தொடக்கிவிட எல்லோரும் ஒழுங்காக திருப்பிச் சொல்கிறார்கள். எங்கும் தமிழ்ப்பண் ஓசை. தேமதுரத் தமிழ்ஓசை வானெங்கும் பரவுகின்றது. ஒரே மன அமைதி. அடியார்கள் பாலாவியாற்றில் தீர்த்தமாடுகின்றார்கள்.

மாணிக்கவாசகரின் மார்கழி நீராடல் இங்கு ஒவ்வொரு நாளும் நடைபெறுகிறது என்று எண்ணும்போது திருஞானசம்பந்தர் இத்தலத்தின்மீது பாடிய தேவார அடிகள் நினைவுக்கு வந்தன. இவ்வூர் மக்களைப் பற்றி திருஞானசம்பந்தர் அன்று கொண்டிருந்த எண்ணம் இன்றும் சரியாக இருக்கிறது.

''மூவெயில் செற்றவன்பற்றி, நின்றுறைபதி
யெந்நாளும் கருதுகின்ற வூர்''

அதனால்போலும் ''கடிகமழ் பொழிலணி மாதோட்டம்'' என்றும் புனிதமாக இருக்கிறது. தம்மை ''கடுவினை'' அடையாது இருப்பதற்காக இன்றும் எல்லாத் திசைகளிலுமிருந்து யாத்திரீகர்கள் வந்து பாலாவியில் தீர்த்தமாடி கேதீஸ்வரநாதரைக் கைகூப்பி சிரம் தாழ்த்தி சிவனை வழிபடுகின்றனர்.

பாலாவித் தீர்த்தத்தை குடத்தில் நிரப்பிய ஒவ்வொருவரும் தங்கள் தலையில் வைத்து இரு கரங்களாலும் பிடித்த வண்ணம் திருக்கேதீச்சரப் பெருமான் சந்நிதியை நோக்கி நடக்கிறார்கள். இரு வரிசைகளில் பக்தர்கள் ஒழுங்காக நடக்கிறார்கள். ஒவ்வொருவர் வாயில் இருந்தும் பிரணவ மந்திரம் ஒலிக்கின்றது. அவ்வொலி வானெங்கும் பரந்து செல்கின்றது. மூல மந்திரம் செபித்த வண்ணம் சிவலிங்க அபிசேகம் ஒவ்வொருவரும் செய்கிறார்கள். மனதில் ஒரே ஆனந்தம், அமைதி. ஒவ்வொருவர் முகத்திலும் சாந்தம் மிளிர்கின்றது.

''மணி! இந்த நிகழ்ச்சி எத்தனை தத்துவங்களை விளக்குகிறது பார்'' என்று சைவ இளவல் திருநாவுக்கரசு அரகில் வந்து ''பாலாவியாறு ஓர் பூரணப் பொருள்; ஒவ்வோர் குடத்திலும் உள்ளது பூரணப்பொருள். தீர்த்தத்தை ஏற்கும் மங்கள லிங்கமும் பூரணப் பொருள். மூன்று நிலையிலுமுள்ள ஒரே பூரணப் பொருளுடன் நாமும் சேர்ந்து கொள்வதால் பூரணம் அடைகின்றோம். பாலாவியாறு அள்ள அள்ளக் குறையாது. சிவலிங்கமும் ஏற்க ஏற்கத் தேங்காது. எத்தனை கோடி மக்களும் அந்தப் பாலியாற்றில் தம்மை புனிதப்படுத்திக்கொள்ளலாம். பாலாவியாறு ''அ'' குடத்திலுள்ள நீர். ''உ'' ஏற்கும் பொருள். ''ம்'' ஒருதரம் தீர்த்தக்காவடி எடுத்து முடிப்பது. ''ஓம்'' என்னும் பிரணவ மந்திரத்தை உணர்ந்ததற்குச் சரியாகும். இங்கு நாம் நான்கு பொருள்களைக் கவனிக்க வேண்டும். பாலாவியாறு, தீர்த்தக்காவடி எடுப்பவர்கள், குடத்தில் உள்ள தீர்த்தம், தீர்த்தத்தை ஏற்கும் சிவலிங்கம். காவடி எடுப்பவர்கள் ஒவ்வொருவரும் ''பசுக்கள்'' அவர்கள் தத்தமது இயல்புக்கு ஏற்படி வேறுபடுகிறார்கள். தம் பாவத்தை, மலத்தை, நீக்குவதற்காக காவடி எடுத்தல் என்னும் சாதனை செய்கிறார்கள். பதி மூன்று நிலைகளில் இருந்து ஒவ்வொரு ''பசு''வையும் சுத்தி செய்கிறார். சக்தியாக, திருவருளாக எங்கும் பரந்து பாலாவியாறு போல் நிற்கிறார். குடத் தீர்த்தம்போல ஒவ்வோர் உயிர்க்குமுயிராய் நிற்கிறார். பின் சிவமாக, முக்தி அளிக்கும் திருவடியாக, உயிர்கள் அத்துவிதமாகச் சேரும் ''மங்களம் ரூபமாக'' இருக்கிறார். பாலாவியாறு ''பிரமா'' குடத்தில் உள்ள தீர்த்தம் ''விஷ்ணு'' லிங்கம் ''உருத்திரன்'' ஒருபொருளே சாதகனுக்கு மூன்றாகத் தோன்றுகின்றது. மூன்றிலும் ஒற்றுமை காண்பது சாதகன் நோக்கமாக இருக்க வேண்டும். பாலாவியாறு ''ஓம்'' குட தீர்த்தம் ''நம'' லிங்கம் ''சிவாய'' வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாம ''நமச்சிவாய''வே. குடம் குயவனால் செய்யப்பட்டது. அதுபோல நமக்கு தனுகரண புவன போகங்களை இறைவன் இயற்கையின் கரங்களுக்கூடாகத் தருகின்றார். அவர் ஒவ்வோர் உயிருக்கும் தந்த பாத்திரம் நமது உடல். ஒவ்வொருவர் உடலும் இந்த குடம் போன்றது. குடம் தந்த குயவனுக்கு கடன் தீர்க்கும் முகமாக பணம் கொடுக்கிறோம். இவ்வுடல் தந்த இறைவனுக்கு கடன் தீர்க்கும் முகமாக யாகம் செய்கின்றோம். குடம் பாதுகாக்கப்படவேண்டும். நாம் அதை ஓட்டையாக்கக் கூடாது. குடம் பாதுகாக்கும் நோக்கமாக பிரம்மச்சாரியம் தன்னடக்கம், பணிவு முதலிய நற்குணங்கள்

கைக்கொள்ளப்படுகின்றன. கடன் தீர்க்கா விட்டால் குயவன் குடம் செய்யமுடியாது. குயவன் குடம் செய்யாவிட்டால் இந்தப் புண்ணிய கர்மத்தைச் செய்து முத்தி அடைய முடியாது. குயவனை நாம் பேணுவதால் குயவன் எம்மைப் பேணுகிறான். யாகத்தால் நாம் இயற்கையைப் பேண இயற்கை எம் மைப் பேணுகின்றது. யாகமே இல்லறம் துறவறமாகப் பகுக்கப்பட்டுள்ளது. இறை வன் தந்த இவ்வுடலைப் பாவித்து சாதகன் தன் ஆத்மாவை இறைவனுக்கு நிவேதனம் செய்யவேண்டும். ஆணவ இருளில் இருக் கும் உயிர் இறைவன் திருவருளால் கிடைத்த தனுகரணங்களைக் கொண்டு தன்னைத்தானே உயர்த்த அவன் அருளாலே அவன் பாதத்தை அடைய வேண்டும். ஒருதரம் திருக்கேதீச்சர பெருமான் சந்நிதியைத் தரிசித்தவர்களுக்கு ''வேத ஆகம'' பயன் முழுவதும் கிடைத்து விடும். உண்மையில் திருவருள் பிரகாசிக்கும் தலம் இது என்று வியந்தார்.

சூரியன் தன் சிவந்த கதிர்களை வீசியவண் ணம் உதயமாகின்றான். ஏற்கனவே ஏற்பாடு செய்ததுபோல ஸ்தபன கும்பாபிஷேகம் கோவில் குருக்களால் அழகாக நடாத்தப் பட்டது. அடியார்கள் தீபாராதனையில் கலந்து மகிழ்ந்தனர். அன்றைய திருவிழா கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர்களால் நடாத்தப்படுவதால் பெருந்திரளாக பக்தர் கள் வந்திருந்தனர்.

பகல் உணவு உட்கொண்டபின் கொழும்பை நோக்கிப் புறப்பட்டோம். மன்னார் நக ரத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு மடுமாதா கோவிலை அடைந்தோம். அடியார்கள் மடு மாதாவை அன்னை பராசக்தியின் வடிவமாக கண்டு வழிபட்டனர். பக்தியின் சிறப்பையும் சமய ஒற்றுமையையும் அத்தலத்தில் காண லாம். தெய்வத்தை நாம் ரூப வேற்றுமை யின்றி எல்லாரும் மாதா பராசக்தியாக கண்டு அன்பு செலுத்துவது போற்றத்தக் கது. தாயும் இனமத வேறுபாடின்றி குழந் தைகளை தன் அன்புக் கரங்களால் அணைப் பது விந்தையிலும் பெரிய விந்தை. குழந் தைக்கும் தாய்க்கும் பிரிவேது. இறைவ னுக்கும் உயிருக்கும் பிரிவேது. ''மனிதன் தன் மன எண்ணங்களை இறைவன்மீது சுமத்தி ஏன் வேறுபட்டு அலைகின்றான்'' என்ற கேள்வி ஒவ்வோர் உள்ளத்திலும் தொனித்தது. மடுமாதாவை மெழுகுதிரி கொழுத்தி வழிபட்டுவிட்டு புத்தளம் மாரி யம்மன் கோவிலை இரவு 10.00 மணியளவில் அடைந்தோம்.

புத்தளம் சைவ முன்னேற்றச் சங்க போச கர்களான திரு. வை. கு. சுவாமிநாத ஐயர் அவர்களும், திரு. வி. நடராசா அவர்களும் சங்கத் தலைவர் திரு. ந. தில்லையம்பலம், காரியதரிசி திரு. சா. சிவசுதர்மா, தனாதி காரி திரு. வி. கந்தசாமி மற்றும் அச்சங்க அங்கத்தவர்கள் அவ்வூர் மக்கள் எம்மை வரவேற்றனர். குருக்கள் எமக்காக விசேட பூசை செய்தார். இரவுணவு பரிமாறப்பட் டது. அன்பர்கள் ஒன்றுசேர்ந்து பஜனை செய் தார்கள். அன்பர் சிவசம்பு ''அன்பே சிவம்'' என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கம் செய்தார்.

இரவு 11.00 மணியளவில் புத்தளத்தை விட்டுப் புறப்பட்டு 2.00 மணியளவில் கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய கோவிலை அடைந்தோம். பிள்ளைகளின் பெற்றோர்கள் தத்தம் பிள்ளைகளை அணைத்து ஆனந்தப் பட்டனர். ஒரு தடையும் இல்லாமல் திக்குலாவை நல்ல முறையாக முருகன் நடத்தி வைத்ததை எண்ணி அனைவரும் ஆனந்தப் பட்டனர்.

ஆம்! ''திருவருளால் திக்குலா'' இனிது நிறைவெய்தியதை எண்ணி வியந்து தத்தம் வீடு திரும்பிய அனைவருக்கும் செயலாளன் என்ற முறையில் நன்றிகூறி அடியேனும் இல்லம் ஏகினேன்.

*     *

## கொழும்பு, கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம்

# நால்வர் சமய பாடசாலை

எமது சங்க இலட்சியங்களில் மிக முக்கியமான ''நால்வர் சமயபாடசாலை'' கடந்த பதினைந்து ஆண்டுகளாக சிறப்புற நடைபெற்று வருகின்றது. இப்பாடசாலை போயா தினந் தோறும் காலை 8.30 மணி தொடக்கம் 11.30 மணி வரை கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இப்பாடசாலையில் பாலர் கீழ்ப் பிரிவி லிருந்து க. பொ. த. (சாதாரணதர) வகுப்பு வரை இருநூற்றுக்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் சமயக்கல்வி பயின்று வருகின்றார்கள். இதன் பயனாக மாணவர்கள் சிரேஷ்ட வகுப்பில் சித்தி யடைவதற்குரிய முக்கியபாடங்களில் ஒன்றான சமய பாடத்தில் ஆரம்ப காலத்திலிருந்து பயிற்சி பெறுவதுடன் ஒழுக்க சீலர்களாகவும், உயரிய பண்புள்ளவர்களாகவும் திகழவழிவகுத்துள்ளோம்.



### ஆசிரியர் குழு

திரு. வ. சி. செல்லையா
திரு. க. அரியரத்தினம்
திரு. சு. லிங்கேஸ்வரன்
திரு. பொ. பாலகிருஷ்ணன்
திரு. சி. விமலநாதன்
திரு. க. பாலசுப்பிரமணியம்
திரு. வ. செல்வரத்தினம்
திரு. க. செல்வராசா
திரு. வே. பெரியசாமி
திரு. வி. அம்பலவாணபிள்ளை
திரு. சி. இராமலிங்கம்
திரு. வ. இ. இராமநாதன்

மேற் கூறப்பட்ட அன்பர்கள் யாவரும் வேதனம் எதுவுமின்றி ஆசிரியப்பணி புரிந்து வருகின்றார்கள்.

இவர்கள் யாவர்க்கும் எமது நன்றிகள். இப்பாடசாலையை மேலும் சிறந்த முறையில் நடாத்துவதற்கு சைவப் பெரியார்களதும், மாணவ மாணவிகளதும், பெற்றோர்களதும், இந்து சமய ஆலோசனைச் சபையினதும் ஆதரவு மிகவும் வேண்டப்படுகிறது. இவர்கள் யாவரும் எமக்கு தங்கள் ஆதரவையும் ஒத்துழைப்பையும் என்றும் நல்குவார்கள் என நம்புகிறோம்.

சு. லிங்கேஸ்வரன்
(கௌரவ பாடசாலைச் செயலாளர்)

மாணவர் பகுதி

உ

# குமரா நீ வருக!



கங்கையணி சிவனுக்குபதேசம் செய்தோய்
    கருணை கொண்டருணகிரி துயர்தீர்த்ததேவே
மங்கைவள்ளி நாயகனே! மயிலேறும் மன்னு
    மால்மருகா வேல்முருகா மன்முடி மைந்தா
சிங்கமுகன் சூரனையும் போரிலே வென்று
    சீரலைவாய்த் திருக்கோவில் கொண்ட செந்தூரா
எங்கள்மன இருள்போக்கும் இறைவா என்றழைத்தோம்
    எழிலான கொம்பனித் தெரு குமராநீவருக!

நல்லோர்கள் நேயத்தைநாம் நாடவேண்டும்
    நாளுமுன் புகழ்தன்னைநாம் பாடவேண்டும்
இல்லையென்று சொல்லாதசொல் லெமக்குவேண்டும்
    என்றுமெம் மிதயத்தில் நீ வாழவேண்டும்
அல்லல்வினை அணுகாமல் ஆட்கொள்ள வேண்டும்
    அநுதினமும் நின்தாளில் சரணடையவேண்டும்
எல்லையிலா ஆனந்தனே இவையருளஇங்கே
    எழிலான கொம்பனித்தெரு குமராநீவருக !

அவச்சமய முதலான புறச்சமயத்தோரும்
    சேர்ந்தொன்றாய் நின்தாளை நினைந்தினமேஏத்த
சிவசுப்பிர மணியரென திருநாமத்தோடு
    தெய்வானை வள்ளியோடு திருக்கோயில்கொண்டு
பவவினைகள் போக்கிடுவாய் பன்னிருகண்ணுவென
    பக்தியுடன் திருத்தாளை வணங்கும் நல்லடியார்
எவருக்கும் அருள்சுரக்கும் இணையில்லா இறைவா
    எழிலான கொம்பனித்தெரு குமராநீவருக!

செல்வி. குலதேவி குமரகுரு


ச
வ
ர
ப
வ
ம
ணை

# கருணை

**கருணை** என்பது ஒப்பற்ற ஒரு பொருள். அதனை எல்லோரும் உடையவர்களாக இருக்க வேண்டும். இறைவன் கருணையே வடிவானவர். அவருடைய கருணையை நாம் பெற வேண்டும். எல்லோருக்கும் இறைவனுடைய கருணையைப் பெறுவதில் விருப்பந்தான். ஆனால் விரும்பியபடி எல்லோரும் பெறுகின்றார்களா? இல்லை. ஒரு சிலர்தான் பெறுகின்றனர். பலர் கடவுளுடைய கருணையைப் பெறாமல் கவல்கின்றனர். ஏன்?

கடவுள் சிலருக்குக் கருணை செய்தும், பலருக்குக் கருணை செய்யாமலும் இருப்பாராயின் அவர் பாரபட்சம் உடையவர் ஆகின்றனர். அன்றோ? கடவுளுக்கு எல்லோரும் குழந்தைகள்தானே. அன்புள்ள தாய் எல்லாக் குழந்தையும் ஒன்றுபோல் அன்பு பாராட்டி ஆதரிப்பாள். சில குழந்தைகளுக்குப் பாலுஞ் சோறும் ஊட்டி, சில குழந்தைகளைப் பட்டினி போடுவாளா?

எல்லாம்வல்ல இறைவன் பலருக்குக் கருணை புரியாமல் இருப்பாராயின் அதற்குக் தகுந்த காரணம் யாது? அவரோ கருணைக் கடல். பலர் வந்து தண்ணீரை முகர்ந்து கொண்டு போவதானல் கடல் வற்றிவிடாதே. கடவுளுக்குக் கருணையே திருமுகங்கள்; அவருடைய திருமுகங்களில் குற்றாலம் அருவியினும் மிகுதியாகக் கருணையருவி பொழிகின்றது. காகங்கள் கோடி கூடி நின்றாலும் ஒரு கல்லிற்குமுன் நிற்கா. அதுபோல், கோடி வினை கூடி நிற்கினும், கடவுளுடைய கருணை வெள்ளத்தில் ஒரு துளி படுமாயின் கோடி வினையும் பறந்து போம். இறைவனுடைய கருணை கடலினும் பெரிது. சமானமில்லாதது. அது ''தனிப்பெருங் கருணை'' ''கேழில் பரங்கருணை'' இத்தகைய இறைவனுடைய கருணையை எல்லோரும் எய்த வேண்டாவோ?

கடவுள் கருணை செய்வதில் தயங்குவதில்லை. ஒருவருக்கு ஒரு வண்ணமும் மற்றொருவருக்கு மறுவண்ணமும் அவர்பால் இல்லை. அவர் பாரபட்சம் அற்றவர். எல்லா உயிர்களும் அவருக்கு ஒன்றுதான். தண்ணீரில் பஞ்சை வைத்தவுடன் பஞ்சு தண்ணீரை இழுத்துக் கொள்கின்றது. கல்லைத் தண்ணீரில் வைத்தால் கல் தண்ணீரை இழுப்பதில்லை. ஏன்? அது தண்ணீரின் குற்றமா? கல்லின் குற்றமா? கடினமாக இருப்பதனல் கல் தண்ணீரைத் தனக்குள் பெறவில்லை, மென்மையான பஞ்சு சாம்பல் இவைகள் தண்ணீரைப் பெறுகின்றன. அது போல் கடினசித்தம் உடையவர்கள் கடவுள் கருணையைப் பெறுகின்றார்களில்லை. இரக்கமுள்ள சாதுக்கள் கடவுளுடைய கருணையைப் பெறுகின்றனர். கருணையினால்தான் கருணையைப் பெறவேண்டும்.

நம்மினும் தாழ்ந்த உயிர்கள் படுகின்ற துன்பத்தைக் கண்டு, நாம் உள்ளம் இரங்கி கருணை புரிவோமானல், நம்மினும் மேலான இறைவன் நம்மீது கருணை புரிகின்றான். நாம் யார்மாட்டுங் கருணை காட்டாது கல்லைப் போல இருப்போமாயின் கடவுள் கருணை நம்மீது எப்படி எய்தும்? கடவுள் கருணை மீது குற்றமில்லை. அதனைப் பெறுவதற்கு நாம் ஆயத்தமாக இல்லை. அதற்குரிய பண்பு பெறவில்லை. அதனல் நாம் கருணையுடையவர்களாகத் திகழ வேண்டும். மன்னுயிர்களை இன்னுயிரைப்போல் எண்ணி இரங்க வேண்டும்.

''எவ்வுயிருந் தன்னுயிர்போல் எண்ணி யிரங்க நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே
எவ்வுயிருந் தன்னுயிர்போல் எண்ணுந் தபோதனர்கள்
செவ்வறிவை நாடிமிகச் சிந்தைவைப்ப தெந்நாளோ''
—தாயுமானர்.

கருணை என்பது அணுத்துணையுமில்லாதவர், வெறும் பூஜையினலும் ஜபத்தினலும் இறைவனுடைய கருணையைப் பெறமாட்டார். ''கருணையினல் கடவுளுடைய கருணையைப் பெறலாம்.

**செல்வன் இ. ஆனந்தராஜ்**

# வேண்டுவோர் வேண்டும் வரம் ஈவான்

**இறைவனை** பிரார்த்திப்பது உலகிலுள்ள எல்லாச் சமயத்தாரும் மேற்கொள்கின்ற ஒரு வாழ்க்கை முறை. எந்த நேரமும் அவனிடமே சரண்புகுந்து அவன் வழிகாட்ட வாழ்கின்றவர்கள் இன்றும் நம்மிடையே பலர் உள்ளனர். சைவராய்ப் பிறந்தோர்க்கு இது பற்றிய மனவுறுதி இன்னும் மிகுதியாக இருத்தல் வேண்டும். நம் சமயாசாரியார்களுடைய வாழ்க்கை இறைவனுடைய அருளை நமக்கு அதிகமாக எடுத்து உணர்த்துகின்றது. நம் அடியவர்கள் இறைவனை வேண்டி என்னதான் பெறவில்லை? ''வேண்டுவார் வேண்டுவதை ஈவான் கண்டாய்'' என அப்பர் சுவாமிகள் பாடினார். ஆண்டவனுடைய உதவி நமக்குக் கிடைப்பதுநிச்சயம் தெரிந்தும் கிடைக்கும். தெரியாமலும் கிடைக்கும். சில சமயம் மனம் சோர்வடையும், ஏமாற்றமடையும், தாழ்வும் அடையலாம். எனினும் ஆண்டவனுடைய துணை பின் வந்து தாங்குதல் உறுதி. பொறுக்க முடியாத துன்பங்களைப் பொறுத்துக் கடந்து பலவாண்டுகள் கழிந்த பின்னரே, பின்னோக்கிப் பார்க்கும் பொழுது, ஆண்டவன் கருணையால்தான் நாம் தப்பித்தோம், துன்பத்தைக் கடந்தோம் என்று தெரியும். துன்புற்ற சமயத்தில் அக்கருணை நமக்குத் தெரியாது. கடவுள் துணை என்று மட்டும் எழுதினால் போதாது. அந்த எண்ணம் வாழ்க்கையின் ஆணிவேராக ஊன்ற வேண்டும்.

''பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து'' அவன் நமக்கு உள்ளும் புறத்திலேயும் உறைகிறான் என்று பாடல் பாடுகிறோம். உடன் இருப்பதை நாம் உணர்ந்து நடப்பது இல்லை. உணர்ந்து தர்ம வழியில் வாழவேண்டுவது என்பது சிறப்பானது. அப்பருக்கும் சுந்தரருக்கும் தண்ணீரளிக்கிறான். சோறளிக்கிறான். நாம் திகைத்தால் நிச்சயம் அவன் தேற்றுவான், என்று மணிவாசகர் கூறுகிறார். கடவுள் வந்து எப்படி உதவி செய்கிறார் என்பதைத் தர்க்க ரீதியாக நிரூபிக்க முடியாது. தர்க்கரீதியாக நிரூபித்தால் தான் நான் வழிபாட்டில் ஈடுபடுவேன் என்று கூறுவது விவேகமாகாது. உண்கிற உணவில் எது எலும்பாயிற்று? எது நரம்பாயிற்று? எது இரத்தமாயிற்று? என்பதை யாரும் தெரிந்து கொள்ளவில்லை. தெரிந்து கொண்டுதான் சாப்பிடுவேன் என்று சாப்பாட்டை நிறுத்தவுமில்லை. இறைவனை வேண்டுதலும் அப்படித்தான். எந்த வேண்டுதல் எப்படிப் பலனளித்தது என்று நிரூபிக்க முடியாது. ஆனால் நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

அன்றியும் பெருங்காரியங்களைச் சாதித்தவர்கள் கடவுள் உணர்வினாலேயே, கடவுள் பலத்தினாலேயே சாதிக்கிறார்கள். நம்முடைய பலத்தைக் கொண்டு மாத்திரம் பெருங்காரியங்களைச் சாதித்தல் இயலாது. வேண்டுவதற்கு நேரம் இடம் என்று ஒதுக்குவது நல்லதுதான். ஆனால் இறைவனை நம்ப வேண்டும். வேண்ட வேண்டும் என்ற உணர்வு எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் இருக்க வேண்டும். இறைவன் வேண்ட முழுதும் தருபவன் என்று உணர்ந்தவர்கள் நோயாளிகள். அநேகம் பேர் ஆண்டவனைச் சரண் புகுகிறார்கள். புகுந்த மாத்திரத்திலே அவர்களுக்கு ஓர் அமைதியும், வழியும் பிறக்கிறது. துன்பத்திலிருந்து மீளாதவர்கள்கூட மன அமைதி, ஆன்ம சாந்தி பெறுகிறார்கள். எனவே வழிபாட்டினுடைய அவசியத்தை ஒவ்வொருவரும் தம் வாழ்க்கையில் நன்கு உணர வேண்டும். அவனுடைய துணையாகிய பெரும்பலம் நமக்கு இருக்கிறது என்ற திட உணர்வானது நிச்சயம் அவர்களுடைய வலிமையையும், செயல் திறனையும், இன்பத்தையும் பெருக்கும்.

**செல்வி இராஜேஸ்வரி கந்தையா**

# வள்ளுவனும் வான்மறையும்

**சிந்தைக்கினிய,** செவிக்கினிய, வாய்க்கினிய, ஓதுதற்கு எளிய, உணர்தற்கு அரிய, பழந்தமிழின் பண்புகளைப் பளிங்கு போல் காட்டும் திருக்குறள் என்னும் திருமறையை எமக்கு அளித்தவர் தமிழ் நாடு செய்த தவப்பயனுய் அவதரித்த வள்ளுவப் பெருந்தகையாகும். உலகத்தோருக்கு ஒழுக்கமுறை வகுத்த சான்றோர் வரிசையில் சிறந்த ஒருவராக வைத்துப் போற்றப் படுபவராவார். உலகில் வாழும் அனைவரும் இன்று திருக்குறளைத் தலைசிறந்த நூலாகப் போற்றுகின்றனர். அதன் ஆசிரியர் திருவள்ளுவரை தலை வணங்கி ஏற்றுகின்றனர். ''எல்லோரும் திருக்குறளைப் படிக்க வேண்டும், அவர் வகுத்துள்ள நீதிகளைப் பின்பற்றி வாழவேண்டும், வள்ளுவர் சொல்லும் அற நெறியே எல்லோராலும் ஏற்றத் தகுந்தது'' என்று பலரும் கூறுகின்றனர். இன்று எம் நாட்டில் எழுந்துள்ள இவ்வுணர்ச்சி எல்லோராலும் பாராட்டத்தக்கது. செந்தமிழ் நூல்கள் எல்லாவற்றிலும் திருவள்ளுவர் ஆட்சி செலுத்துகின்ருர். திருவள்ளுவருக்கு பின் பிறந்த நூல்களில் எல்லாம் அவருடைய கருத்துக்கள் புகுந்திருக்கின்றன. மொழிகள் அமைந்திருக்கின்றன. திருக்குறளின் கருத்துக்களோ சொற்களோ, சொற்ருெடர்களோ ஏருத இனிய தமிழ் நூல்கள் ஒன்றுமே இல்லையென்று கூறிவிடலாம்.

திருக்குறளை இன்று உலகப் பொது நூலாக போற்றுகின்றனர்; திருவள்ளுவர் உலக குரு என்ற அரியாசனத்தில் ஏறி வருகின்ருர். திருவள்ளுவர் திருக்குறளைத் தமிழர்களுக்கு மட்டும் என்று இயற்றித் தரவில்லை. உலக மக்கள் அனைவருக்கும் பொது நூலாக ஆக்கித் தந்தார். இதனுல் தமிழகம் பெரும் புகழ் பெற்றது. இவ்வாறு பல்லாண்டுகளுக்கு முன்பே புத்துலகக் கவிஞர் பாரதியார் முழங்கினுர்.

''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான் புகழ் கொண்ட தமிழ் நாடு''

என்பது தீர்க்கதரிசியான பாரதியாரின் முழக்கம். இச்செந்தமிழ் முழக்கம் இன்று உலகெங்கும் பரவி வருவதைப் பார்க்கின்ருேம். இது தமிழர்க்கு சிறப்பு, செந்தமிழுக்கு தனிப் பெருமையாகும். நாடு பல கண்ட நல்லிசைப் புலவராகிய ஔவையார் ஒவ்வொரு நூலிற்கும் ஒவ்வொரு சிறப்புக் கூறிப் போந்தார். அவ்வரிசையில் வள்ளுவப் பெருந்தகையின் நூலிற்கு சிறப்புக் கூறும்போது

''அணுவைத் துளைத்தேழ் கடலைப்
புகட்டிக் குறுகத் தறித்த குறள்''

என மிகவும் சிறப்பாக குறிப்பிட்டிருக்கின்ருர்.

சமரசமும் கடவுள் திருமுன்பு அனைவரும் சமமே என்னும் பொது நோக்கமும் வள்ளுவரின் வாழ்வின் குறிக்கோளாக அமைந்திருந்தது என்பது கற்றறிந்தோர் என்றும் மறக்க முடியாத உண்மையாகும். சிறப்பு வேற்றுமைகளை அறவே ஒழிக்க வேண்டும். எவ்வுயிரையும் தம்முயிர்போல் பாவிக்க வேண்டும். புகழ் பொருளுக்காக ஆசை வைக்கக் கூடாது. பிறருக்குழைக்கும்பெருமை ஒன்றினையே வாழ்வின் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். இவற்றையே தாயுமானவர், இராமலிங்க சுவாமிகள் போன்ற பெரியார்கள் தாம் வாழ்ந்த சமரச வாழ்க்கை மூலம் மக்களுக்குப் போதித்துள்ளார்கள். சுருங்கக் கூறின் பிறர் குற்றமே பார்த்தல் புறங் கூறுதல் முதலியன இன்றி மனத்துக்கண் மாசிலாராகித் தம்மினுந் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களைத் தம்மாற் கூடிய வரையில் முன்னேற்ற முயற்சிப்பதே வள்ளுவப் பெருந்தகையின் பொது நோக்கின் அடிப்படையான கொள்கையாகும்.

வள்ளுவப் பெருந்தகை காட்டிய நெறியை கடைப்பிடித்து வாழ்தலே மாந்தர்க்கு நலந் தரும். பரநலமும், ஒழுக்கமுடைமையும் என்றுமே பிரிக்க முடியாத ஒரு தொடர்பை பெற்றிருக்கின்றன. ஒன்றையொன்று எப்பொழுதும் தழுவியே நிற்கும் இந்நெறியைத் தான் வள்ளுவர் கூறுகின்ருர். இந்நெறி நின்று வாழும் மாந்தர் என்றும் இன்பமாக வாழ்வார்கள். இன்பம் பெறுவதற்குரிய வழி யாது? என்னும் வினுவிற்கு பலர் பல வாறு விடை பகர்வார்கள். ஆனுல் வள்ளு

வர் கூறும் விடையாவது அறத்தால் வருவது தான் இன்பம் என்பதை

''அறத்தான் வருவதே இன்பம்;
மற்றெல்லாம் புறத்த புகழும் இல''
என ஈரடியால் கூறியுள்ளார்.

வள்ளுவர் அருளிய தமிழ் மறை உலகத் தெழுந்த ஒழுக்க நூல்கள் பலவற்றிலும் தலைசிறந்து விளங்குகின்றது. சாதி, மத, கால, தேசப் பிரிவுகளைப் பொருட்படுத்தாது, சிறந்த ஒழுக்க முறையை எல்லாருக்கும் பொதுவாக எடுத்துக் கூறிச் செல்வதே வள்ளுவரின் தனிப்பெருஞ் சிறப்பாகும். பரந்த நோக்கமும், விரிந்த பார்வையும் அமைந்த வள்ளுவப் பெருந்தகை கைம்மாறு கருதாது, தனக்கெனவும் வாழாது பிறர்க் கெனவே வாழ்ந்தார்.

செல்வி முத்துலெட்சுமி இராமசாமி

★

# உள்ளொளி பரப்பும் திருவாசகம்

"செந்தமிழுக்கு இனிமையூட்டும் நூல் களிற் சிறப்புடையதாகவும் — முன்னதாக வும் மிளிர்வது திருவாசகம். கல்நெஞ்சைக் கரைத்து கடவுளடியைக் காணச் செய்வதும் இதுவே. 'திருவாசகத்துக்குருகாதார் மற் றொரு வாசகத்துருகார்' என்ற சீரிய மொழி திருவாசகத்தின் தெய்வீகப் பணியை உற் றுணர்ந்த ஒண்தமிழ் வல்லாரால் ஓதப்பட்ட தாகும். பசும்புல்லின் மீதுள்ள பனித்துளி கதிரவன் ஒளிபெற்றுப் பிரகாசித்து கதிர வனின் ஆகர்ண சக்தியால் அவனுடன் ஐக்கியமாவதுபோல் இறைவனின் அன்பிலே திளைத்து நின்ற மணிவாசகர் இறைவனுடன் ஐக்கியப்பட்டதை திருவாசகம் உணர்த்து கின்றது.''

மனத்துக்கெட்டாத இறைவனுடன் ஐக் கியப்படச் செய்வது திருவாசகம். மேருவை வளைத்து முப்புரம் எரித்த முன்னவனைக் குருவாகக் கண்டு மணிவாசகர் அன்பிலே கனிந்து நின்றவர். அவரியற்றிய திருக் கோவையார், திருவாசகம் ஆகிய இரண்டை யும் படிக்கும்போது பக்திக் கடலில் ஆழ்ந்து விடுகிறோம். மருந்தும் மந்திரமுமாய் உள்ள சிவனை நாமும் அடைய சாதனமாக மணி வாசகரின் வாக்குகள் அமைந்துள்ளன. மக் களின் நெஞ்சங்களை உருக்கி, மலக்கட்டை அறுத்தெறிந்து சீரிய பேரின்பப் படிக்கட் டாக மிளிர்கின்ற மணிவாசகர் வாசகம் தமிழ் உபநிடதமாகும். உபநிடதம் என்றால் ஞானக்கருப்பொருள் என்று அர்த்தமாகும். ஞானக்கருப்பொருளை நண்ணுவதற்கு மணி வாசகம் என்ற மருந்தே ஒரு தனிப்பாதையு மாகும்.

## எல்லாரும் மனிதரா?

உறுப்புக்கள் எல்லாம் ஒருவருக்குப்போல் மற்றவருக்கும் அமைந்திருந்தால் எல்லா ருமே மனிதர்கள் என்ற இலக்கணத்துக்குட் பட்டவராக மாட்டார். மனிதனுக்குரிய பண்பே மனிதனைச் சிறப்பிப்பது. மனிதன் என்ற பிண்டத்துள் கருத்துடைப் பொருள் இருக்க வேண்டும். அது இல்லையானால் அது வெறும் பிண்டமாகும்.

அதுபோலத்தான் பாடல்கள் அன்று தொடங்கி இன்றுவரை எத்தனையோ பாடல் கள் அவ்வப்போது காணப்பட்டுள்ளன. பல் வேறுபட்ட கவிஞர்கள் காலந்தோறும் பாக் களைப் பாடுகின்றார்கள். ஆனால் எல்லாமே ஒன்றல்ல. 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த துரைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் 'நால்வர் நான்மணிமாலையில் அப்பர் சுவாமி கள் மாலையில் பாடிய 'பூவினுக்கருங்கலம் பொங்கு தாமரை' என்ற கருத்தை அடியொற்றி பூவெனப்படுவது பொறி வாழ்வு ஒன்றே என்று கூறியுள்ளார். அப் பாடலின் முன்னடியாக, பாவெனப்படுவது உன்பாட்டே' என்று மணிவாசகப் பெருமா னின் பாடலில் மிளிரும் தெய்வீகப் பண் பாழியில் மூழ்கி ஆடி வலிமையுடன் கூறுகின் கின்றார். 'எனப்படுவது' என்றால் சிறப்பாக குறிப்பிட்ட ஒன்றுபோல் இன்னொன்றில்லை யென்பதை அழுத்தமாகச் சொல்வதாகும். எனப்படுவதென்பதை வள்ளுவர் பல இடங் களில் கையாண்டு உறுதி கொடுத்திருக்கின் றார்.

### படிக்கவேண்டிய நூல்கள்

தமிழ் மக்கள் படிக்கவேண்டிய நூல்களுள் முக்கியமானவை தொல்காப்பியம், திருக்குறள், திருக்கோவையார் ஆகியவையாகும். இம்மூன்றினுலும் ஒப்பரிய தமிழ்ச்செழிப்பை நிச்சயம் எய்த முடியும்.

மணிவாசகரின் திருக்கோவையாரே எல்லாக் கோவைகளுக்கும் முன் தோன்றியது. ஏனைய கோவைகளுக்கில்லாத சீலச் சிறப்பு அதற்குள்ளது. அதனுலேதான் அதற்கு திருக்கோவையார் என்ற பெயருண்டானது. மணிவாசகர் காலத்திற்குப் பின்னர்தான் கோவைப்பாடல், பாவைப்பாடல் முதலிய பாவினங்கள் தோன்றின.

திருவெம்பாவைக்கும், திருப்பாவைக்கும் தொடர்பு காட்டச் சிலர் முயல்வர். எவ்விதத்திலும் ஒன்றுக்கும், மற்றதுக்கும் தொடர்பே கிடையாது. திருவெம்பாவை இவைகளைப் பற்றியே பாடப்பட்டது. அபின்னமாகி இறைவனேடு இணைந்துள்ள இறைவியை வழிபட்ட போதும் மணிவாசகர் இறைவனுடன் கலந்து பாடினுர். ஆனல் (ஆண்டாள்) சூடிகொடுத்த நாச்சியாரால் பாடப்பட்ட திருப்பாவை பாவையர் நோன்பு பற்றியே பேசுகிறது. தகுந்த கணவனை யடையப் பாவையர் கொள்ள வேண்டிய நோன்பை வலியுறுத்துகின்றது. திருவெம்பாவை நீராடும்போது மங்கையர் இறைவனைத் துதிக்கவேண்டுமென்ற ஒன்றையே இயம்புவது.

வைணவம், சமணம் ஆகிய சமயங்களில் பாவைப்பாடல் இடம்பெற்ற போதிலும் மணிவாசகரின் பாவையைப் போன்ற சிறப்பை நாம் கண்டுவிட முடியாது. 'உள்ளேன் பிற தெய்வம் உன்னையல்லால்' என்கிருர். 'ஆதியந்தமில்லா அரும்பெரும் சோதியை யாம் பாட' என்றுதான் திருவெம்பாவை தொடங்குகிறது.

### உணர்ச்சியே கவிதை

கவிதையென்பது உணர்ச்சியின் மொழிபெயர்ப்பென்று ஆபிரகாம் என்ற ஆங்கில அறிஞன் கூறுகின்றுன். மணிவாசகரின் பாடல் அவ்வறிஞனின் கருத்துக்கு முற்று முழுவதும் உட்பட்டேயுள்ளது. அவரது பாடல் உணர்ச்சியின் ஓட்டத்தை — உணர்ச்சிப் பிரவாகத்தை அப்படியே பிரதிபலிக்கின்றது. இரும்பு மனதை உருக்கி கரும்புச் சுவையைப் புகட்டுவது. ஊனினை உருக்கி உள்ளொளி பரப்பி உலப்பிலா ஆனந்தமாய' என்று அவர் பாடிய பாடலுக்கமைய அந்த மெய்யின் பத்தை அவர் பாடல்கள் அனைத்தும் இறைவனுடன் ஆன்மா நெருங்கிய தன்மை சிறப்புற விளங்குகின்றன.

இதுதான் அவர் பாடலை 'பாவெனப் படுவது உன்பாட்டே' என்று துரைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் கூறவைத்த தென்பதை யாம் உணர முடிகிறது.

**செல்வன் க. பாலேந்திரன்**

★

# ஒழுக்கம்

''ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்''

என்னும் வள்ளுவரின் ஈரடி வாசகம் ஒழுக்கத்தின் சிறப்பை எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. ஒழுக்கம் உயிருக்குச் சிறப்புத் தருகின்றது. ஒழுக்கம் இல்லையேல் உயிருக்கு விலையில்லை. நல்லொழுக்கம் சிறப்புத் தரும். தீயொழுக்கமானது வாழ்க்கையைப் பயனற்றுப் போகச் செய்து விடும். தீயொழுக்கம் அவ்வாறுன சக்தியைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

ஆறறிவு படைத்த மானிடராகிய நாம் ஒழுக்கம் தவறுமல் வாழ வேண்டும். **ஒழுக்கம் தவறுமல் வாழ்ந்தாலேதான் மனிதன் உயிர் வைத்துக் கொண்டிருப்பதற்குப் பொருள உண்டு.** ஒழுக்கம் தவறினுல் அதை விடச் சாவதே மேல். உயிரைவிட ஒழுக்கமே காக்க வேண்டிய பொருளாகும்.

அன்பு, அருள், தூய்மை, நன்றி, கருணை ஆகிய இவ்வைந்து உறுப்புக்களைக் கொண்டதே ஒழுக்கம். சமயப் பற்றற்ற ஒழுக்கம் வேரில்லா மரம். அதுபோன்றே ஒழுக்கமற்ற

கல்வியும் காட்டிலெறித்த நிலாபோல் பாழ்படும்.

''பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந் தோம்பித்
தேரினும் அஃதே துணை''
என்பது குறள்.

ஒழுக்கத்தைப் பழுதுபடாமல் காக்க வேண்டும். எவ்வளவுதான் படித்தவராயினும் சில சமயங்களில் வாழ்க்கையில் தவறிப் போவோம். ஒழுக்கத்தைக் காத்து வந்தோமாஞல் தவறமாட்டோம்.

கல்வியில் இழந்ததை மறுபடியும் அடைய முடியும். ஒழுக்கத்தில் இழந்தது இழந்ததே யாகும். திரும்ப அதை அடைய முடியாது.

ஒழுக்கமே பெருங்கல்வி. அதைக் கற்காமல் பிற கல்வி கற்றுப் பயனில்லை. என்பதைப் புலவர்

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்
என்னும் பாடலின் மூலம் விளக்குகின்ருர்.

தற்காலிக சுகபோகங்களுக்காக நாம் நம்முடைய ஒழுக்கத்தைப் பழுதாக்கிக் கொள்ளலாகாது. வாழ்வில் இன்பம் பெறுவதற்குரிய வழி, நம்முடைய ஒழுக்கத்தைப் பாதுகாப்பதையே பொறுத்ததாகும். ஒழுக்கம் தவறிஞல் அதை எழிதிற் பழுது பார்க்க முடியாது. பெருமையற்ற இடமே ஒழுக்கத்தின் பிறப்பிடமாகும்.

**செல்வி சுலோச்சஞ சுப்பிரமணியம்**

★

# தேவி வழிபாடு

''அன்னேயும் பிதாவும் முன்னறி தெய்வம்'' ''தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லே'' என்று தமிழும் ''சக்தியின்றேல் சிவமில்லே'' என்று சைவமும் கூறுகின்றது. ஆஞலும் நாம் நமது சைவமும் தமிழும்தானே இவ்வாறு கூறுகின்றன என்று எண்ணுவோம். ஆஞல் அன்னே வழிபாடு தொன்று தொட்டே உலகில் இருந்து வரும் நல்ல வழக்கமாகும். இது ஆராய்ச்சியாலும் சான்ருலும் பகிரப் படுவது ஒன்ருகும். வேத காலத்திற்கு முன்னமேயே அன்னேவழிபாடு சிந்துவில் தோன்றியது என்பது ஆராய்ச்சி முடிவு. சிந்து நாகரீகம் ''தாஸ்சியு'' அல்லது வானூல் சாஸ்திர நாகரீகமெனவும் கூறப்படுகிறது. அக்காலத்தில் வழக்கிலிருந்த இராசி மண்டலம் எட்டேயாகும். இந்த உண்மைக்கு இருக்குவேதம் சான்று பகர்கிறது. இவற்றுள் பெருமையாய் பேசப்படுவது கன்னி. தேவி வழிபாட்டின் தொன்மைக்கு வானூல் சாஸ்திரங்கள் உறுதி. பல வருடங்கள் ஓடியும் இன்னும் நவராத்திரி பூஜை கன்னி மாதத்திலேயே வெகு ஆடம்பரமாக கொண்டாடப்படுகிறது. தேவி ஆராதனேயாவது ஆலயங்கள் தோன்றுவதற்கு முன்பே தோன்றியது என்பது வெளிப்படை. இந்துக்களாகிய நாம் இன்று அகழ்வாரையும் தாங்கும் பூமாதேவியை வழிபடுகிறேம். ஆஞல் பூமா தேவியானவள் பழைய இருக்கில் இனன்ஞ வென்று அழைக்கப்பட்டாள். மற்றும் கலேமகள் எகிப்தில் ஐசிஸ் என்று வழங்கப்பட்டாள். காளியம்பாள், துர்க்காதேவி ஆகியோர் கொண்டிருந்த குணங்களே பிரிஜியா நாட்டு கிவேலே தேவதை கொண்டிருந்தாள். இவ்வாறு உலகின் பழைய சமயக் கொள்கைகளே சரித்திர ரீதியாக துருவி ஆராய்வோமேயாஞல் தேவி வழிபாடே மூலவேராகும். சமயங்களிடையே ஒற்றுமையும் இருப்பது விளங்கும். நாகரீக ஏணியில் ஆரம்பப் படிகள் சிலவற்றைத் தாண்டிய மனிதன் தன்னேச் சுற்றியிருந்த இயற்கை அன்னேயின் குணங்கள் பல தன்னே பெற்று வளர்த்த தாயின் குணங்களே ஒத்து இருப்பதைக் கண்டதும் தாயைப்போலவே இயற்கையையும் தெய்வமாகப் பாவித்து வணங்கியிருக்க வேண்டும். பின்னர் நாகரீக முதிர்ச்சியில் சக்தியில் விருப்பம் எழுந்ததும் சக்தி வழிபாடு சமயக் கொள்கையாக உலகெங்கும் பரவியதாகும். தேவி வழிபாட்டின் ஒப்பற்ற மகிமையையும் புனிதத் தன்மையையும் சென்ற நூற்ருண்டில் உலகுக்கு வாக்காலும் வாழ்க்கையாலும் விளக்கிய பெருமை ஸ்ரீ இராமகிருஷ்ணபரமஹம்ச தேவரை சார்ந்ததாகும்.

**செல்வன் ச. சாந்தகுமார்**

# ஞானப்பால் உண்ட குழந்தை

சோழவள நாட்டிலே சீர்காழி என்ற ஊரிலே சிவபாதவிருதையர் என்ற அந்தணர் ஒருவர் இருந்தார். அவருடைய மனைவியார் பெயர் பகவதியார். அவர்கள் இருவரும் சிவபிரானிடத்தில் மிகுந்த பக்தியுடையவர்கள். அக்காலத்திலே தமிழ் நாடெங்கும் சமண சமயமும் பௌத்த சமயமும் மேலோங்கி இருந்தன. சைவ சமயம் குன்றியிருந்தது. இதனால் கவலையடைந்திருந்த சிவபாதவிருதையர் சிவபிரானிடத்தில் முறையிட்டார். தமக்கு ஒரு சற்புத்திரரைத் தந்தருள வேண்டுமென்று அருந்தவஞ் செய்தார். சிவபெருமானுடைய திருவருளினாலே பகவதியார் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார். குழந்தையை அன்புடன் அவர்கள் வளர்த்து வந்தனர். குழந்தைக்கு மூன்று வயது நடக்கும் பொழுது ஒருநாள் சிவபாதவிருதையர்கோவிலுக்குப் போகும்பொழுது குழந்தை தானும் வர வேண்டுமென்று அழுதது. சிவபாதவிருதையர் தடுத்தபோதும் குழந்தை அதைக் கேட்கவில்லை. சிவபாதவிருதையர் குழந்தையைக் கூட்டிக்கொண்டு தோணியப்பர் கோயிலுக்குச் சென்றார். கோவிலுக்குப் போவதற்கு முன் தான் நீராடுவதற்கு திருக்குளத்திற்குப் போய் குழந்தையை குளத்தருகே விட்டு விட்டு தான் நீராடுவதற்கு தீர்த்தத்தினுள்ளே இறங்கி நீராடினார். தந்தையாரைக் காணாது குழந்தை துடித்தது. பின் நாலா பக்கமும் திரும்பிப் பார்த்துவிட்டு சிவபெருமானுடைய கோவிற் கோபுரத்தை அண்ணாந்து பார்த்துவிட்டு ''அம்மே அப்பா'' என்று அழத் தொடங்கியது. குழந்தை அழுத சத்தம் சிவபெருமானின் திருச்செவிகளிற் பட்டது. உடனே சிவபெருமான் பார்வதி தேவியாரோடு இடபவாகனத்தில் வந்து, குழந்தைக்குப் பொற்கிண்ணத்தில் திருமுலைப்பாலைக் கொடுத்தார். உடனே குழந்தையின் தந்தை பார்த்தார். யார் உனக்குப் பால் கொடுத்தது என்று கோபத்துடன் கேட்டார். உடனே குழந்தை கோபுரத்தைப் பார்த்து தோடுடைய செவியன் என்ற பாட்டைப் பாடினார். அதனால் ஞானப்பால் உண்டமையால் திருஞானசம்பந்தர் என்றும், இறைவன் ஆண்டமையால் ஆளுடைய பிள்ளையார் என்றும் பெயர் பெற்றார். பின் இவர் கோயிலுக்குப் போய் தேவாரம் பாடியருளினார்.

**செல்வி பாக்கியவதி சோமசுந்தரம்**

# திருநாவுக்கரசு சுவாமிகள்

திருநாவுக்கரசு சுவாமிகள் திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருவாமூரில் பிறந்தார். இவர் தகப்பனார் பெயர் புகழனார். இவர் தாயாரின் பெயர் மாதினியார். திருநாவுக்கரசர் வேளாளர் குலத்தைச் சேர்ந்தவர். இவருக்கு இவருடைய தாயாரும் தகப்பனாரும் மருணீக்கியார் என்னும் பெயரை இட்டார்கள். இவர் குழந்தையாய் இருந்த போதே இவருடைய தகப்பனாரும் தாயாரும் இறந்து விட்டார்கள். பின் இவர் தன்னுடைய சகோதரியாகிய திலகவதியாருடனே வாழ்ந்து வந்தார். இவர் சைவ சமயத்தில் இருந்து சமண சமயத்துக்கு மாறினார். இவருடைய சகோதரி மிகவும் கவலைப்பட்டு சிவபெருமானிடம் தனது தம்பியாரை திரும்பவும் சைவசமயத்துக்கு திருப்பி விடும்படி வேண்டினார். திலகவதியாருக்கு இரங்கிய இறைவன் திருநாவுக்கரசருக்கு சூல நோயைக் கொடுத்தார். இவரின் நோயின் கஷ்டத்தால் திரும்பவும் சிவபெருமானையே வழிபட்டு திரும்பவும் சைவசமயத்தில் சேர்ந்தார். இதை அறிந்த சமண சமய அரசன் கோபங் கொண்டு இவரை நீற்றறையில் இடுவித்தான். திருநாவுக்கரசர் இறைவனை நினைத்து ''மாசில் வீணையும்'' என்னும் பதிகத்தைப் பாடிப் பிழைத்தார். பின் இவரை யானையைக் கொண்டு மிதிப்பித்தார்கள். அதிலும் இவர் இறைவனின் அருளால் பிழைத்தார். அதிக கோபங் கொண்ட அரசன் இவரைக் கல்லுடன் கட்டி கடலில் தள்ளுவித்தான். இவர் அப்பொழுது ''சொற்றுணை வேதியன்'' என்னும் பதிகத்தைப் பாடினார். உடனே கல்லு தோணியாக மாறி கரையிற் சேர்ந்தார். பின் இவர் பல கோவில்களுக்குச் சென்று தேவாரம் பாடினார். பின் இவர் சிவானந்த ஞான வடிவாகி சிவபிரான் சேவடி சேர்ந்தார்.

**செல்வன் ச. வசந்தகுமார்**

# மாணவ இல்லங்கள்



## சம்பந்தர் இல்லம்

இல்லச் சின்னம்: "பொற்றாளம்"

இல்ல ஆசிரியர்கள் : திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்கள்
திரு. க. செல்வராசா அவர்கள்

இல்லத் தலைவன் : செல்வன். கு. தவகுருதேவன்

இல்லத் தலைவி : செல்வி. கா. காளிபாக்கியம்

* * *

## அப்பர் இல்லம்



இல்லச் சின்னம்: "உழவாரம்"

இல்ல ஆசிரியர்கள் : திரு. பொ. பாலகிருஷ்ணன் அவர்கள்
திரு. சு. லிங்கேஸ்வரன் அவர்கள்

இல்லத் தலைவன் : செல்வன் மு. கந்தவனம்

இல்லத் தலைவி : செல்வி த. தயாளரஞ்சனி

# சுந்தரர் இல்லம்



இல்லச் சின்னம்: **"செங்கோல்"**

| | | |
|---|---|---|
| இல்ல ஆசிரியர்கள் | : | **திரு. வே. பெரியசாமி அவர்கள்** |
| | | **திரு. வி. அம்பலவாணபிள்ளை அவர்கள்** |
| இல்லத் தலைவன் | : | **செல்வன் அ. சிவராம்** |
| இல்லத் தலைவி | : | **செல்வி க. இராஜேஸ்வரி** |

* * *

# மணிவாசகர் இல்லம்



இல்லச் சின்னம்: **"ஏடு"**

| | | |
|---|---|---|
| இல்ல ஆசிரியர்கள் | : | **திரு. சி. விமலநாதன் அவர்கள்** |
| | | **திரு. வ. இ. இராமநாதன் அவர்கள்** |
| இல்லத் தலைவன் | : | **செல்வன் நா. ஜெயராசா** |
| இல்லத் தலைவி | : | **செல்வி இ. முத்துலட்சுமி** |

# கொழும்பு கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம்
# "நால்வர் சமய பாடசாலை"
## 1968

### திருமுறை — நாவன்மை — கட்டுரைப் போட்டி முடிவுகள்

#### திருமுறைப் போட்டி

| | | | | |
|---|---|---|---|---|
| 1-ம் வகுப்பு | முதலாம் பரிசு | : | செல்வன். | சு. மகேந்திரன் |
| | இரண்டாம் பரிசு | : | செல்வி. | செ. சுசீலாதேவி |
| | மூன்றாம் பரிசு | : | செல்வி. | ம. தமிழ்ச்செல்வி |
| 2-ம் வகுப்பு | முதலாம் பரிசு | : | செல்வி. | சு. சாந்தி |
| | இரண்டாம் பரிசு | : | செல்வி. | சி. சுமித்திரா |
| | மூன்றாம் பரிசு | : | செல்வி. | சு. சரஸ்வதி |
| 3-ம் வகுப்பு | முதலாம் பரிசு | : | செல்வி. | கா. காளிமலர் |
| | இரண்டாம் பரிசு | : | செல்வன். | ச. வசந்தகுமார் |
| | மூன்றாம் பரிசு | : | செல்வன். | சு. பாலேந்திரன் |
| 4-ம் வகுப்பு | முதலாம் பரிசு | : | செல்வி. | த. தூயமணி |
| | இரண்டாம் பரிசு | : | செல்வன். | க. சத்தியநாதன் |
| | மூன்றாம் பரிசு | : | செல்வன். | ந. சிவபாலன் |
| 5-ம் வகுப்பு | முதலாம் பரிசு | : | செல்வி. | இ. பரமேஸ்வரி |
| | இரண்டாம் பரிசு | : | செல்வன். | ஆ. ராஜாராம் |
| | மூன்றாம் பரிசு | : | செல்வன். | ச. நந்தகுமார் |
| 6-ம் வகுப்பு | முதலாம் பரிசு | : | செல்வி. | இ. முத்துலட்சுமி |
| | இரண்டாம் பரிசு | : | செல்வி. | கு. குலதேவி |
| | மூன்றாம் பரிசு | : | செல்வி. | ஸ்ரீ இராஜேஸ்வரி |
| 7-ம் வகுப்பு | முதலாம் பரிசு | : | செல்வி. | க. இராஜேஸ்வரி |
| | இரண்டாம் பரிசு | : | செல்வி. | த. தயாளரஞ்சனி |
| | மூன்றாம் பரிசு | : | செல்வன். | க. பாலேந்திரன் |
| 8-ம் வகுப்பு | முதலாம் பரிசு | : | செல்வன். | ஆ. சிவராம் |
| | இரண்டாம் பரிசு | : | செல்வன். | ச. சாந்தகுமார் |
| | மூன்றாம் பரிசு | : | செல்வன். | மா. செந்தில்குமாரன் |
| க.பொ.த. வகுப்பு | முதலாம் பரிசு | : | செல்வன். | மு. கந்தவனம் |
| | இரண்டாம் பரிசு | : | செல்வன். | கு. தவகுருதேவன் |
| | மூன்றாம் பரிசு | : | செல்வன். | கா. காளிதாசன் |

#### நாவன்மைப் போட்டி

| | | | | |
|---|---|---|---|---|
| 1-ம் வகுப்பு | முதலாம் பரிசு | : | செல்வன். | சி. ரவீந்திரன் |
| | இரண்டாம் பரிசு | : | செல்வன். | த. கருணைச்சந்திரன் |
| | மூன்றாம் பரிசு | : | செல்வி. | கு. வாசுகி |
| 2-ம் வகுப்பு | முதலாம் பரிசு | : | செல்வி. | சு. சாந்தி |
| | இரண்டாம் பரிசு | : | செல்வி. | ந. பாலசிவனேஸ்வரி |
| | மூன்றாம் பரிசு | : | செல்வி. | சி. சுமித்திரா |

| | | | | |
|---|---|---|---|---|
| 3-ம் வகுப்பு | முதலாம் பரிசு | : | செல்வன். | ச. வசந்தகுமார் |
| | இரண்டாம் பரிசு | : | செல்வி. | கு. குருமணி தேவி |
| | மூன்றும் பரிசு | : | செல்வி. | ச. மல்லிகா |
| 4-ம் வகுப்பு | முதலாம் பரிசு | : | செல்வி. | சி. இலங்கேஸ்வரி |
| | இரண்டாம் பரிசு | : | செல்வி. | த. அற்புதரஞ்சனி |
| | மூன்றும் பரிசு | : | செல்வன். | ம. சுந்தரராஜ் |
| 5-ம் வகுப்பு | முதலாம் பரிசு | : | செல்வன். | ச. நந்தகுமார் |
| | இரண்டாம் பரிசு | : | செல்வன். | ஆ. ராஜாராம் |
| | மூன்றும் பரிசு | : | செல்வி. | இ. பரமேஸ்வரி |
| 6-ம் வகுப்பு | முதலாம் பரிசு | : | செல்வி. | கு. குலதேவி |
| | இரண்டாம் பரிசு | : | செல்வி. | சு. மாலதி |
| | மூன்றும் பரிசு | : | செல்வி. | இ. முத்துலட்சுமி |
| 7-ம் வகுப்பு | முதலாம் பரிசு | : | செல்வி. | த. தயாளரஞ்சனி |
| | இரண்டாம் பரிசு | : | செல்வன். | ச. பாலகுமார் |
| | மூன்றும் பரிசு | : | செல்வி. | க. இராஜேஸ்வரி |
| 8-ம் வகுப்பு | முதலாம் பரிசு | : | செல்வன். | ச. சாந்தகுமார் |
| | இரண்டாம் பரிசு | : | செல்வன். | ந. ஜெயராசா |
| | மூன்றும் பரிசு | : | செல்வன். | ஆ. சிவராம் |
| 9-ம் வகுப்பு | முதலாம் பரிசு | : | செல்வன். | சு. அரசரட்ணம் |
| | இரண்டாம் பரிசு | : | செல்வன். | கா. காளிதாசன் |
| | மூன்றும் பரிசு | : | செல்வன். | மு. கந்தவனம் |

## கட்டுரைப் போட்டி

| | | | | |
|---|---|---|---|---|
| 1-ம் வகுப்பு | முதலாம் பரிசு | : | செல்வி. | க. தங்கேஸ்வரி |
| | இரண்டாம் பரிசு | : | செல்வன். | சு. மகேந்திரன் |
| | மூன்றும் பரிசு | : | செல்வன். | பொ. ஸ்ரீ பத்மநாதன் |
| 2-ம் வகுப்பு | முதலாம் பரிசு | : | செல்வி. | ந. பாலசிவனேஸ்வரி |
| | இரண்டாம் பரிசு | : | செல்வன். | க. பாலசுப்பிரமணியம் |
| | மூன்றும் பரிசு | : | செல்வன். | நா. அசோக்குமார் |
| 3-ம் வகுப்பு | முதலாம் பரிசு | : | செல்வன். | ச. வசந்தகுமார் |
| | இரண்டாம் பரிசு | : | செல்வன். | இ. இரத்தினராஜ் |
| | மூன்றும் பரிசு | : | செல்வி. | சா. நந்தகுமாரி |
| 4-ம் வகுப்பு | முதலாம் பரிசு | : | செல்வி. | சோ. பாக்கியவதி |
| | இரண்டாம் பரிசு | : | செல்வி. | த. அற்புதரஞ்சனி |
| | மூன்றும் பரிசு | : | செல்வன். | சே. சிவசுப்பிரமணியம் |
| 5-ம் வகுப்பு | முதலாம் பரிசு | : | செல்வி. | ந. புஷ்பராணி |
| | இரண்டாம் பரிசு | : | செல்வி. | இ. பரமேஸ்வரி |
| | மூன்றும் பரிசு | : | செல்வன். | ச. நந்தகுமார் |
| 6-ம் வகுப்பு | முதலாம் பரிசு | : | செல்வன். | ந. சிவராசா |
| | இரண்டாம் பரிசு | : | செல்வி. | இ. முத்துலட்சுமி |
| | மூன்றும் பரிசு | : | செல்வி. | கு. குலதேவி |
| 7-ம் வகுப்பு | முதலாம் பரிசு | : | செல்வி. | த. தயாளரஞ்சனி |
| | இரண்டாம் பரிசு | : | செல்வி. | க. இராஜேஸ்வரி |
| | மூன்றும் பரிசு | : | செல்வன். | ச. பாலகுமார் |
| 8-ம் வகுப்பு | முதலாம் பரிசு | : | செல்வன். | மா. செந்தில்குமார் |
| | இரண்டாம் பரிசு | : | செல்வன். | ச. சாந்தகுமார் |
| | மூன்றும் பரிசு | : | செல்வன். | ஆ. சிவராம் |
| க.பொ.த. வகுப்பு | முதலாம் பரிசு | : | செல்வன். | கா. காளிதாசன் |
| | இரண்டாம் பரிசு | : | செல்வன். | சி. செல்வநாதன் |
| | மூன்றும் பரிசு | : | செல்வன். | சு. அரசரத்தினம் |

# கொழும்பு விவேகானந்த சபை

## அகில இலங்கை சைவ சமய பாடப் போட்டிப்

### பரீட்சை பெறுபேறுகள்

### *1967-ம் ஆண்டு*

| பெயர் | வகுப்பும் பிரிவும் | பெறுபேறு |
|---|---|---|
| | **2-ம் வகுப்பு — பாலர் பிரிவு 1** | |
| செல்வன். பா. பாலகிருஷ்ணன் | | சித்தி |
| செல்வன். பெ. புஷ்பராஜா | | சித்தி |
| செல்வன். க. ராஜேந்திரன் | | சித்தி |
| செல்வி. செ. பாக்கியலட்சுமி | | சித்தி |
| செல்வன். இ. இரட்ணராஜ் | | சித்தி |
| | **3-ம் வகுப்பு — பாலர் பிரிவு 2** | |
| செல்வி. த. அற்புதரஞ்சனி | | சித்தி |
| செல்வி. சோ. பாக்கியவதி | | சித்தி |
| செல்வி. க. புஷ்பராணி | | சித்தி |
| செல்வி. த. தூயமணி | | விசேட சித்தி |
| செல்வன். ந. சிவபாலன் | | விசேட சித்தி |
| செல்வன். க. சத்தியநாதன் | | சித்தி |
| செல்வி. செ. ஸ்ரீரங்கநாயகி | | சித்தி |
| செல்வி. சா. கிருஷ்ணகுமாரி | | விசேட சித்தி |
| | **4-ம் வகுப்பு — ஆரம்ப பிரிவு 1** | |
| செல்வன். மு. கணேசன் | | சித்தி |
| செல்வன். த. தயாளச்சந்திரன் | | சித்தி |
| செல்வன். சு. ரவீந்திரராஜா | | சித்தி |
| செல்வன். பெ. கணேசராஜா | | சித்தி |
| செல்வன். ச. நந்தகுமார் | | விசேட சித்தி |
| செல்வன். ஆ. ராஜாராம் | | சித்தி |
| | **6-ம் வகுப்பு — கீழ்ப் பிரிவு 1** | |
| செல்வி. த. தயாளரஞ்சனி | | சித்தி |
| செல்வி. வே. தவமணிதேவி | | சித்தி |
| | **7-ம் வகுப்பு கீழ்ப் பிரிவு 2** | |
| செல்வி. சி. சிவசாந்தி | | சித்தி |
| செல்வி. வே. வள்ளியம்மை | | சித்தி |
| செல்வன். ச. சாந்தகுமார் | | சித்தி |
| செல்வன். ஆ. சிவராம் | | சித்தி |
| | **9-ம் வகுப்பு — மேற் பிரிவு 1** | |
| செல்வன். தி. செல்வத்துரை | | சித்தி |
| செல்வி. க. இந்திராணி | | சித்தி |
| | **9-ம் வகுப்பு — மேற் பிரிவு 2** | |
| செல்வன். ச. மு. விவேகானந்தன் | | சித்தி |

# கொழும்பு, கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம்

# "நால்வர் சமய பாடசாலை"

# மாணவர் மன்றம்

## நிர்வாக சபை உறுப்பினர் 1968

| | | |
|---|---|---|
| மன்றப் பொறுப்பாசிரியர் | : | திரு. சி. விமலநாதன் அவர்கள் |
| தலைவர் | : | செல்வன். சண்முகம் சாந்தகுமார் |
| உப தலைவர் | : | செல்வி. இராஜேஸ்வரி கந்தையா |
| செயலாளர் | : | செல்வன். நடராஜா ஜெயராசா |
| துணைச் செயலாளர் | : | செல்வி. சுலோச்சனு சுப்பிரமணியம் |
| பொருளாளர் | : | செல்வன். சதாசிவம் பாலகுமார் |
| துணைப் பொருளாளர் | : | செல்வி. முத்துலட்சுமி இராமசாமி |
| இதழாசிரியர் | : | செல்வன். ஆறுமுகம் சிவராம் |
| துணை இதழாசிரியர் | : | செல்வி. குலதேவி குமரகுரு |

## செயற் குழு

செல்வன். முத்தையா கந்தவனம்
செல்வன். காளிமுத்து காளிதாசன்
செல்வன். கண்ணலிங்கம் பாலேந்திரன்
செல்வி. மாலதி சுப்பிரமணியம்
செல்வன். ஆறுமுகம் இராஜாராம்
செல்வி. இலங்கேஸ்வரி சிதம்பரப்பிள்ளை

எமது பாடசாலை மாணவர் மன்றம் வழமைபோல் இவ்வாண்டும் அங்கத்தவர்களின் ஒத்துழைப்பினுலும், ஆசிரியர்களின் ஆதரவினுலும் மிகவும் சிறந்த முறையில் செயலாற்ற முடிந்தது என்பதை பெருமகிழ்வுடன் தெரிவிக்கின்றேம். மாதம் ஒரு முறை கூடும் இம்மன்றத்தில் மாணவ, மாணவிகளின் பலவகைப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. சென்ற ஆண்டில் எம் மன்றத்தினர் கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் கலைமகள் விழாவை மிகவும் சிறப்பாக நடாத்தினர். இவ்வாண்டும் பல பயன் தரக்கூடிய விடயங்களை நடாத்த எண்ணியுள்ளார்கள். எமது மன்றப் பொறுப்பாசிரியர் திரு. சி. விமலநாதன் அவர்களுக்கும், மற்றும் பாடசாலை ஆசிரியர்களுக்கும், கௌரவ பாடசாலைச், சமய, நிர்வாகச் செயலாளர்களுக்கும் இம் மன்றம் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

வணக்கம்

**செல்வன். ச. சாந்தகுமார்**
*(மாணவமன்றத் தலைவர்)*

**செல்வன். ந. ஜெயராசா**
*(மாணவமன்றச் செயலாளர்)*

# நால்வர் நூலகம்

சமய குரவர் நால்வரின் வழியைப் பின்பற்றிப் பணியாற்றி வரும் எமது சங்கத்தினர் கடந்த இரு ஆண்டுகளாக நால்வர் நூலகம் என்னும் நாமத்துடன் நூலகமொன்றினை ஆரம்பித்து நடாத்தி வருகின்றனர். இட வசதி இல்லாச் சூழ்நிலை காரணமாக இப்போது நால்வர் சமய பாட சாலை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மட்டுமே இந்நூலகம் பயன்பட்டு வருகின்றது. சைவப் பெருமக்கள் யாவருக்கும் பயன்படக் கூடிய வகையில் பொது நூலகமொன்றினை எமது சங்கத்தின் ஆதரவில் கொம்பனித் தெருப்பகுதியில் வெகு விரைவில் ஆரம்பித்து நடாத்த எண்ணி யுள்ளோம். சைவ அன்பர்கள் பலர் வதியும் கொம்பனித்தெருப்பகுதியில் சமய இலக்கிய நூல்களை வாசித்து பயன் அடைய ஒரு பொது நூலகமொன்று இல்லாமை மாபெரும் குறையேயாகும். எதிர்வரும் ஆண்டில் இக் குறையைச் சைவப் பெருமக்கள் அனைவரினதும் பூரண ஆதரவுடன் நிவர்த்தி செய்ய இறைவன் திருவருளை வேண்டி நிற்கின்றோம்.

**ச. ஆனந்ததியாகர்**
**பெ. பூமிநாதன்**
*(நூலகப் பொறுப்பாளர்கள்)*

* * *

# இலங்கைப் பல்கலைக்கழகமும் இந்து மாணவர் சங்க பேராதனை முருகன் கோவிலும்

தமிழ் மகனும் தமிழ் மகளும் ஒருங்கு சேர்ந்து, அகம் குழைந்து நெக்குருகி, சைவத்தையும் செந்தமிழையும் நிலைபெறச் செய்வான் வேண்டி எடுத்த பெருமுயற்சிகள் பல. அவற்றுள் நம் சிறுர்கள் — பள்ளிச் சிறுர்கள் — பேராதனைப் பல்கலைக்கழக மாண்புமிகு மாணவ மாணவிகள் — பேராதனைக் குன்றின் மீது குமரக்கடவுளை எழுந்தருளச் செய்து ஒரு தெய்வீகப் பணியைத் திறம் படச் செய்துள்ளனர். இது ஒரு தலை சிறந்த தொண்டன்றோ !

மனமார வாயாரப் பாடி வாசித்தின்புற ஒரு கும்பாபிஷேக மலர் — எங்கள் கண்மலரில் வைத்துக் காப்பாற்றப் படைத்தும் தந்துள்ளனர் !

''அதியற்புத அதிமதுர சுத்தச் செந்தமிழாகிய — கந்தபுராணத்தின் கருவூலமான — தக்ஷகாண்டத்துக்கு உரையெழுதுவதோர் எழுச்சியை உற்பத்தி செய்தும் அது முற்றுதற்கு வேண்டும் அநுகூலங்களை அநுக்கிரகித்தும் — மூலமும் உரையும் அச்சில் வருவது கருதி ''அஞ்சலோம்பு மதி'' என்று எங்கள் கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கக் காப்பாளர் கனம் பொருந்திய வைத்திய கலாநிதி பேராசிரியர் அ. சின்னத்தம்பி அவர்கள் மூலம் அபயம் அளித்தும் —

மதிப்புக்குரிய இலங்கைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்க வாயிலாக வெளியீடு செய்தருளியும் முகிழ்த்த பெருங் கருணைத் திறத்தை மனமுருகி வாழ்த்தி வணங்குவாம்'' — என வாழ்த்தும் பேராசிரியர் — நாவலர் வழி வந்தோர் — பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களைத் துணை கொண்டு தக்ஷகாண்டத்துக்கு உரை செய்வித்தும் உதவியுள்ளனர்.

மேன்மைகொள் சைவத்துக்கு மாணவர்கள் செய்த பெரும் பணியை, நாமும், எமது கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்கமும் வாயார வாழ்த்துகின்றோம்.

**வ. செல்வரத்தினம்**
*(முன்னாள் செயலாளர்)*

## கொழும்பு, கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம்

# திருமுறை வகுப்பு

தேவார திருவாசகங்களைப் பண்ணோடும் இசையோடும் சைவ மாணவ மாணவிகள் யாவரும் பாட வேண்டும் என்ற நன்னோக்குடன் நாலவர் சமயப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும், பிற சைவ மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் 1967ஆம் ஆண்டு ஆவணி மாதம் தொடக்கம் போயா தினங்கள் தோறும் மாலை 4 மணி தொடக்கம் 6 மணி வரை திருமுறை வகுப்பொன்றினை கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில் நடாத்தி வருகின்றோம். இவ்வகுப்பின் ஆசிரியராக திரு. ச. குலசேகரம் அவர்கள் கடமையாற்றி வருகின்றார். இவ் வகுப்பு ஆரம்பிக்கப்படுவதற்கும் கடந்த ஒரு வருட காலமாக சிறப்பாக நடைபெற்று வருவதற்கும் வேண்டிய ஆலோசனை, நிதி உதவி ஆயசிவற்றை உதவியவர் திரு. இரா. சபாநாயகம் அவர்களே. இப்பெரியாருக்கு யாம் எம் உள்ளங் கனிந்த நன்றியைச் செலுத்துவதுடன் அன்னாருக்கு யாம் என்றும் கடமைப்பாடுடையோம்.

இவ்வகுப்பை மேலும் சிறந்த முறையில் நடாத்துவதற்கு சைவப் பெரியார்களதும், மாணவ மாணவிகளதும், பெற்றோர்களதும் ஆதரவு மிகவும் அவசியம். இவர்கள் யாவரும் எமக்கு தங்கள் ஆதரவை என்றும் நல்குவார்கள் என உறுதியாக நம்புகின்றோம்.

வி. அம்பலவாணபிள்ளை

(கௌரவ திருமுறை வகுப்புப் பொறுப்பாளர்)



திருமுறை வகுப்பு நடைபெறும் காட்சி

## கொழும்பு, கொம்பனித்தெரு

# சைவ முன்னேற்றச்சங்க சமயப் பிரச்சார சபை

நாடு பூராவும் சைவசமய தத்துவங்களையும் கோட்பாடுகளையும் பரவச் செய்தல் வேண்டுமென்பதற்கமையவும், குறிப்பாக சைவசமய வளர்ச்சி குன்றி பிறமத சூழலில் வாழ்கின்ற எம் மதத்தவர் மத்தியில் சென்று சமயப் பிரசாரம் செய்ய வேண்டுமென்ற தலையாய கடனுக்கமையவும் கல்வி அமைச்சைச் சேர்ந்த சைவப் பெரியார் திரு. ம. சி. சிதம்பரப்பிள்ளை அவர்கள் தலைமையில் ஒரு சமயப்பிரசார சபையை எமது சங்கம் நிறுவியுள்ளது. இச்சபையில் கீழ்க்காணும் சைவப் பெரியார்கள் அங்கம் வகிக்கின்றார்கள்.

| | | |
|---|---|---|
| சைவப் புலவர் | : | திரு. மு. திருஞானசம்பந்தன் அவர்கள்<br>(கொழும்பு இந்து கனிஷ்ட பாடசாலை, பம்பலப்பிட்டி) |
| சைவ இளவல் | : | திரு. சி. திருநாவுக்கரசு அவர்கள்<br>(கல்வி அமைச்சு, கொழும்பு) |
| | | திரு. வே. சுப்பிரமணியம் அவர்கள்<br>(லேக்கவுஸ், கொழும்பு) |
| | | திரு. ச. சிவசம்பு அவர்கள்<br>(துறைமுக (சரக்கு) கூட்டுத்தாபனம், கொழும்பு) |
| | | திரு. இ. பத்மநாதன் அவர்கள்<br>(இலங்கை வங்கி, கொழும்பு) |
| | | திரு. சோ. க. வேலாயுதர் அவர்கள்<br>(கல்வி அமைச்சு, கொழும்பு) |

இச்சபையினர் இவ்வாண்டு பேசாலை தமிழ்க் கலவன் பாடசாலை, மன்னார், திருக்கேதீச்சரம், புத்தளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில், அனுராதபுரம் ஸ்ரீ கதிரேசன் கோவில், மகோ ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில், உணுப்பிட்டி இந்து சன்மார்க்க நிலையம், வத்தளை ஆகிய பல இடங்களுக்குச் சென்று சமயப் பிரசாரம் செய்துள்ளார்கள்.

எவ்வித வேதனமுமின்றி தங்கள் சிரமத்தையும் கால நேரத்தையும் பாராது — பலன் கருதாது பணிபுரியும் இப்பெரியார்கட்கு நாமோ அல்லது சைவ உலகோ எவ்விதத்தில் நன்றி கூறமுடியும்?

**இ. பத்மநாதன்**
(கௌர சமயப் பிரச்சார சபைச் செயலாளர்)

கொழும்பு கொம்பனித் தெரு

# சைவ முன்னேற்றச் சங்கம்

# நாவலர் தினப்பேச்சுப்போட்டி

# 1967



## மேற் பிரிவு

முதலாம் பரிசு: செல்வன். ஜே. வி. இரத்தினம்
கொ/உவெஸ்லிக்கல்லூரி, கொழும்பு 8.

இரண்டாம் பரிசு: செல்வி. பாலரஞ்சனி தம்பித்துரை
கொ/ஜேமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை.
கொழும்பு 2.

மூன்றும் பரிசு: செல்வன். ப. குகன்
கொ/இந்துக் கல்லூரி, இரத்மலானை.

மூன்றும் பரிசு: செல்வன். என். பி. இராசதுரை
கொ/உவெஸ்லிக் கல்லூரி, கொழும்பு-8.

---

மேற்பிரிவில் முதலாம் பரிசாக தங்கப்பதக்கம் பெற்ற
செல்வன். ஜே. வி. இரத்தினம்

## மத்திய பிரிவு

முதலாம் பரிசு: செல்வி. இந்திராணி மாடாசாமி
கொ/கணபதி வித்தியாலயம், கொழும்பு 12.

இரண்டாம் பரிசு: செல்வி. பத்மா சேஷன்
கொ/கணபதி வித்தியாலயம், கொழும்பு 12.

மூன்றும் பரிசு: செல்வன். கு. செல்வேள்
உணுப்பிட்டி அரசினர் இந்து தமிழ்/கலவன் பாடசாலை,
வத்தளை.

---

மத்தியபிரிவில் முதலாம் பரிசாக தங்கப்பதக்கம் பெற்ற
செல்வி. இந்திராணி மாடாசாமி





## கீழ்ப் பிரிவு

முதலாம் பரிசு: செல்வி. விஜயராணி இராமச்சந்திரன்
கொ/கணபதி வித்தியாலயம், கொழும்பு 12.

இரண்டாம் பரிசு: செல்வன். க. கிருஷ்ணமூர்த்தி
கொ/கணபதி வித்தியாலயம், கொழும்பு 12.

மூன்றும் பரிசு: செல்வி. விஜயலட்சுமி சிதாராமன்
ஸ்ரீ சண்முகானந்த கான சபை, கொழும்பு 12.

---

கீழ்ப்பிரிவில் முதற் பரிசாக தங்கப்பதக்கம் பெற்ற
செல்வி. விஜயராணி இராமச்சந்திரன்

---

## நாவலர் தினப் பேச்சுப் போட்டியில் பரிசு பெற்றவர்கள்



# கொழும்பு கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்கம்

# நாவலர் தினப் பேச்சுப்போட்டி

## பரிசுகள் அன்பளித்த பெருமக்களும், ஸ்தாபனங்களும்

# 1967

### மேற் பிரிவு

| | | |
|---|---|---|
| *முதலாம் பரிசு*<br>**தங்கப் பதக்கம்** | : | **இசைமணி திரு. அ. சுந்தரம் அவர்கள்**<br>*போக்குவரத்து மனேஜர்*<br>*ஜெகநாதன் கம்பனி, கொழும்பு.* |
| *இரண்டாம் பரிசு* | : | **க. நாகமுத்து அன் சன்ஸ்**<br>*111, 2-ம் குறுக்குத் தெரு,*<br>*கொழும்பு - 11.* |
| *மூன்றும் பரிசு* | : | **திரு. அ. சம்பந்தர் அவர்கள்**<br>*டொலர் ஸ்தாபனங்கள்,*<br>*கொழும்பு.* |

### மத்திய பிரிவு

| | | |
|---|---|---|
| *முதலாம் பரிசு*<br>**தங்கப் பதக்கம்** | : | **திரு. பெரியசாமி அவர்கள்**<br>*உரிமையாளர்,*<br>*ஆனந்தா ஸ்ரோர்ஸ், கொழும்பு - 11.* |
| *இரண்டாம் பரிசு* | : | **திரு. த. இராஜரத்தினம் அவர்கள்**<br>*ஒப்பாதா அன் கோ,*<br>*கொழும்பு.* |
| *மூன்றும் பரிசு* | : | **சாரதாஸ்**<br>*96 - 98, யோர்க் வீதி, கொழும்பு.* |

### கீழ்ப் பிரிவு

| | | |
|---|---|---|
| *முதலாம் பரிசு*<br>**தங்கப் பதக்கம்** | : | **திரு. நா. இரத்தினசபாபதி அவர்கள்**<br>*அதிபர்,*<br>*மெய்கண்டான் அச்சக லிமிட்டெட், கொழும்பு* |
| *இரண்டாம் பரிசு* | : | **திரு. ராம. சேதுராமன் செட்டியார் அவர்கள்**<br>*113, தேவாலய வீதி, கொழும்பு -2.* |
| *மூன்றும் பரிசு* | : | **திரு. கே. பி. இராஜரத்தினம் அவர்கள்**<br>*80, ஹை வீதி, கொழும்பு - 6* |

*ஆறுதல் பரிசு அன்பளித்தவர்கள்*

**செல்வன் ந. உதயகுமார் அவர்கள்**
***135, கியூ வீதி,***
*கொழும்பு - 2.*

**திரு. மு. வெற்றிவேல் அவர்கள்**
*9, ஸ்ரோவட் வீதி,*
*கொழும்பு - 2.*

உ

## கொழும்பு கொம்பனித்தெரு

# சைவ முன்னேற்றச் சங்கம்

## பதினைந்தாவது ஆண்டு அறிக்கை

## (1967—1968)

**அன்பு வணக்கம்!**

கொழும்பு கொம்பனித்தெரு சைவமுன்னேற்றச் சங்கம் பிறந்து, தவழ்ந்து, நடந்து ஓடிய காலங்களையெல்லாம், இப்பதினைந்தாம் ஆண்டு நிறைவு விழாவின் போது நினைவு கூரல் சாலச்சிறப்புடையதாகும்.

கொம்பனித்தெருவில் வாழக்கூடிய சைவச் சிறார்களுக்கு, சமயக் கல்வி பயில்வதற்கு ஏற்ற ஓர் சைவப் பாடசாலை இல்லாது, பிறமத சூழலில் சிக்கி, சீரழிந்த வேளையிலே இந் நிலையை உணர்ந்த ஒரு சில சைவப் பெரியார்கள், சைவப்பாடசாலை ஒன்றினை 1952ம் ஆண்டு நவராத்திரி தினத்தன்று, கொம்பனித்தெருவில் குடிகொண்டிருக்கும் முருகப் பெருமான் சந்நிதானத்தில் ஆரம்பித்து வைத்தார்கள்.

நாளடைவில் இப்பாடசாலையை சீருடன் நடாத்தவும், சிறப்புடன் சிவநெறியையும் செந்தமிழையும் தளைத்தோங்கச் செய்யவும் ஆலய வழிபாட்டை அவமதிக்கின்ற அறியாமையை அறவே அகற்றி மக்களை வையத்துள் வாழ்வாங்கு வாழவைக்க வேண்டுமென்ற வாஞ்சையோடும், இளைஞர்கள் தாம் கற்ற கல்வியின் பலனை அடைய வேண்டி அடியார்க்கெளியனாகிய இறைவன் கமலச் சேவடிகளை வழிபடச் சிந்தையை தூண்ட வேண்டுமென்றும், வேதநெறி தளைத்தோங்க இப்பூவுலகில் அவதரித்த மெய்யடியார்களது குருபூசைகளையும் மற்றும் சமய விழாக்களையும் கொண்டாடி, அத்திருநாட்களில் மக்களின் ஆன்ம நேயத்துக் கேதுவாகிய அரிய சமயப் பிரசங்கங்களை நடாத்த வேண்டுமென்ற பெருநோக்கோடும், நந்தன வருடம் பங்குனித் திங்கள் 16-ந் நாள் (29-3-53) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கமைந்த சுபமுகூர்த்தத்தில், கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமியின் திவருளினால், அன்னாரது தெய்வச் சந்நிதானத்தில் "கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம்" என்ற பெயருடன் இச்சங்கம் அஞ்ஞான இருளை அகற்றி மெஞ்ஞான ஒளியைப் பரப்பும் ஒளிக்கதிராக உதயமாயிற்று!!

இச்சங்கத்தின் ஆரம்ப காலத்திலே அதன் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது தங்கள் உழைப்பையும் ஊக்கத்தையும் நல்கி, இன்று இச்சங்கம் சீரும் சிறப்புடனும் விளங்குவதற்கு வித்திட்டவர்களான, திருவாளர்கள் வ. சி. சிவஞானம், த. சிவலிங்கம், வி. சரவணமுத்து, வ. செல்லத்துரை, வி. நடராசா, க. தியாகராசா, சீ. இராசதுரை, க. முத்துக்குமாரசாமி, வி. விநாயகமூர்த்தி ஆகியோர்களுக்கும், மற்றும் பெரியார்களுக்கும், பதினைந்தாவது ஆண்டு நிறைவு விழா எடுக்கும் இச்சந்தர்ப்பத்தில் முதற்கண் எம் என்றும்மறவா நன்றிக்கடனைக் கூறி, அன்னோரின் அன்பும் ஆதரவும் என்றும் சங்கத்திற்கு நின்றுதவும்வண்ணம் வேண்டி, எமது அறிக்கையைத் தொடர்கின்றோம்.

### ஆதரவு நல்குக

கடந்த பதினான்கு ஆண்டு காலமாக உயிரோட்டத்துடன் வளர்ந்து வரும் எமது சங்கம் இவ்வாண்டும் பல்லாற்றானும் சிறப்புற்று சேவையாற்றியுள்ளதென்பதை அள

விலா ஆனந்தத்துடன் அறியத்தருகின்றேம். இவ்விதம் சிறப்புற்று விளங்குவதற்கு ஆர்வமும் அயராஉழைப்பும் நல்கிய செயற்குழு உறுப்பினர்க்கும், இந்நகரில் வதிகின்ற சமயப்பற்றுள்ள தங்களைப்போன்ற பெருமக்களின் தன்னலமற்ற ஒத்துழைப்பிற்கும் — மனம் நிறைந்தளித்த நிதி உதவிக்கும், சிரம்தாழ்த்தி கரம்கூப்பி எம் இதயங்கனிந்த என்றும் மறவா மறுகண் நன்றியை தெரிவித்து, வருங்காலத்தில் எமது சங்கம் மென்மேலும் சிறப்புற்று சிவநெறிக்கும் செந்தமிழுக்கும் பணியாற்ற, அங்கத்தவர்கள் ஆதரவாளர்களாகிய உங்கள் அன்பும் ஆசியும் — உழைப்பும் — ஊக்கமும் என்றும் எமக்குக் கிடைக்க வேண்டுமென்று பணிவன்புடன் வேண்டுகின்றேம்.

## உறுப்புரிமை

எமது சங்கத்தில் 85 மாதச்சந்தா உறுப்பினர்களும் 30 வருடச்சந்தா உறுப்பினர்களுமே இற்றைவரை உள்ளனர். இந்நிலை மாறி சைவ அன்பர்கள் அனைவரும் குறிப்பாக கொம்பனித் தெருவில் வாழக்கூடிய சைவ மக்கள் அனைவரும், சிறப்பாக வீட்டுக்கு ஒருவராவது எமது சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து நம் எதிர்கால சந்ததிகளாக விளங்கும் இச் சைவச் சிறுர்கட்கு நற்பணியாற்ற முன்வருமாறு கடமையோடும் உரிமையோடும் உங்கள் அனைவரையும் அழைக்கின்றேம்.

## கூட்டங்கள்

இவ்வாண்டு 16 செயற்குழுக் கூட்டங்களும் 5 உபகுழுக் கூட்டங்களும் 23 சிறப்புக் கூட்டங்களும் நடைபெற்றிருக்கின்றன. இக்கூட்டங்களில் ஆராயப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய விடயங்கள், கூறப்பட்ட கருத்துக்கள் அவ்வப்போது புதினப் பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளன.

## நால்வர் சமயபாடசாலை

எமது சங்க இலட்சியங்களில் மிக முக்கியமான சமயபாடசாலை 15 ஆண்டுகளாக சிறப்புடன் நடைபெற்று வருகின்றது. இப் பாடசாலை கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில் பிரதி போயாதினங்கள் தோறும் காலை 8-30 மணியிலிருந்து பகல் 11-30 மணிவரை நடைபெற்று வருகின்றது. தெய்வச் சந்நிதானத்தில் இப்பாடசாலை இயங்கி வருவதால் சிறுர்களின் இளமைப் பருவத்திலேயே பயபக்தியும் கடமை கண்ணியம் கட்டுப்பாடும் ஏற்பட வழிவகுக்கின்றது. இன்றும் தமிழ்நாட்டு ஆலயங்களில் — வித்தியாலயங்கள் நடைபெற்று வருவது கண்கூடு. இப் பாடசாலையில் பாலர் கீழ்ப்பிரிவிலிருந்து க. பொ. த. (சாதாரண) வகுப்பு வரை இரு நூற்றுக்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் சமயக்கல்வி பயின்று வருகின்றர்கள்.

இதன் பயனக மாணவர்கள் சிரேஷ்ட வகுப்பில் சித்தி அடைவதற்குரிய முக்கிய பாடங்களில் ஒன்ருன சமய பாடத்தில் விசேடசித்தி அடைவதோடும், ஒழுக்க சீலர்களாகவும், உயரிய பண்புள்ளவர்களாகவும் பழகுவதற்கும் பயிற்றப்படுகின்றர்கள். இப்பாடசாலையை செவ்வனே நடத்துவதற்கு கொள்ளுப்பிட்டி அ. த. க. பாடசாலை தலைமை ஆசிரியர் திரு. க. அரியரத்தினம் அவர்களும் மற்றும் 10 அன்பர்கள் ஆசிரியர்களாகவும் எதுவித வேதனமுமின்றி பணியாற்றி வருகின்றனர். திரு. சு. லிங்கேஸ்வரன் அவர்கள் இப்பாடசாலை நிர்வாகச் செயலாளராகக் கடமையாற்றி வருகின்றர்.

## திருமுறை வகுப்பு

எமது சங்கப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும், மற்ற சைவ மாணவர்கட்கும் தேவார திருவாசகங்களை பண்ணேடு — பொருளுணர்ந்து பயில்விக்க வேண்டுமென்பது எமது நீண்ட நாளாசை. இவ் ஆவலை நிறைவேற்றும் வண்ணம் இறைவன், திரு. இரா. சபாநாயகம் அவர்களை எமக்கு உதவி புரியுமாறு உதவி உள்ளார். அப்பெரியாரின் ஆதரவால் 1-8-68 தொடக்கம் தேவார திருவாசகங்களை பண்ணேடு பயில்விப்பதில் முதன்மை பெற்ற ஆசிரியர் திரு. ச. குலசேகரம் அவர்களைக் கொண்டு பிரதி போயா தினங்கள் தோறும் பி. ப. 4 மணி தொடக்கம் பி. ப. 6 மணி வரை திருமுறை வகுப்பு ஒன்றை நடாத்தி வருகின்றேம். இதனுல் மாணவர்கள் தேவார திருவாசகங்களை பொருளுணர்ந்து பண்ணேடு பாடுவதோடு, மனனம் பண்ணுவதற்கும் வாய்ப்பளித்துள்ளோம். இத்திருமுறை வகுப்புப் பொறுப்பாளராக திரு. வி. அம்பலவாண பிள்ளை அவர்கள் கடமையாற்றிவருகின்றர். திருமுறை வகுப்பை நடாத்துவதற்கு ஆக்கம் தந்து நிதி உதவி அளித்துவரும் சைவப் பெரியார் திரு. இரா. சபாநாயகம் அவர்களுக்கு எம்மனம் நிறைந்த நன்றி.

## சமய அறிவுப் போட்டிகளும் பரீட்சைப் பெறு பேறுகளும்

விவேகானந்த சபையோரால் நடாத்தப்படும் அகில இலங்கை இந்து சமய பரீட்சையில் வழமைபோல் இவ்வாண்டும் 113 மாணவர்கள் கலந்துகொடார்கள். சென்ற ஆண்டு நடைபெற்ற பரீட்சையில் பெரும்பான்மை மாணவர்கள் சித்தியடைந்த தோடு செல்வர்கள் ந. சிவபாலன், ச. சாந்தகுமார். செல்விகள் த. தூயமணி, சா. கிருஸ்ணகுமாரி, ஆகியோர்கள் விசேட சித்தி பெற்றுள்ளார்கள். அத்தோடு எம் சங்கத்தால் வகுப்பு ரீதியாக இவ்வாண்டு நடாத்தப்பட்ட திருமுறைப் போட்டியில் 21 மாணவர்களும், நாவன்மைப் போட்டியில் 21 மாணவர்களும் கட்டுரைப் போட்டியில் 21 மாணவர்களும் எமது சங்கத்தின் பாராட்டைப்பெற்றுநற்சான்றிதழ்களும் பரிசுகளும் பெறுகின்றூர்கள். இத்தோடு கொழும்பு கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபையாரால் நடாத்தப்பட்ட சுந்தரர் தேவாரப் போட்டியில் எமது சங்க மாணவர்கள் பங்கு பற்றி, பல பரிசில்களைப் பெற்றுள்ளார்கள். இப்போட்டியில் கலந்துகொண்ட பாடசாலைகளில் — சங்கங்களில் ஆகக் கூடுதலான மாணவர்கள் எமது சங்கத்திலிருந்துதான் பங்குபற்றி உள்ளனர் என்ற பாராட்டையும், நன்மதிப்பையும் சபைத்தலைவர் திரு. இரா. சபாநாயகம் அவர்களும் சமயச் செயலார் திரு. வே. சுப்பிரமணியம் அவர்களும் பரிசளிப்பு வைபவத்தில் வழங்கினுர்கள். அத்துடன் சென்ற ஆண்டு கல்வி கலாச்சார அமைச்சினுல் கொண்டாடப்பட்ட கலைமகள் விழா கலை நிகழ்ச்சியில் கலந்துஅவர்கள் விழாவை சிறப்பித்தமைக்காக எமது சங்கத்தைச் சேர்ந்த 22 மாணவர்களுக்கு கல்வி கலாச்சார அமைச்சினுல் நற்சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதை பெருமையுடன் அறியத் தருகின்றேம்.

## இறை வழிபாடும் இல்ல பஜனையும்

கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் மற்றைய உற்சவகாலங்களிலும் நடைபெற்று வரும் கூட்டு வழிபாடும்—பஜனையும் எமது சங்கத்தாலேயே நடாத்தப்பட்டு வருகின்றன. இந்து வாலிபர் சங்க ''அப்பர் அருள் நெறி' குழுவின் அன்பு அழைப்பை ஏற்று, செட்டித்தெரு பிள்ளையார் கோவிலில் புதுவருடத்தன்று (13-4-68) நடைபெற்ற தேர்த்திருவிழாவின் போது எமது சங்க பஜனைக் குழுவினர் காலையிலிருந்து மாலைவரை பஜனை செய்து சித்தி விநாயகப் பெருமானினது திருஅருட் பேற்றையும், சைவப்பெரு மக்களின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்றனர். இப்பஜனையை முன்னின்று நடாத்திய பெருமை எமது சமயச் செயலாளர் திரு. வே. பெரியசாமி அவர்களையே சாரும்.

அத்துடன் அன்பர்கள் பலரின் அன்பு வேண்டுகோட்கிணங்கி ஆரம்பித்த **இல்ல பஜனை** ஆரம்பத்தில் மாதந்தோறும் நடைபெற்றும், இடையில் சங்கம் வேறுபல ஆக்கப்பணிகளில் ஈடுபட்டதால் தளர்ந்திருந்த இல்லபஜனையை மீண்டும் செவ்வனே நடைபெறத் திட்டமிட்டுள்ளோம்.

## திருவெம்பாவும் திருவாதவூரடிகள் விழாவும்

வழமைபோல் இவ்வாண்டும் எமது பஜனைக்குழுவினர் திருவெம்பாவைத் தினங்களில் அதிகாலை 3 மணிக்கு கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோவிலிலிருந்து புறப்பட்டு கொம்பனித்தெருவில் உள்ள பிரதான வீதிகள் தோறும் திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி முதலிய பாடல்களைப் பாடி, அதிகாலை 5 மணிக்கு கோவிலை வந்தடைந்து ஆங்கு நடைபெற்ற பூசையிலும் கலந்து கொண்டோம். சைவப்பெருமக்கள் பஜனைக் குழுவினரை மங்கள நிறைகுடம் வைத்து வரவேற்று தாகசாந்தி செய்து சங்கத்தின் நன்றிக்கு இலக்கானுர்கள். அத்தோடு திருவெம்பாவைத் தினங்களில் இரவு நேரத்தில் எமது சங்கத்தாரால் கோவிலில் திருவாதவூரடிகள் புராணம் படிக்கப்பெற்று பயன் சொல்லப்பட்டது. புராணப் படிப்பின்போது திரு. வே. சுப்பிரமணியம் அவர்களால் சொல்லப்பட்ட பயன் மக்கள் மனதைக் கவர்ந்ததோடு மக்கள் மனதை உருகக்கூடச் செய்தது. இறுதி நாளான 10-ம் நாள் நடைபெற்ற திருவாதவூரடிகள் விழா, சங்க காப்பாளர்களில் ஒருவரானவரும், சமாதான நீதவானும், கொழும்பு மாநகரசபை உறுப்பினரும் — மூதவை உறுப்பினருமான திரு. த. நீதிராசா அவர்களின் தலைமையில் கொழும்பு இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த உயர்திரு சுவாமி ரெங்கானந்தஜீ அவர்களின் சிறப்புச் சொற்பொழிவுடன் இனிது நிறைவெய்தியது. இவ்வைபவ முடிவில் திரு. த. நீதிராசா அவர்கள் மூதவை உறுப்பினராகத் தெரிவு செய்தமையைப் பாராட்டி ஓர் வாழ்த்துப் பத்திரம் எமது சங்கத்தின் சார்பில் அன்னுருக்கு வாசித்தளிக்கப்பட்டது.

## சங்கத்தால் கொண்டாடப்பட்ட குருபூசைத் தினங்களும் விழாக்களும்

சமய குரவர் நால்வரதும், ஆறுமுகநாவலர் திருவள்ளுவர் ஆகியோரது குருபூசைகளையும், மற்றும் சேக்கிழார் விழா, நவராத்திரி விழா, கலைமகள் விழா, விநாயகர் பெருங் கதைப் படிப்பு, விநாயகர் சதுர்த்தி விழா, திருவாதவூரடிகள் புராணப்படிப்பு முதலிய வற்றையும் வெகு சிறப்புடன் கொண்டாடி னேம். இவ்விழாக்கள் யாவும் சங்கக் கட்டுப் பாட்டுக்கமைய தனிப்பட்ட உபயகாரர் களின் பேராதரவாலேயே நடந்தும், நடாத் தப்பட்டும் வருகின்றது. அவர்களுக்கு சைவ உலகமும் எமது சங்கமும் என்றும் கடமைப் பாடுடையோம்.

## டீமெல் வீதியும் ஸ்ரீ முருகன் வீதியும்

எமது சங்கத்தின் வேண்டுகோட்கிணங்கி, கொம்பனித்தெரு உணுப்பிட்டி வட்டாரத் தில் உள்ளதும், கொம்பனித்தெரு ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமிகோவிலுக்கு முன்னுள் ளதுமான **டீமெல் வீதியின்** ஒரு பகுதியை **''ஸ்ரீ முருகன் வீதி''** என கொழும்பு மாநகர சபையினர் மாற்றி அமைத்துள்ளனர். இம் முயற்சி வெற்றிபெற, எமது சங்க உப தலை வர் **திரு. வை. நா. சோமசுந்தரம்** அவர்கள் ஆற்றிய அரும்பணி சங்கவரலாற்றில் பொன் னெழுத்துக்களால் பொறிக்கப்படும்.

## நால்வர் ஆலயம்

கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில், பரிவார கோவில்களில் ஒன்றுன **''நால்வர் ஆலயத்தை''** அமைக்கும் பணியை எமது சங்கம் பொறுப்பேற்றது. இதற்குரிய திருப்பணி யாவும் பூர்த்தியடைந்து கும்பாபிஷேகம் நடைபெறும் நிலையில் உள் ளது. இதற்குரிய நால்வர் விக்கிரகங்கள் ஏற்கனவே செய்யப்பட்டு கோவிலில் வைக் கப்பட்டுள்ளது.

இத்திருப்பணி செவ்வனே நிறைவேறுவ தற்கு பொருளாகவும், பணமாகவும் தந் துதவிய சங்க ஆதரவாளர்கட்கு நாம் என் றும் நன்றிக் கடமைப்பாடுடையோம். அத்துடன் எமது சங்கம் ஆற்றி வரும் சம யப்பணியையும், அதற்கு முன்னேடியாக எமது சங்கம் அமைக்கும் ''நால்வர் கோவிலின் வனப்புறு அழகினைக் கண்ணுற்று மேலும் அதன் வளர்ச்சிக்கு ஆயிரம் ரூபாய் (1000/-) அன்பளித்த, கவலக்காடின் **திரு. கே. நாகேந் திரம்** அவர்கட்கும் எமது சங்கம் என்றும் மறவா நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளது.

## நால்வர் நூலகம்

சமய குரவர்களின் போதனைகளை, சாதனை யில் கடைப்பிடித்து ஒழுகிவரும் எமது சங் கத்தினர் நம் நூலகத்திற்கு **''நால்வர் நூல கம்''** எனப் பெயரிட்டுள்ளனர். 200க்கு மேற் பட்ட சமய இலக்கிய நூல்கள் இந்நூலகத் தில் உள்ளன. இடவசதி இல்லாச் சூழ்நிலை யால் தற்போதைக்கு எமது பாடசாலை மாண வர்களுக்கு மட்டுமே இந்நூலகம் பயன்படுத் தப்படுகின்றது.

கூடிய விரைவில் பரந்த **அடிப் படையில்** நடாத்தக் கூடிய **நூலக** மொன்றினை எமது சங்கத்திற்கு கட்டித்தரு வதாக, எமது சங்க காப்பாளரும், கொம் பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வழிபடுவோர் திருக்கூட்டத் தலை வருமான **திருவாளர் அ. நவரத்தினம்** அவர் கள் உறுதி கூறியுள்ளார்கள். இப்பெரும் பணியை கூடிய விரைவில் எமக்கு நிறை வேற்றித் தரும்வண்ணம் அன்னரை பணி வன்புடன் வேண்டுகின்றேம்!

## நால்வர் நெறிவிழா

இதுவரை காலமும் கொம்பனித்தெருவில் மட்டும் விழா எடுத்த எமது சங்கம், தனது 14ஆம் ஆண்டு நிறைவு விழாவின் இரண் டாம் நாள் நிகழ்ச்சியான **''நால்வர் நெறி விழாவை''** 27-8-67ல் வெள்ளவத்தை சம் மாங்கோட்டார் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய மண்டபத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடியது. செந்தமிழ் மாமணி சித்தாந்த வித்தகர் திரு. மு. வயிரவப் பிள்ளை அவர்களின் தலைமையில், திருமுறை ஊர்வலத்துடன் ஆரம்பமாகிய இவ்விழாவில் வித்துவான் திருமதி வசந்தா வைத்திய நாதன் திரு. உமா மகேஸ்வரன் ஆகியோர் கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்கள். திரு. எஸ். மாணிக்கவாசகர், செல்வி அருந்ததி சிவசுப்பிரமணியம் ஆகியோரது திருமுறைக் கச்சேரியுடன் விழா இனிது நிறைவெய் தியது. விழா சிறப்புடன் நடந்தேற ஆதரவு அளித்த வெள்ளவத்தை சம்மாங்கோட்டார் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயஅறக்காவலர் சபைக்கு எமது நன்றி.

## நாடுபோற்றும் நால்வர் நெறி

சங்கத்தின் வருட வெளியீடான ''நால்வர் நெறி'' சென்ற இரண்டு ஆண்டு போல் இவ்வாண்டும் தொடர்ந்து சிறப்புடன் வெளிவருகின்றது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளதும், குருமகா சந்நிதானம் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களதும், திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களதும், எமது சங்க ஆதரவாளர் வைத்திய கலாநிதி பேராசிரியர் திரு. அ. சின்னத்தம்பி அவர்களதும் ஆசிச் செய்திகளும், வாழ்த்துச் செய்திகளும் தாயகத்து சைவப் பேரறிஞர்களான திரு. கி. வா. ஜகந்நாதன், தருமையாதீனத் தமிழ்ப் புலவர் சித்தாந்த கலைமணி மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார், தருமையாதீனத் தமிழ்க் கல்லூரி தமிழ்ப் பேராசிரியை வித்துவான் திருமதி ப. நீலா ஆகியோர்களின் அறிவுக் கருவூலங்களும், சேயகத்து சைவப் பேராசான் பண்டிதமணி அவர்களதும் மற்றும் சைவப் பெரியார்களதும் ஆக்கமிகு அறிவுக் சுவிதை — கட்டுரைகளும் இம்மலரை மணம் கமழச் செய்கின்றன. இம்மலரைப் பேணி வளர்ப்பது உங்கள் கடமை.

## நாவலர் நாவன்மைப் போட்டி

சமயகுரவர்கள் நால்வரின் போதனைகளை சாதனையில் கடைப்பிடித்து ஒழுகிவரும் எமது சங்கம், ஐந்தாவது சமயகுரவர் எனப் போற்றப்படுகின்ற நம் நாட்டுத் தோன்றலான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களையும் — அவர்களது போதனைகளையும் என்றும் மறந்தும், மறந்தது கிடையாது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தோன்றுவிடில் சொல்லு தமிழெங்கே? சுருதி எங்கே? அவர்கள் ஆற்றிய சமய மறுமலர்ச்சியை மக்கள் மத்தியிலும் குறிப்பாக மாணவமணிகளின் மனதிலும் பதியச் செய்தல் வேண்டுமென்ற பெருநோக்கோடு இற்றைவரை அன்னாருக்கு குருபூசை மட்டும் கொண்டாடிய எமது சங்கம், முதல் முயற்சியாக கொழும்பிலுள்ள சகல பாடசாலைகளும், சமயஸ்தாபனங்களும் பங்கு கொள்ளுமுகமாக ''நாவலர் தினப் பேச்சுப் போட்டி'' ஒன்றினை 24-11-67ல் நடாத்தினோம்.

இக்கன்னி முயற்சிக்கு, தெற்கே கொழும்பு இரத்மலானை இந்துக் கல்லூரியிலிருந்து வடக்கே முகத்துவாரம் வட கொழும்பு இந்துபரிபாலன சங்கம் ஈறாக, மற்றும் கொள்ளுப்பிட்டி புனித அந்தோனியார் மகாவித்தியாலயம், வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தியாலயம், வத்தளை உணுப்பிட்டி அரசினர் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, கொம்பனித்தெரு ஹேமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, கொழும்பு கணபதி வித்தியாலயம், கொட்டாஞ்சேனை கதீட்ரல் கல்லூரி, நில்வீதி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, தெமட்டகொடை தமிழ் வித்தியாலயம், வெள்ளவத்தை சென். கிளேயர்ஸ் கல்லூரி, உவெஸ்லிக் கல்லூரி, பொரளை ரத்தினவளிபாளிகா மகாவித்தியாலயம், முகத்துவாரம் கதீட்ரல் மகளிர் கல்லூரி, இரத்மலானை காளிகோவில் இந்து மன்றம், ஸ்ரீ சண்முகானந்த சபை, கதிர்காம யாத்திரீகர் தொண்டர் சபை, இருபாலை சைவ பரிபாலன சங்க கொழும்புக் கிளைச் சங்கம் ஆகிய 18 பாடசாலைகளிலும், சமய ஸ்தாபனங்களிலுமிருந்து — மாணவ மாணவிகள் போட்டியிற் கலந்து கொண்டார்கள். எமது சங்கம் இப்போட்டியை முன்னின்று நடாத்தியதால் எமது சங்க ரீதியாக எம்மாணவர்களும் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை.

போட்டியின் முதற் தேர்வு பம்பலப்பிட்டி இந்து கனிஷ்ட பாடசாலை மண்டபத்திலும் இறுதித் தேர்வு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசைத் தினமாகிய 24-11-67 அன்று கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்திலும் நடைபெற்றது. மேற்பிரிவு, மத்திய பிரிவு, கீழ்ப் பிரிவு என மூன்று பிரிவுகளாக நடாத்தப்பட்ட இப்போட்டியில் மூன்று பிரிவிலும் முதல் இடத்தைப் பெற்றவர்களுக்கு தங்கப் பதக்கங்களும் மற்றும் இரண்டாம், மூன்றும் இடத்தைப் பெற்றவர்களுக்கு வெள்ளிக் குத்துவிளக்கு, வெள்ளித் தாம்பாளம் ஆகிய சிறப்புப் பரிசில்களும் நற்சான்றிதழ்களும் போட்டியிற் பங்கு கொண்ட அனைவருக்கும் ஆறுதல் பரிசில்களும் எமது சங்கத்தால் வழங்கப்பட்டன.

சமய ஸ்தாபனங்களுக்கும், போட்டி வைபவத்திற்கு, தலைமை தாங்கிய பெரியார்கட்கும், சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து நடுநிலைமை வழங்கிய நீதிபதிகள் அவர்கட்கும், பரிசில்களாக தங்கப்பதக்கங்களையும், பொருட்களையும், புத்தகங்களையும் தந்துதவிய கொடைவள்ளல்கட்கும் எமது சங்கம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம். இவர்கள் அனைவரது நல்லாதரவும், நல்லாசியும் இன்றும் என்றும் எமது சங்கத்திற்கு நின்றுதவும் வண்ணம் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

## உபகாரப் படக்காட்சி

நால்வர் கோவில் கட்டட நிதிக்காகவும், மற்றும் சங்க நிதிக்குமாக, ''நெஞ்சில் ஓர் ஆலயம்'' என்னும் உபகாரப் படக்காட்சி ஒன்றினை வெள்ளவத்தை சபயர் படமாளிகையில் நடாத்தினோம். இவ் வைபவத்திற்கு இந்து சமய ஆலோசனைச் சபைச் செயலாளரும், கொழும்பு இராம கிருஷ்ணமிசன் செயலாளரும் உயர்நீதி மன்றப் பதிவாளருமான திரு. ந. நவரத்தி னம் அவர்களும், அவர்களது பாரியாரும் பிரதம அதிதிகளாக கலந்து பேராதரவு வழங்கினார்கள். பொதுமக்களது பூரண ஆதரவால் நாம் எதிர்பார்த்த நிதியைவிட கூடிய நிதி வசூலாகக் கிடைத்தது. ஆக்கப் பணிக்கு ஊக்கமளித்த அனைவருக்கும் எம் நன்றி.

## தெய்வத் திருவருளால் திக்குலா

முதல் தடவையாக 7-5-67ல் ஈழத்தின் பாடல்பெற்ற ஸ்தலங்களில் ஒன்றான திருக் கோணேஸ்வரர் கோவிலுக்கு யாத்திரை மேற்கொண்ட எமது சங்கம், இவ்வாண்டும் 3-5-68 அன்று எமது நால்வர் சமயப் பாட சாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், சமய பிர சாரச் சபை பிரமுகர்கள் உட்பட 67 யாத்திரி கர்கள் பிரத்தியேக இ. போ. ச. பஸ் மூலம் பாடல் பெற்ற ஸ்தலமான ''திருக்கேதீச்சர கோவிலுக்குச் சென்று விசேட அபிசேக ஆராதனையில் கலந்து கொண்டோம். இரண்டு நாள் மேற்கொண்ட இவ்யாத்திரையின் போது சிலாபம் முனீஸ்வரம் கோவில், அநுராதபுரம் ஸ்ரீ கதிரேசன் கோவில், புத்தளம் ஸ்ரீ முத்து மாரியம்மன் கோவில் ஆகியவற்றைத் தரிசித்தும், ஆங்கு நடைபெற்ற விசேஷ ஆராதனைகளில் கலந்தும், மற்றும் அநுராதபுரத்திலுள்ள சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களையும் பார்வையிட்டோம். தெய்வத் திருவருளால் இவ்யாத்திரை எதுவித இன்னலுமின்றி இனிது நிறைவெய்தியது.

இவ்யாத்திரை வெற்றிபெற உதவிய அன் பர்கள் அனைவரையும் சிறப்பாக திருக்கே தீச்சர ஆலய திருப்பணிச் சபைச் செயலா ளர் திரு. ஏ. அல்லிராசா அவர்கள் எமக்கு உண்ண உணவும் தங்க உறைவிடமும் மற் றும் சகல வசதிகளையும் செய்து தந்து எம்மை அன்புடன் வரவேற்று ஆதரித்த மையை நாம் என்றும் மறவோம்.

## இந்து சமய ஆலோசனைச் சபை

எமது சங்கத்தால் நடாத்தப்பட்டு வரும் ''நால்வர் சமய பாடசாலைக்கு'' இவ்வாண் டும் இந்து சமய ஆலோசனைச் சபையினர் ரூபா 354/- தந்து உதவியுள்ளனர். இந்து சமய ஆலோசனைச் சபையினருக்கு ஆண்டு தோறும் கூடிய நிதி வழங்குமாறு கலாச்சார அமைச்சினை எமது சங்கம் வேண்டியுள்ளது. இவ்விடயத்தில் எமது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை அக்கறை காட்டுமாறு எமது சங்கம் வேண்டுகின்றது.

## சமயப் பிரச்சார சபை

நாடு பூராவும் சைவ சமய தத்துவங்களை யும் கோட்பாடுகளையும் பரவச் செய்தல் வேண்டுமென்னும் எமது சங்கத்தின் நோக்கத்திற்கமையவும், குறிகப்பா சைவ வளர்ச்சி குன்றிய இடங்களிலும் பிறமத சூழலில் வாழுகின்ற எம்மதத்தவர் மத்தியிலும் சன்று செமயப் பிரசாரம் செய்ய வேண்டுமென்ற எமது தலையாயக் கடனுக் கமையவும், கல்வி கலாச்சார அமைச்சைச் சார்ந்த சைவப் பெரியார் திரு. ம. சி. சிதம்பரப்பிள்ளை அவர்களின் தலைமையில் ஓர் சமயப் பிரச்சார சபையை எமது சங்கம் ஆரம்பித்துள்ளது. இச்சபையில் திருவாளர் கள் சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தர், சைவஇளவல் சி. திருநாவுக்கரசு, எஸ். சிவசம்பு, வே. சுப்பிரமணியம், சோ. க. வேலாயுதர், இ. பத்மநாதன் ஆகிய மற்றும் பல அன்பர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இவர்கள் இவ்வாண்டு மன்னார், பேசாலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, திருக் கேதீச்சரம், அநுராதபுரம் ஸ்ரீ கதிரேசன் கோவில், புத்தளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில், மகோ ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில், ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் உணுப்பிட்டி இந்து சன் மார்க்க சங்கம், கொழும்பு அருள்ஒளி நிலை யம் ஆகிய பல இடங்களுக்கு சென்று சமயப் பிரசாரம் செய்துள்ளார்கள்.

எவ்வித வேதனமுமின்றி தங்கள் சிரமத் தையும், காலநேரத்தையும் பாராது பலன் கருதாது பணிபுரியும் இவர்கட்கு நாமோ அல்லது சைவ உலகமோ எவ்விதத்தில் நன்றி கூற முடியும்?

## இலங்கை வங்கியும் மக்கள் வங்கியும்

எமது சங்க நிதி நிலைமை, பிறருக்குச் சொல்லிப் பெருமைப்படக் கூடிய பெருநிலையில்லையாயினும் ஒரு சில ஆயிரம் ரூபாய்களைக் கொண்ட எமது சங்கம் இலங்கை வங்கி வெளிநாட்டுக் கிளையிலும், மக்கள் வங்கி தலைமைக் காரியாலய, சேமிப்புக் கணக்கிலும், தனது கையிருப்புப் பணத்தை வைத்திருக்கிறதென்பதை, நம்பிக்கையுடனும் நாணயத்துடனும் எமது சங்கத்திற்கு நிதி உதவி செய்யும் பெருமக்கட்கு பெருமையுடன் அறியத் தருகின்றது. இக் கருமம் கைகூடுவதற்கு ஊக்கமளித்து உதவி புரிந்த பெருமை, எமது சங்க முன்னாள் இணைச் செயலாளரும், துணைப் பொருளாளரும், இந்நாள் இலங்கை வங்கி வெளிநாட்டுக் கிளையைச் சார்ந்தவருமான திரு. இ. பத்மநாதன் அவர்களையே சாரும்.

## இலங்கை வானொலியும் ஈழத்து செய்தி இதழ்களும்

சென்ற ஆண்டு எமது சங்கத்தால் கொண்டாடப்பட்ட கலைமகள் விழாவின் ஒரு பகுதியையும், சேக்கிழார் விழாவின் ஒரு பகுதியையும் ஒலிப்பதிவு செய்து முறையே மாதர் நிகழ்ச்சியிலும், கண்டதும் கேட்டதும் என்ற நிகழ்ச்சியிலும் ஒலிபரப்பிய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தாருக்கும், அதன் தமிழ் நிகழ்ச்சி சமய நிகழ்ச்சி அதிகாரிகள் அவர்கட்கும், எமது சங்கச் செய்திகளையும் விழா நிகழ்ச்சிகளையும் காலத்துக்குக் காலம் பிரசுரித்து வரும் ஈழத்துச் செய்தி இதழ்களான தினகரன், வீரகேசரி, தினபதி, மித்திரன், சுதந்திரன், ஈழநாடு ஆகிய செய்திஇதழ்களின் ஆசிரியர்கள், உரிமையாளர்கள் அவர்கட்கும் எமது பாராட்டை பணிவன்புடன் தெரியப்படுத்துகின்றோம்.

## சமூக சேவை

### திருமண அழைப்பு

எமது சங்க அங்கத்தவர்களான திரு திருக்காமணி அவர்களின் அன்பு அழைப்பிற்கிணங்க அவர்களது புதல்வன் நாகராசாவின் திருமண வைபவத்தின் போதும், கௌரவ உள்ளூராட்சி அமைச்சர் மு. திருச்செல்வம் அவர்கள் தலைமையில் திரு. எஸ். சுப்பையா அவர்கட்கு நடைபெற்ற திருமண வாழ்த்து வைபவத்தின் போதும் எமது சங்கம் கலந்து அவர்கட்கு ஆசியும் அன்பளிப்பும் வழங்கியது.

## மரணச் சடங்குகள்

கல்கிசையைச் சார்ந்த திரு. வீ. எஸ். சீ. சிங்கம், பண்டாரநாயக்கா மாவத்தையைச் சார்ந்த திரு. ச. சின்னத்துரை, வெள்ளவத்தையைச் சார்ந்த திருமதி மனோன்மணி கணபதிமுத்து ஆகியோர்கள் இவ்வுலக வாழ்வை நீத்து சிவபதமடைந்தபோது அவர்களின் மரணச் சடங்குகளில் எமது சங்கம் பங்குபற்றி சைவசமய ஆசாரப்படி மரணச்சடங்குகள் நிறைவேற தேவார திருவாசக முதலான பாடல்களைப் பாடி உதவியதுடன் சிவபதமடைந்தவர்களினது குடும்பத்தார்களுக்குத் தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் சங்கம் தெரிவித்தது. இவ்வித சமூகப் பணியில் என்றும் எமது சங்கம் கலந்துதவி புரிய சித்தமாய் உள்ளது என்பதையும் எமது சங்க அங்கத்தவர்கட்கும் ஆதரவாளர்கட்கும் அறியத் தருகிறோம். சைவப்பெரியாரும் எமது சங்கத்தின் சமய வைபவங்களில் அடிக்கடி கலந்து சிறப்பித்தவருமான திரு. ஆ. வேல்சாமி அவர்களின்அகால மரணம் குறித்து நாம் ஆழ்ந்த துக்கமடைவதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

## புராண விரிவுரைகள்

எமது சங்கத்தின் ஆதரவில் சைவப் பெரியார் திரு. அ. கந்தையா அவர்களால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் இரவு 7.30 மணியிலிருந்து 8.00 மணிவரை கொம்பனித் தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் புராண விரிவுரை நடைபெற்று வருகின்றது. 17.7.66 வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட திருவிளையாடற் புராண விரிவுரை முடிவடைந்து வெள்ளிக்கிழமையிலிருந்து பெரியபுராண விரிவுரை தொடர்பாக நடைபெற்று வருகின்றது.

## தமிழகத்து பெரியார்களின் வருகை

தாய்நாட்டிலிருந்து சேய்நாட்டிற்கு வருகை தரும் சமயப் பெரியார்களை சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அழைத்து சமயச் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ள பெருமையும் எமது சங்கத்திற்கு சாரும். அவ்வரிசையில் இவ்வாண்டும், 17.11.67ல் நடைபெற்ற திருக்கார்த்திகைத் தினத்தன்று அருள்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களை அழைத்து ''கந்தன் கருணை'' என்னும் பொருள் பற்றியும்,

24.2.68ல் திருமுருக கிருபானந்தவாரியாரின் இளைய சகோதரர் திரு. திருப்புகழ்மணி அவர்களை அழைத்து ''முருகம்மையார்'' என்னும் பொருள் பற்றி சங்கீத கதாப் பிரசங்கமும், 24.10.68ல் நடைபெற்ற ஸ்கந்ஸஷ்டி விழாவின் 3-ந் நாள் திரு விழாவின்போது குருமகாசந்நிதானம் — தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களை அழைத்து ''சைவமும் வாழ்வும்'' என்னும் பொருள் பற்றி சிறப்புச் சொற்பொழிவும் நிகழ ஆவன செய்தோம்.

இப்பணிக்கு முன்னோடியாக நின்று உதவி நல்கிய விழா உபயகாரர்களான திரு. தி. பாலசுந்தரம் அவர்களுக்கும் திரு. சு. கந்தையா அவர்களுக்கும் எமது சங்கத்தின் மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

**பிரியாவிடை**

எமது சங்கத்தின் ஆரம்பகால உறுப்பின ரும் செயற்குழு உறுப்பினரும், அங்கத்தவரு மான முறையே திருவாளர்கள் ஆசிரியர் வ. செல்லத்துரை, இ. கணேசன், சி. சிவ ராசா, பொ. சிவபூசணம் ஆகியோர்கள் உத்தியோக மாற்றமாக வெளியூர்களுக்கு சென்றதால் அவர்கள் சங்கத்திற்கு ஆற் றிய அளப்பரிய சேவையை நினைவுகூரும் முகமாக, எமது சங்கத்தின் ஆதரவில் ஓர் பிரியாவிடைக் கூட்டமும் தேநீர் விருந்தும் அளித்து அவர்களைக் கௌரவித்தோம். அவர் கள் எங்கு சென்றாலும் அவர்களின் அன்பும் ஆதரவும் என்றும் எமது சங்க ஆக்கப் பணிக்கு நின்று உதவும் என எண்ணுகிறோம்.

*  *

**எமது சங்க நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட**

# சமயப் பெரியார்கள் வழங்கிய வாழ்த்துரைகள்

இன்று கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் நாவலர் தினப் பேச்சுப் போட்டி பிற்பகல் 3 மணி தொடக்கம் 6 மணி வரை நடைபெற்றது. பேச்சுப் போட்டியின் முதல் தேர்வு நேற்றுப் பிற்பகல் பம்பலப்பிட்டி இந்து கனிஷ்ட பாடசாலையில் நடைபெற்று இன்று இறுதித் தேர்வு நடந்தது. கீழ்ப்பிரிவு மத்தியபிரிவு, மேற்பிரிவு, மூன்றிலும், ஒவ்வொரு பகுதி யிலும் எட்டு மாணவர் பேசினார்கள். பேச்சுத் தரம் நன்றாயிருந்தது.

இம்முன்னேற்றச் சங்கம், சைவப்பணி தொடர்ந்து நன்கு செய்வதை நான் நன்கு அறி வேன். இது முடிந்த பின்நாவலர் குருபூசை வைபவம் நடைபெறும். இப்பேச்சுப் போட்டியில் நான் தலைமை தாங்கினேன்.

இச்சங்கத்தின் சேவையும் பணியும் மேலும் முன்னேங்க இறைவனைப் பிரார்த்திக்கின் றேன்.

**வெ. சங்கரலிங்கம்**
பிரதம வித்தியாதிபதி,
கொழும்பு.

24-11-67,
வெள்ளிக்கிழமை.

கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் இன்று வெள்ளிக்கிழமை **24-11-67** ஆறுமுக நாவலர் குருபூசை நடைபெறும். இத்தினத்தில் பங்கு பற்றும் ஒரு அரிய சந்தர்ப்பம் கிடைத்தது ஒரு பெரும் பாக்கியம். ஏனென்றால் எமது சைவ சமயம் வானளாவி வளர்ந்திருந்தாலும், அதை மேலும் பேணிப் போற்றி தங்களால் ஓரளவு பணி செய்வது இக்காலத்தில் பெரும் சிரமமான காரியம். இன்று கொ. சை. மு. சங்கத்தினர் செய்து வரும் பெரும் விழாவை மேற்கொண்டும் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**24-11-67.** **ஏ. சுந்தரம்**

* *

இன்று கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் நடந்த திருவாதவூரர் விழாவில் பங்கு கொண்டேன். இவர்கள் பெருமுயற்சி செய்து பல நல்ல சிவகருமங்கள் செய்து வருகிறார்கள். இந்த சங்கத்தின் முக்கிய போஷகரான திரு. த. நீதிராசாவும் தலைமை வகித்து இந்தச் சங்கத்தின் தொண்டில் ஈடுபட்டார்கள். இந்த இளைஞர்களின் பெருமுயற்சி ஆண்டவன் திருவருளால் மேன்மேலும் விருத்தி அடைய ஆண்டவனை பணிவோடு பிரார்த்திக்கிறேன். இறைவன் அருள் பொழிவாருக.

**ஸ்ரீ ரங்கானந்த சுவாமிகள்**
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,
கொழும்பு.

**18-12-67,**
திருவாதவூரர் திருவிழா.

* *

இன்று கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற திருவாதவூரர் விழாவில்யானும் பங்குபற்றினேன். அவர்களுடைய சேவையை நான் போற்றிப் பாராட்டுகின்றேன் அவர்களின் சேவை மக்களுக்கு இன்னும் தேவைப்படுகின்றது. அவர்களுடைய நற்பணி சிறந்தோங்க எனது நல்லாசிகள்.

**18-12-67.** **த. நீதிராசா**

* *

வயலூர் மயில் நாதன் வாழ்ந்த தமிழ்ச் சங்கம் இயலாக வாழ்க இசைந்து.

அன்பு
**24-2-68.** **திருப்புகழ் மணி**

* *

''என்கடன் பணிசெய்து கிடப்பதே'' (அப்பர்)

**ச. சிவசம்பு**

* *

சைவ முன்னேற்றச் சங்கம் தலைநகரில் ஆற்றும் சைவத் தமிழ்த் தொண்டு நீடு வாழ்ந்து நிலைபெற இறைவன் அருள் புரிவாருக.

**22-4-1968.** **சோ. க. வேலாயுதர்**

* *

இன்றைய மனித உலகில் இச்சைவ முன்னேற்றச் சங்கம் செய்து வரும் தொண்டு மகத்தானது. இத்துறையில் இவர்கள் மேன் மேலும் வெற்றி பெற எல்லாம் வல்ல இறைவன் அருள்வாஞக.

1-6-68. கோ. சுந்தரமூர்த்தி

* *

இச் சைவ முன்னேற்றச் சங்கம் இன்று போல் என்றும் பெருமிதத்துடன் மிளிருக !

9-9-68. அ. வி. மயில்வாகனம்

* *

வள்ளுவர் காட்டிய நெறியில் பணி புரியும், சைவ முன்னேற்றச் சங்கம் நிலமிசை நீடுழி வாழ்க என வாழ்த்துகிறேன்.

9-6-68. ஈழவேந்தன்

* *

கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம் சைவத்துக்கும் தமிழுக்கும் செய்துவரும் நற் பணிகளைக் கண்டு சைவ மக்கள் பெருமையும் பெரு மகிழ்ச்சியும் கொள்ள வேண்டும். ''என்னை நன்ருக இறைவன் படைத்தனன், தன்னை நன்ருகத் தமிழ் செய்யுமாறே'' என்ற திருமூலர் அருள் வாக்கைக் குறிக்கோளாகக் கொண்டு சங்கம் தொடர்ந்து பணியாற்ற எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் பாலிப்பாஞக.

10-6-68 ஆ. கந்தையா

* *

இச் சைவ முன்னேற்றச் சங்கம் இன்று போல் என்றும் நிலைபெற இறைவன் அருள் புரிவாஞக.

30-6-68. தி. ஜெயகுமாரன்

* *

சிவ சம்பந்தமுடையது சைவம். சிவம் இன்பமுடையது. சைவம் இன்பம் உடையது என்பது அதஞல் பெறப்படும். சைவ முன்னேற்றச் சங்கம் இன்பம் பெருக்கி இனிது ஓங்க இறைவன் அருள் புரிவான் எனப் பணிகின்றேன்.

30-6-68. மு. திருஞானசம்பந்தன்

* *

சைவம் தழைத்தோங்க பணிபுரியும் சிவதொண்டர்களின் நன்முயற்சி என்றும் அபிவிருத்தியாக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம்.

24-9-68. பண்டிட். எஸ். ஆர். ஐயரவர்கள்

* *

இன்று யான் செய்த தவப்பயனுல் இலட்சுமி விழாவில் இவ்வாலயத்தில் பங்குகொள்ள முடிந்தது. இத்தகைய சைவ ஆலயங்கள்தான் இற்றைக்கு ஐந்நூறு ஆண்டுகளாக சைவத்தையும் தமிழையும் காக்கின்றன. சைவமும் தமிழும் வாழ இறைவனடி வணங்குகிறேன்.

27-9-68. ச. அரியரத்தினம்

* *

''ஞானம் நின் புகழே மிக வேண்டும்
தென் ஆலவாய் உறையும் எம் ஆதியே''

சைவ முன்னேற்றச் சங்கத்தின் பணி மேலும் மேலும் வளர்ந்தோங்கி, மேன்மை கொள் சைவ நீதியை உலகெலாம் பரவச் செய்ய வேண்டும் என்பதே என்னுடைய ஆவலும் அன்புமாகும்.

அன்பன்

* *

''வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்தனைய உயர்வு''

இன்றைய விழா இக் குறளுக்கு இலக்கியமாயமைந்தது. அமைப்பாளர்களது மனம் இன்புறும் வகையில் நிகழ்ச்சிகள் நிறைவேறின. இதே போல் ஆலயத் திருப்பணியும் இனிது நிறைவேற வேண்டும் என்றும், சபையின் நற்பணியும் மேலோங்கி வளர வேண்டும் என்றும், இவற்றுக்கு முருகப் பெருமான் கருணை பொழிய வேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றேன்.

29-9-68. கு. குருசாமி

* *

வாழ்க நலம் எந்நாளும் வாணி அருளமுதம்
ஏழ்முகிலாய் பெய்க இனியதமிழ் — சூழ்புவியில்
நாளும் தழைக்கவன்பர் நற்பணிகள் மேலோங்க
வேளைத் துதித்துமகிழ் வோம்.

29-9-68. வ. சிவராசன்

* *

கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம் சைவத்திற்கும், தமிழுக்கும் ஆற்றும் பணி அளப்பரியது. இச் சங்கம் செய்யும் தொண்டை நேரில் அறிந்திராவிடினும், கேள்வி மூலம் அறிந்து பெருமிதம் உற்றேன். இன்று அத்தொண்டை நேரில் கண்டேன். ''பணிபுரி பலனை எதிர் பாராதே'' என்பதுதான் கீதையின் குறிக்கோள். அக்குறிக்கோளை மேன்மேலும் பெற தொடர்ந்து பணியாற்ற எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

30-9-68. க. பொன்னையா

* *

கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தார் வருடந்தோறும் நடாத்தும் ''நவராத்தி'' விழாவில் இவ்வருடம் நாமும் பங்கு பற்ற நேர்ந்தது. கஷ்டமான சூழ்நிலையிலிருந்தும், அவர்கள் தமிழுக்கும் சைவத்திற்கும் ஆற்றி வரும் பணிகள் மிகவும் மெச்சத்தக்கன. அத் தொண்டர்களின் முயற்சிகள் ஆல்போல் வளர்ந்து அறுகுபோல் வேரூன்ற அன்னை பராசக்தியின் கருணையுண்டாகுக!

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''.

7-10-68. பொ. நல்லையா

# எமது உளங்கனிந்த நன்றிக்கு உரியோர் !

- அன்பெனும் அழைப்பை ஏற்று வருகைதந்து எமது விழாக்களில் தலைமை தாங்கியும், அறிவுரை வழங்கியும் சிறப்பித்த பெருமக்கள்.
- ஆதரவும் அன்பும் காட்டி எமது கருமங்கள் முட்டின்றி முடிவுற உதவிய அறக்காவலர் சபையினர்.
- இன்முகத்துடன் குருபூசைகளையும் — விழாக்களையும் சிறப்புடன் கொண்டாடிய உபயகாரர்கள்.
- ஈழத்துச் செய்தி இதழ்கள்.
- உற்சாகத்துடன் விளம்பரங்கள் சேகரித்துத்தந்து உதவிய அன்பர்கள்.
- ஊக்கமும் உழைப்பும் நல்கி எமது சங்கவளர்ச்சிக்கு அரும்பாடு பட்டவர்கள்.
- எழிலுடன் "நால்வர் நெறி" இலங்கிட விளம்பரம் தந்துதவிய வணிகப் பெருமக்கள்.
- ஏற்றமுடன் "நால்வர் நெறி" மலர் மலர்ந்திட ஆசிகள், அறவுரைகள், அறிவுரைகள், கவிதைகள், கட்டுரைகள், வழங்கிய அறிஞர்கள்.
- ஐயம் திரிபற அறிவுபுகட்டும் "நால்வர் சமயபாடசாலை" ஆசிரியர்கள்.
- ஒப்பற்றமலராக "நால்வர் நெறியை" அச்சுவாகன மேற்றித் தந்துதவிய திரு. பொ. அழகேசன் அவர்கள்.
- ஓரணியராய் நின்று எம்பணிகளைச் செவ்விதாக்கிய தொண்டர்கள்.
- ஔவை காட்டிய வழியில் ஒழுகி — ஒழுக்க சீலர்களாகத்திகழும் எமது பாடசாலை மாணவர்கள்.

வணக்கம்

**க. பாலசுப்பிரமணியம்**
(கௌரவ பொதுநிர்வாகச் செயலாளர்)
11—12—68.

சங்கப் பணிமனை,
131, கியூ வீதி,
கொழும்பு-2.

"நாவலர் அவரே என்போம் நமது சைவாகமத்தின்
காவலர் அவரே என்போம் கனிதமிழ் அமுதம் ஊறும்
பாவலர் அவரே எங்கள் பைந்தமிழ் உலகை யாளும்
கோவலர் அவரே என்று கும்பிட்டு நிற்போம் யாமே"

*With Best Compliments*

*from*

THE MEIHANDAN PRESS LTD.,

161, SEA STREET,
COLOMBO - 11.

T. Phone: 29345

நங்கையர் விரும்பும் பவுண் தங்க நகைகளுக்கு

நம்பிக்கையும் நாணயமும் மிகுந்த

பிரசித்தி பெற்ற ஸ்தாபனம்

நியூ சிலோன் ஜூவெல்லர்ஸ்

87, செட்டியார் தெரு,
கொழும்பு – 11.

NEW CEYLON JEWELLERS

87, SEA STREET,
COLOMBO - 11.

"தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வவடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாந்தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே!"

**CHEAPEST HOUSE FOR QUALITY TEXTILES**

IN

LATEST DESIGNS AND ALSO FOR MANIPURI SAREES

# RATNAM'S

IMPORTERS, WHOLESALE & RETAIL DEALERS IN TEXTILES

146, 2nd CROSS STREET, COLOMBO-11

"பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்"

*With Best Compliments*

*from*

## N. RAMANATHAN

**KEGALLE**

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்"

WITH THE BEST COMPLIMENTS

OF

## Neelambikas

456, DEANS ROAD,

COLOMBO-10

*With Best Compliments*

*from*

# SARASAVI PRINTERS

MALAY STREET,

COLOMBO-2.



''அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறு கண்டின்புற
இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே''

**வருக! அனைவரும் வருக!!**

**அறுசுவை உணவை சுவைத்திட வருக!!!**

சுவையான உணவு சுகாதார முறைப்படி
தயாரிப்பவர்கள்

# ராதா லாட்ஜ்

116, கியூ வீதி, கொழும்பு-2.

கிளை: 342, பேஸ்லைன் ரோட், தெமட்டக்கொடை.

அசல் பவுண் தங்க வைர நகைகளுக்கு

புகழ் பெற்ற ஸ்தாபனம்

அன்னலெட்சிமி கோல்ட் ஹவுஸ்

ஆடர் நகைகள் குறித்த தவணையில் மிக அழகாகவும்

உத்தரவாதத்துடனும் செய்து கொடுக்கப்படும்

ANNALACKSHMI GOLD HOUSE

(PAWN BROKER'S & JEWELLER'S)

137, SEA STREET,

COLOMBO-11.

A HOUSEWIFE'S CHOICE

# BARNETT & FOSTER'S

FLAVOURING ESSENCES & FOOD COLOURS

## KNOWN THE WORLD OVER AND USED IN EVERY HOME

# "RED CLUB"

**BRAND FOOD ESSENCES AND FOOD COLOURS**

and **"NUCOL"** Essences in

**1 oz and 1 lb BOTTLES**

(RED CLUB NUCOL ESSENCES CONTAIN BOTH FLAVOUR & COLOUR)

*DISTRIBUTORS :-*

# THE COLOMBO ESSENCES & GAS SUPPLIERS

143, Justice Akbar Mawatha - Colombo-2.

(Formerly 39, RIFLE STREET - COLOMBO - 2

T.Phone: 25667, 28201 Grams: "FRUIT"

Printed at the Colombo Co-operative Printers' Society Ltd., 72 Kew Road, Colombo-2